பாருங்கள். அதைக் கொண்டு (அல்லாஹ்) உங்களுக்கு உபதேசம் செய்கிறான். எனவே, அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். இன்னும், நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களையும் மிகவும் அறிந்தவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தாபிதுப்னு யஸார் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமது மனைவியை விவாக ரத்துச் செய்துவிட்டார். அவரது மனைவி இத்தாவின் கடைசி தவணையை நெருங்கியபோது, அவர் தமது மனைவியை மறுபடியும் மீட்டிக் கொண்டு இரண்டாம் முறையாக விவாக ரத்துச் செய்தார். எவ்விதத்திலும் தமது மனைவிக்குக் கஷ்டமுண்டாக்க வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தது. இதனைக் கண்டித்து இறைவன் இவ்வசனத்தை அருளினான்.

نِعۡمَتَ اللّٰهِ **நிஃமத்துல்லாஹி** அதாவது அல்லாஹ்வின் அருட்கொடை என்பது இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் மேன்மையடையத் தக்கவாறு இறைவன் நேர்வழி காட்டி இஸ்லாத்தில் சேரும்படி செய்ததாகும். மேலும் ஆடவர்களாகச் சிருஷ்டித்தது, ஆடவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கென்று அவர்களுக்கென அவன் மனைவியரை ஏற்படுத்தியது, திருமணம், விவாக ரத்து, விவாக ரத்தை விட்டு மறுபடியும் மனைவியைத் திருப்பிக் கொள்ளுதல் முதலியவைகள் என்பதாகவும் சொல்லப்படுகிறது.

وَاِذَا طَلَّقۡتُمُ النِّسَآءَ فَبَلَغۡنَ اَجَلَهُنَّ فَلَا
تَعۡضُلُوۡهُنَّ اَنۡ يَّنۡكِحۡنَ اَزۡوَاجَهُنَّ اِذَا تَرَاضَوۡا
بَيۡنَهُمۡ بِالۡمَعۡرُوۡفِ ؕ ذٰلِكَ يُوۡعَظُ بِهٖ مَنۡ كَانَ
مِنۡكُمۡ يُؤۡمِنُ بِاللّٰهِ وَالۡيَوۡمِ الۡاٰخِرِ ؕ ذٰلِكُمۡ اَزۡكٰى
لَـكُمۡ وَاَطۡهَرُ ؕ وَاللّٰهُ يَعۡلَمُ وَاَنۡتُمۡ لَا تَعۡلَمُوۡنَ ۝

232. இன்னும், நீங்கள் (உங்கள்) மனைவியரை (மீட்டுக் கொள்ளக்கூடிய) விவாக ரத்துச் செய்து அவர்களும் தங்கள் (இத்தா) தவணையை அடைந்து (அதாவது அத்தவணையைப் பூர்த்தி செய்து திருமண பந்தத்திலிருந்து விடுபட்டு) விட்டால் பின்னர் (மீட்டுக் கொள்ளக் கூடிய விவாகரத்துச் செய்த முந்தைய) தம் கணவன் மார்களை அவர்கள் தமக்கிடையே நல்லமுறையில் திருப்தி கொண்டால் (மீண்டும்) அவர்கள் மணமுடித்துக் கொள்வதை (பெண்களின் காரியஸ்தர்களான) நீங்கள் தடுக்க வேண்டாம். (உங்களுக்குக் கூறப்பட்டுள்ள சட்டவிதியான) இது உங்களில் எவர் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசிக்கின்றாரோ அவருக்கு இதன்மூலம் உபதேசிக்கப்படுகிறது. (மேலும், பழைய கணவனையே மணந்துகொள்கிற) இதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாகவும் மிகப் பரிசுத்தமானதாகவும் இருக்கிறது. மேலும், (இதிலுள்ள நன்மையை) அல்லாஹ் அறிவான். ஆனால், நீங்களோ அறியமாட்டீர்கள்.

بَلَغۡنَ اَجَلَهُنَّ பலஃன **அஜலஹுன்ன** என்பதற்கு **அவர்களும் தங்களது (இத்தா) தவணையை அடைந்து விட்டால்** என்று இந்த இடத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், இதற்குப் பிறகு கூறப்பட்டுள்ள விஷயம் விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண்கள் திருமணம் செய்து கொள்வதைப் பற்றியதாகும். இத்தாவின் தவணை முடியாமல் திருமணம் செய்து கொள்வதற்கில்லை ஆதலின், இந்த இடத்தில் மேற்கண்டவாறு மொழிபெயர்ப்புச் செய்வதுதான் மிகவும் பொருத்தமானது. இதற்கு முந்திய ஆயத்தில் இதே பதங்களுக்கு இதே அர்த்தம் செய்யாமல் **அவர்களும் தங்களது (இத்தாவின்) தவணையை (முடிக்கும் காலத்தை) அடைந்து விட்டால்** என்பதாக மொழி பெயர்த்திருப்பது அதற்கப்புறம் சொல்லப்பட்டுள்ள விஷயத்தைக் கவனித்தேயாகும். ஏனெனில் ரஜஇய்யத்தான ஒரு தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்கு இத்தா தவணை முடிந்துவிட்டால், அவளது கணவன் அவளை திருமணமில்லாமல் திரும்ப அழைத்துக் கொள்ள முடியாது.

وَالۡوَالِدٰتُ يُرۡضِعۡنَ اَوۡلَادَهُنَّ حَوۡلَيۡنِ كَامِلَيۡنِ

لِمَنْ أَرَادَ أَنْ يُتِمَّ الرَّضَاعَةَ ۚ وَعَلَى الْمَوْلُودِ لَهُ رِزْقُهُنَّ
وَكِسْوَتُهُنَّ بِالْمَعْرُوفِ ۚ لَا تُكَلَّفُ نَفْسٌ إِلَّا وُسْعَهَا ۚ
لَا تُضَارَّ وَالِدَةٌ بِوَلَدِهَا وَلَا مَوْلُودٌ لَهُ بِوَلَدِهِ ۚ وَعَلَى
الْوَارِثِ مِثْلُ ذَٰلِكَ ۗ فَإِنْ أَرَادَا فِصَالًا عَنْ تَرَاضٍ
مِنْهُمَا وَتَشَاوُرٍ فَلَا جُنَاحَ عَلَيْهِمَا ۗ وَإِنْ أَرَدْتُمْ أَنْ
تَسْتَرْضِعُوا أَوْلَادَكُمْ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ إِذَا سَلَّمْتُمْ
مَا آتَيْتُمْ بِالْمَعْرُوفِ ۗ وَاتَّقُوا اللَّهَ وَاعْلَمُوا أَنَّ
اللَّهَ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ

233. இன்னும், தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதைப் பூர்த்தியாக்க வேண்டுமென்று விரும்புவோருக்குத் தாய்மார்கள் (அவர்கள் விவாகரத்துச் செய்யப்பட்டவர்களாக இருந்தாலும்) இரண்டு வருடம் பூர்த்தியாகப்பால் கொடுக்க வேண்டும். ஆனால், அவர்களுக்கு முறைப்படி உணவளிப்பது தந்தைக்குக் கடமையாகும்; எந்த ஆத்மாவும் அதன் சக்திக்கு மேல் சிரமம் கொடுக்கப்படமாட்டாது; ஒருதாய் தன் குழந்தையின் காரணமாக கஷ்டப்படுத்தப்படமாட்டாள்; மேலும், தந்தையும் தன் குழந்தையின் காரணத்தால் கஷ்டப் (படுத்தப்) படமாட்டான். இன்னும், (தந்தைக்குப் பிறகு) வாரிசுகளின் மீது இதுபோன்ற (கடமை) ஏற்படுகிறது. ஆகவே, (பெற்றோர்களாகிய) அவ்விருவரும் திருப்தி கொண்டு, கலந்தாலோசிப்பதன் மூலம், பால் குடி மறக்கச் செய்ய நாடினால் அவ்விருவர் மீதும் எவ்விதக் குற்றமுமில்லை. மேலும், உங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க (பாலூட்டுபவளை)த் தேட

விரும்புவீர்களாயின் நீங்கள் (அவர்களுக்குக் கூலி) கொடுப்பதாக இருப்பதை நீங்கள் முறைப்படி ஒப்படைத்தால் உங்கள் மீது குற்றமில்லை; மேலும், அல்லாஹ்வை அஞ்சுங்கள்; இன்னும், நீங்கள் செய்வதை அல்லாஹ் (மிகவும்) பார்த்துக் கொண்டிருப்பவன் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

அல்வாலிதாத் என்பதாகப் பொதுவாகக் கூறப்பட்டிருப்பதால் இந்தப் பதம் குழந்தையைப் பெற்ற தாய்மார்கள் அக்குழந்தையின் தந்தையிடமிருந்து விவாக ரத்துப் பெற்றிருந்தாலும் சரி அல்லது விவாக ரத்துப் பெறாமலிருந்தாலும் சரி எல்லாத் தாய்மார்களையும் பொதுவாக குறிப்பிடுகிறது.

அவ்லாத் என்ற பதம் **வலத்** என்பதன் பன்மைச் சொல்லாகும். இது ஆண் குழந்தை பெண் குழந்தை என்ற வித்தியாசமில்லாமல் இரண்டையும் குறிக்கும்.

குழந்தைகளுக்குப் பாலூட்ட வேண்டிய காலம் எவ்வளவு என்பதில் இமாம்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறது. இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முப்பது மாதம்வரை பால் கொடுக்கும் காலமிருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். ஆனால், இமாம் அபூயூஸுஃப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகிய இருவரும் இரண்டு வருடம் என்பதாகக் கூறி இந்த ஆயத்தை ஆதாரமாகக் கூறி இருக்கிறார்கள். இதற்கு மேல் பால்கொடுப்பது கூடாது என்பதாகவும் இவ்விரு இமாம்களும் கூறி இருக்கிறார்கள். ஆனால், பால் கொடுப்பதற்காகத் தந்தையிடம் கூலி வாங்குவதற்கு ஏற்பட்டுள்ள காலம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறதே தவிர, பால் கொடுப்பதைப் பற்றியல்ல. அப்படி, இரண்டு வருடத்திற்குப் பிறகு பால் கொடுப்பது கூடாது என்றிருக்குமாயின் **அவ்விருவரும் திருப்தி கொண்டு கலந்தாலோசிப்பதன் மூலம் பால் குடியை மறக்கச் செய்ய நாடினால்** என்று கூறிய வாக்கியத்தினால் எவ்விதப் பிரயோஜனமுமில்லை என்று இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பதில் கூறி இருக்கிறார்கள். ஆகவே, பால் குடியினால் விவாக சம்மந்தத்தில்

விலக்கு ஏற்படுத்தும் காலம் முப்பது மாதங்கள் என்பதும், அதற்கப்புறம் பால் குடித்தால் அதனால் விவாக சம்மந்தத்தில் விலக்கு ஏற்படாது என்பதும் ஹளரத் இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களது கருத்தாகும். ஆனால் இமாம் அபூ யூஸுஃப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி இமாம் முஹம்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகிய இருவரும் இரண்டு வருடத்திற்குள் பால் குடித்தால்தான் விவாக சம்மந்த விலக்கு ஏற்படுமென்றும், அதற்கப்புறம் பால் கொடுத்தால் அதனால் விவாக சம்மந்த விலக்கு ஏற்படாதென்றும் கூறி இருக்கிறார்கள். இவ்விருவருடைய கருத்துதான் ஷாஃபிஈ மதுஹபுக்கும் இருந்து வருகிறது.

குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் பால் கொடுப்பது சம்மந்தமான சில விதிகள் இங்கு சொல்லப்பட்டிருப்பதுடன், பால் கொடுப்பதற்காகக் கூலிக்கு அமுதூட்டும் அன்னையர்களை நியமிப்பது சம்மந்தமாகவும் இங்கு கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து குழந்தைகளுக்கு அமுதூட்டும் விஷயத்தை கவனிக்கும் பொறுப்பு தந்தையின் மீதுதான் இருக்கிறது என்பதும், தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்குப் பால் கொடுக்க மாட்டோம் என்று கூறுவதற்கு உரிமை இருக்கிறது என்பதும் விளங்குகிறது. ஆனால், கூலிக்குப் பாலூட்டச் சக்தியில்லாத போதும், தக்க பெண்கள் கிடைக்காத போதும் தாய் மார்கள் அமுதூட்ட மறுப்பது கூடாது. **மேலும், உங்கள் குழந்தைக்குப் பால் கொடுக்க (பாலூட்டுபவளைத்) தேட விரும்புவீர்களாயின் நீங்கள் (அவர்களுக்கு கூலி) கொடுப்பதாக இருப்பதை நீங்கள் முறைப்படி ஒப்படைத்தால்** என்று கூறி இருப்பதில் **முறைப்படை ஒப்படைத்தால்** என்ற வார்த்தைக்கு அந்தக் கூலி நியாயமான முறையில் சம்பாதிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது கருத்து என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில், அமுதூட்டும் அன்னையர்கள் நியாயமான முறையில் கிடைத்த பொருளிலிருந்து புசிப்பார்களாயின் அதனால் உண்டாகும் பால் குழந்தைக்கு மிகவும் பிரயோஜனகரமானதாக இருக்கும் அதாவது அக்குழந்தையின் ஒழுக்கத்தில் குணபாடு செய்யும். இதனால்தான், குழந்தைகளுக்கு நல்ல குணமும் ஒழுக்கமும் பக்தியும் நிறைந்த பெண்கள் பால்

கொடுக்க வேண்டும என்றும் கெட்ட பெண்கள் பால் கொடுத்தால் என்றாவது ஒரு நாள் அதன் குணம் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُوْنَ اَزْوَاجًا
يَّتَرَبَّصْنَ بِاَنْفُسِهِنَّ اَرْبَعَةَ اَشْهُرٍ وَّعَشْرًا ۚ
فَاِذَا بَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيْمَا
فَعَلْنَ فِيْٓ اَنْفُسِهِنَّ بِالْمَعْرُوْفِ ۗ وَاللّٰهُ
بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرٌ ۝

234. இன்னும், உங்களிலிருந்து எவரேனும் மனைவியரை விட்டு விட்டு இறந்து விட்டால் அவர்கள் தங்களுக்காக நான்கு மாதங்களும் பத்து (நாட்களு)ம் (மறுமணம் செய்து கொள்ளாமல்) எதிர்பார்த்திருக்க வேண்டும். எனவே, அவர்கள் (மேற்கண்டபடி) தங்கள் (இத்தா) தவணையை அடைந்து விட்டால் அவர்கள் தங்கள் விஷயத்தில் மார்க்க நியாயமான முறைப்படி (அலங்காரம் எதுவும்) செய்து கொள்வதைப் பற்றி அவர்கள் மீது எவ்விதக் குற்றமுமில்லை. மேலும், நீங்கள் செய்வதை அல்லாஹ் தெரிந்து கொள்பவன்.

கணவனை இழந்து விதவையாகி விட்ட பெண்கள் நான்கு மாதமும் பத்து நாளும் இத்தா இருக்க வேண்டும். இதற்குப் பிறகுதான் அவர்கள் வேறு ஆடவர்களை திருமணம் செய்து கொள்ளலாம். நான்கு மாதம் பத்து நாள் தவணை ஏற்படுத்தியதற்குக் காரணம் கற்பத்தில் இருக்கும் சிசு ஆணாக இருக்கும் பட்சத்தில் மூன்று மாதத்திலே துடிக்க ஆரம்பித்து விடும். அது பெண்ணாக இருக்குமாயின் நான்கு மாதத்தில் துடிக்கும். ஆகவே, இவ்விரு காலங்களையும், கவனித்து நான்கு மாதங்கள் என்றும், பத்து நாட்களை அதிகமாக ஏற்படுத்தியது அக்காலத்தில் உண்டாகும் துடிப்பு மிகவும் இலேசாக இருக்கும்.

ஆதலால், கற்பக் கோளறையைப் பற்றி நன்றாக அறிந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றும் **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் விதவையாகி விட்ட பெண்களுக்கு இத்தா இருக்க வேண்டிய காலம் ஒரு வருடம் என்பதாக இருந்தது. அப்பால் இந்த ஆயத்து அருளப்பட்டபின் நான்கு மாதம் பத்து நாட்களாக ஏற்பட்டது. இந்தத் தவணை கற்பமுள்ளவர்களைக் கட்டுப்படுத்தாது. ஏனெனில், அவர்கள் பிரசவிப்பதுதான் அவர்களுக்கு உரிய இத்தா தவணை என்பதாக சூரத்துத் தலாக் 4வது ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

وَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِيمَا عَرَّضْتُم بِهِ مِنْ خِطْبَةِ النِّسَاءِ
أَوْ أَكْنَنتُمْ فِي أَنفُسِكُمْ عَلِمَ اللَّهُ أَنَّكُمْ سَتَذْكُرُونَهُنَّ
وَلَٰكِن لَّا تُوَاعِدُوهُنَّ سِرًّا إِلَّا أَن تَقُولُوا قَوْلًا
مَّعْرُوفًا وَلَا تَعْزِمُوا عُقْدَةَ النِّكَاحِ حَتَّىٰ
يَبْلُغَ الْكِتَابُ أَجَلَهُ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ يَعْلَمُ مَا فِي
أَنفُسِكُمْ فَاحْذَرُوهُ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ غَفُورٌ حَلِيمٌ

235. மேலும், (கணவனை இழந்து 'இத்தா' விலிருந்து வருபவர்களை மணந்து கொள்வதற்கு) நீங்கள் பெண் பேசுவதை (அவர்களிடம்) மறைமுகமாகக் கூறுவதிலோ, அல்லது நீங்கள் உங்கள் மனதுக்குள் மறைத்து வைத்துக் கொள்வதிலோ உங்கள் மீது எவ்விதக் குற்றமுமில்லை. நிச்சயமாக நீங்கள், (உங்கள் மனதுக்குள்ளிருப்பதை) விரைவில் கூறுவீர்களென்பதை அல்லாஹ் அறிந்திருக்கிறான், ஆதலால் (திருமணம் பற்றி) கண்ணியமான சொல்லை நீங்கள் சொல்வதைத் தவிர இரகசியமாக அவர்களுக்கு

நீங்கள் (எதுவும்) வாக்குறுதி அளிக்காதீர்கள். (இத்தா இருக்க வேண்டிய காலம் இன்னது என்று) விதிக்கப்பட்டது தன்னுடைய தவணையை அடையும் வரை அவர்களை நீங்கள் திருமணஞ் செய்வதற்குரிய நடவடிக்கையை உறுதி செய்து விடாதீர்கள். மேலும், நிச்சயமாக அல்லாஹ் உங்கள் உள்ளங்களில் இருப்பதை அறிவான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்; எனவே, அவனையே அஞ்சுங்கள்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன், சாந்தமுடையவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஒரு பெண் தனது கணவனை இழந்து விதவையானால் அவள் அழகுள்ளவளாக இருக்கலாம் அல்லது பணம் உள்ளவளாக இருக்கலாம் அல்லது அவளிடம் விரும்பத்தக்க அம்சம் வேறு ஏதேனும் இருக்கலாம். இவற்றில் எதையேனும் உத்தேசித்து ஆடவர்கள் அந்த பெண்ணை மணந்து கொள்ள விரும்பக்கூடும். ஆதலின் ஒரு பெண் விதவையாகி இத்தாவிலிருக்கும் போது அவளை மணந்து கொள்ள வேண்டும் என்று இதர ஆடவர்கள் எண்ணுவதும், அந்த எண்ணத்தை சமிக்ஞையாக வெளியிடுவதும் குற்றமில்லை. ஆனால், பகிரங்கமாக அவ்விருப்பத்தை வெளியிடுவதும், இரகசியமாக வாக்குறுதியளிப்பதும் கூடாது. இதுபோலவே இத்தாவில் இருக்கும் விதவைகளை திருமணம் செய்து கொள்வதும் கூடாது.

لَّا جُنَاحَ عَلَيْكُمْ إِن طَلَّقْتُمُ النِّسَاءَ مَا لَمْ تَمَسُّوهُنَّ
أَوْ تَفْرِضُوا لَهُنَّ فَرِيضَةً وَمَتِّعُوهُنَّ عَلَى
الْمُوسِعِ قَدَرُهُ وَعَلَى الْمُقْتِرِ قَدَرُهُ مَتَاعًا بِالْمَعْرُوفِ
حَقًّا عَلَى الْمُحْسِنِينَ

236. நீங்கள் (உங்கள்) பெண்களைத் தீண்டாமலிருக்கும் போது அல்லது, நீங்கள் அவர்களுக்கு மஹர் (தொகை) நிர்ணயிக்காமலிருக்கும் போது அவர்களை விவாக ரத்துச் செய்து

விட்டால், அது உங்கள் மீது குற்றமில்லை. ஆனால், அவர்களுக்குக் கிரமப்படி ஜீவனாம்சம் கொடுத்து விடுங்கள். (இது) வசதியுள்ளவனின் மீது அவனுக்குத் தகுந்த அளவும் (இன்னும்) ஏழையின் மீது அவனுக்குத் தகுந்த அளவும் இருக்கிறது. (இது) நல்லவர்கள் மீது கடமையாகும்.

விவாக ரத்துச் செய்யப்படுபவர்கள் அடியிற்கண்ட நான்கு வகையினரில் ஒருவராக இருப்பர்.

1. கணவனுடன் கூடிக்கலக்காதவளாகவும், மஹர்த்தொகை இத்தனை என்று நிர்ணயிக்கப்படாதவளாகவும் இருப்பாள்.

2. கணவனுடன் கூடிக்கலந்தவளாகவும், மஹர் தொகை இத்தனை என்று நிர்ணயிக்கப்பட்டவளாகவும் இருப்பாள்.

3. கணவனுடன் கூடிக்கலந்தவளாகவும் மஹர்த்தொகை இத்தனை என்று நிர்ணயிக்கப்படாதவளாகவும் இருப்பாள்.

4. கணவனுடன் கூலி கலக்காதவளாகவும் மஹர்த்தொகை இத்தனை என்று நிர்ணயிக்கப்பட்டவளாகவும் இருப்பாள்.

இந்நான்கு வகையினரில் முதலாவது வகை அதாவது திருமணத்திற்குப் பிறகு கணவனுடன் கூடிக் கலப்பதற்கு முன்னரே விவாக ரத்துப் பெற்றவளாகவும் மஹர்த்தொகை இத்தனை என்று நிர்ணயிக்கப்படாதவளாகவும் இருக்கிற பெண்ணுக்குத்தான் விவாக ரத்துச் சொன்ன அவளது கணவன் முத்ஆக் கொடுக்க வேண்டும். (சூரத்துல் அஹ்ஜாப் 49 ஆயத்து பார்க்க) பாக்கியுள்ள மூவகையினருக்கும் முத்ஆக் கொடுக்கக் கூடாது. அவர்களுக்கு மஹர்த் தொகை கொடுக்க வேண்டும். (சூரத்துன்னிஸா 4வது ஆயத்து பார்க்க).

முத்ஆ எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பது விவாக ரத்துச சொன்ன கணவனின் பொருளாதார நிலைக்குத் தக்கவாறாக இருக்கிறது. விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண்ணின் பொருளாதார நிலைமையைக் கவனிக்க வேண்டியதில்லை.

وَإِنْ طَلَّقْتُمُوهُنَّ مِنْ قَبْلِ أَنْ تَمَسُّوهُنَّ وَقَدْ
فَرَضْتُمْ لَهُنَّ فَرِيضَةً فَنِصْفُ مَا فَرَضْتُمْ إِلَّا أَنْ
يَعْفُونَ أَوْ يَعْفُوَا الَّذِي بِيَدِهِ عُقْدَةُ النِّكَاحِ ۚ
وَأَنْ تَعْفُوا أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۚ وَلَا تَنْسَوُا الْفَضْلَ
بَيْنَكُمْ ۚ إِنَّ اللَّهَ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ ۝

237. ஆனால், நீங்கள் அவர்களுக்கு மஹரை நிர்ணயித்திருக்கும் நிலையில் நீங்கள் அவர்களைத் தீண்டுவதற்குமுன் அவர்களை விவாக ரத்துச் செய்து விட்டால், அந்தப் பெண்கள் (மகர் வாங்காமல்) மன்னித்து விட்டாலன்றி அல்லது விவாக உரிமை எவர் கையிலிருக்கிறதோ அவரேனும், மன்னித்து முழுத் தொகையையுங் கொடுத்தாலன்றி நீங்கள் ஏற்படுத்தியதில் பாதி(யைக் கொடுக்க வேண்டியது) இருக்கிறது. ஆனால், நீங்கள் மன்னித்து (மஹர் தொகை முழுவதையும் கொடுத்து) விடுவதுதான் (அல்லாஹ்வின் மீதுள்ள) பயபக்திக்கு மிக்க அண்மையிலுள்ளது. இன்னும், நீங்கள் உங்களுக்கிடையில் ஈகையை மறந்து விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை மிகவும் பார்ப்பவன்.

மேலே கூறப்பட்ட நான்கு வகை பெண்களில் இது மற்றொரு வகை பெண்ணுக்குள்ள பாத்தியதையைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. அதாவது திருமணம் செய்த பின் அவளைக் கணவன் தீண்டுவதற்கு முன்னதாகவே அவன் விவாக ரத்துச் செய்து விடுகிறான். ஆனால், அவளுக்கு எத்தனை ரூபாய் மஹர் என்பதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட பெண்ணுக்கு நிர்ணயிக்கப் பட்ட மஹர்த் தொகையில் பாதி கொடுக்க வேண்டும். ஆனால், கணவன் மனைவி ஆகிய இருவரில் ஒருவர் இறந்து போனால் மஹர்த் தொகை முழுவதையும் கொடுக்க வேண்டும். மேலும், விவாக ரத்துச்

செய்யப்பட்ட அப்பெண் தனக்குக் கிடைக்க வேண்டிய பாதி மஹர்த் தொகையை மன்னித்து விட்டு விடலாம், அல்லது விவாக ரத்துச் சொன்ன அவளது கணவன் அவளுக்கு இரங்கி மஹர்த் தொகை முழுவதையும் கொடுத்து விடவும் செய்யலாம். ஆனால், சட்டப்படி பாதி மஹரை அந்த பெண் கேட்பதை அல்லது பாதி மஹரை மட்டும் அந்த ஆடவன் கொடுப்பதைப் பார்க்கினும் இருவரும் தாராளமாக மன்னித்து விடுவதும் அதாவது அந்த பெண் தனக்குச் சேர வேண்டிய பாதி மஹரைக் கேட்காமல் விட்டு விடுவது அல்லது மஹர்த் தொகை முழுவதும் அந்த ஆடவன் கொடுத்து விடுவது தக்வாவுக்கு மிகவும் நெருங்கியதாக இருக்கிறது.

إِنَّ اللّٰهَ بِمَا تَعْمَلُوْنَ بَصِيْرٌ **நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை மிகவும் பார்ப்பவன்** என்று கூறி இருப்பதில் மற்றைய மனிதர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதுபோல் இரண்டு கண்களாலும் அல்லாஹு தஆலா பார்க்கிறான் என்பது கருத்தல்ல. மனிதர் செய்யும் ஒவ்வொரு காரியத்திலுமுள்ள சகல உட்கருத்து களையும் இரகசியங்களையும் அல்லாஹு தஆலா பரிபூரணமாகத் தெரிந்து கொள்கிறான் என்பதும், அக்காரியத்தின் தன்மைகள் அவனுக்கு வெளியாகி விடுகின்றன என்பதும் கருத்தாகும்.

حٰفِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى وَقُوْمُوْا
لِلّٰهِ قٰنِتِيْنَ ۝

238. (ஐந்து நேரத்துத்) தொழுகைகளையும், இன்னும் நடுத்தொழுகையையும் பேணு(தலாக நிறைவேற்று)ங்கள். இன்னும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தவர்களாகி நில்லுங்கள்.

இந்த ஆயத்தில் தொழுகைகளைப் பற்றிப் பொதுவாகவும், நடுத்தொழுகையைப் பற்றிக் குறிப்பாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. நடுத் தொழுகை என்பதற்கு அஸருடைய நேரத்துத் தொழுகை என்பது கருத்தாகும்.

அகழி யுத்தம் நடந்தபோது இஸ்லாத்தின் விரோதிகள் மதீனமா நகரை வந்து முற்றுகையிட்டுக் கொண்டிருந்தனர். ஸஹாபிகள் அகழிக்குள் மதீனா நகரின் பக்கமாக இருந்து எதிரிகள் அகழியைக் கடந்து முன்னேறி வர விடாமற்றடுத்துக் கொண்டிருந்தனர். ஒருநாள் பகைவர்கள் மிகவும் மூர்க்கமாக முன்னேறினர். அப்போது முஸ்லிம்களும் அவர்களை எதிர்த்து வீரதீரமாகத் தடுத்தனர். அன்றயை தினம் அஸருடைய தொழுகையை உரியகாலத்தில் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது. இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “நடுத்தொழுகை யாகிய அஸர்த் தொழுகையை விட்டு நம்மை அவர்கள் அலுவலில் ஈடுபடுத்தி விட்டனர்” என்பதாகக் கூறி இருக்கிறார்கள். எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய இந்த ஹதீஸிலிருந்து நடுத்தொழுகை என்பது அஸருடைய நேரத்து அதாவது அந்திப் பொழுதுத் தொழுகை என்பதாகத் தெரியவருகிறது.

அந்திப் பொழுது பகல் வேளையில் கடைசி காலமாக இருக்கிறது. ஆதலின், ஜனங்கள் சூரியன் மறைவதற்குள் தங்களது அலுவல்களை முடித்துக் கொள்வதற்காக மிகச் சுறுசுறுப்பாகவும் கவனமாகவும் தங்கள் காரியங்களில் ஈடுபடுவர். வியாபாரம் அதிகமாக நடைபெறக் கூடிய நேரம், பகல் பொழுதில் உலகத்தைப் பாதுகாக்கும் மலக்குகளும், இரவில் உலகைப் பாதுகாக்கும் மலக்குகளும் ஒன்று கூடும் நேரம். ஆதலின், அந்த நேரத்தில் உலக அலுவல்களில் ஈடுபட்டுத் தொழுகையை மறந்து விடலாகாது என்பதற்காக இந்த நேரத்தை மட்டும் குறிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

قٰنِتِيْنَ **கானித்தீன்** என்பதற்கு திக்ரு செய்தவர்களாக அதாவது ஞாபகம் செய்தவர்களாக அல்லது உள்ளச்சமுள்ளவர்களாக என்பது பொருள்.

فَاِنْ خِفْتُمْ فَرِجَالًا اَوْ رُكْبَانًا ۚ فَاِذَآ اَمِنْتُمْ
فَاذْكُرُوا اللّٰهَ كَمَا عَلَّمَكُمْ مَّا لَمْ تَكُوْنُوْا تَعْلَمُوْنَ ۝

239. ஆனால், (விரோதிகளையோ மற்றதையோ) நீங்கள் அஞ்சினால் நடந்தவர்களாக அல்லது வாகனத்தின் மீது அமர்ந்தவர்களாகத் (தொழுகையை நிறைவேற்றுங்கள்) எனவே, நீங்கள் பயம் நீங்கியவர்களாகி விட்டால், நீங்கள் அறியாமலிருந்ததை அவன் உங்களுக்கு கற்றுக் கொடுத்ததுபோல் நீங்கள் அல்லாஹ்வை நினையுங்கள்.

தொழுகையை அந்தந்த நேரத்தில் தவறாமல் நிறைவேற்ற வேண்டும் என்ற விஷயம் இந்த ஆயத்திலிருந்து நன்கு தெரியவருகிறது. பகைவர்களாலோ மற்றவர்களாலோ ஏதேனும் பயம் ஏற்பட்டபோதிலும் அந்தப் பயத்திற்காகத் தொழுகையை தவறவிடக் கூடாததென்றும் நடந்து கொண்டேனும் அல்லது வாகனத்தின் மீது அமர்ந்து கொண்டேனும் தொழுக வேண்டும் என்று கூறி இருப்பதைக் கவனிக்க வேண்டும். ஆனால், ஹனஃபி மதுஹபில் நடந்து கொண்டும், குதிரை முதலிய மிருகங்களில் சென்று கொண்டிருக்கும் போதும் தொழுகையை நிறைவேற்றக் கூடாது. ஆனால், நின்ற வண்ணமாக அல்லது வாகனத்தில் அமர்ந்த வண்ணமாக அவற்றை நடக்கவிடாமல் நிறுத்திக் கொண்டு தொழவேண்டும். இப்படித் தொழும்போது ருக்கூஉ, சுஜூது ஆகியவைகள் செய்ய முடியாது. அவற்றை சமிக்ஞை செய்ய வேண்டும். கிப்லாவை முன்னோக்க முடியாவிடில் அப்படி முன்னோக்காமல் தொழுவது குற்றமில்லை.

அறிந்துகொள்:- தொழுகை ஓர் இறைவனை வணங்குபவர்களான முவஹ்ஹிதீன்களுக்கு விருந்தைப் போலிருக்கிறது. அல்லாஹு தஆலா தினசரி ஐந்து நேரங்களில் இவ்விருந்தை ஏற்படுத்தி இருக்கிறான். விருந்தில் பற்பலவிதமான உணவுகள் பரிமாறப்படுவதுபோல தொழுகையிலுள்ள ருக்னுகளும், வேறு பல செய்கைகளும் இருந்து வருகின்றன. இப்பதார்த்தங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான ருசி இருப்பதுபோல இந்த ருக்னுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான இன்பமும், பாவமன்னிப்பும் இருந்து கொண்டிருக்கிறது.

ரிவாயத்து:- கஅபுல் அஹ்பார் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறியதாகப் பின்வருமாறு ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

“நான்கு ரக்கஅத்துகளை அஹ்மதும், அவருடைய உம்மத்துகளும் தொழுவார்கள். அதுதான் ளுஹருடைய தொழுகை. அதில் முதலாவது ரக்கஅத்தில் அவர்களுக்கு நான் மகுபிரத்தென்னும் பிழை பொறுத்தலை அருளுவேன். இரண்டாவது ரக்கஅத்தில் அவர்களது நன்மைகளின் எடையைப் பளுவுள்ளதாக்குவேன்; மூன்றாவது ரக்கஅத்தில் அவர்களுக்காக நான் மலக்குகளை நியமிப்பேன். அவர்களுக்காக அம்மலக்குகள் தஸ்பீஹு செய்து பிழை பொறுக்கத் தேடுவார்கள். வானத்திலும் பூமியிலும் உள்ள மலக்குகளில் எவரும் அவர்களுக்குப் பிழை பொறுக்கும்படி பிரார்த்திக்காமலிருக்க மாட்டார்கள். எவருக்குப் பிழை பொறுக்க வேண்டும் என்று மலக்குகள் பிரார்த்திக்கின்றனரோ அவரை நான் ஒருபோதும் வேதனை செய்யமாட்டேன். நான்காவது ரக்கஅத்தில் வானத்தின் வாசல்களை அவர்களுக்காக நான் திறந்து விடுவேன். ஹூருல்ஈன் என்னும் சுவர்க்கத்துக் கன்னிகைகள் அவர்களைப் பார்ப்பார்கள். மூஸாவே! வேறு நான்கு ரக்கஅத்துகளை அஹ்மதும் அவருடைய உம்மத்துகளும் தொழுவார்கள். அதுதான் அஸர்த் தொழுகை. அந்தத் தொழுகைக்குப் பின் அவர்கள் என்னிடம் கேட்கும் பிரார்த்தனையை நான் நிறைவேற்றாமலிருப்பதில்லை. மூஸாவே! இன்னும் வேறு மூன்று ரக்கஅத்துகளை அஹ்மதும் அவருடைய உம்மத்துகளும் நிறைவேற்றுவார்கள். அதுதான் மக்ரிபுத் தொழுகை. அவர்களுக்காக நான் வானத்தின் தலைவாசல்களைத் திறந்து விடுவேன். மூஸாவே! இன்னும் நான்கு ரக்கஅத்துகளை அஹ்மதும் அவருடைய உம்மத்துகளும் நிறைவேற்றுவார்கள் அதுதான் இஷாத் தொழுகை. இந்த உலகத்தையும் இதிலுள்ள சகல பொருள்களையும் பார்க்கினும் அவர்களுக்கு இது மிகச் சிறந்ததாகும். இதனைத் தொழுபவர்கள் அன்று பிறந்த குழந்தைகளைப் போல் இவ்வுலகை விட்டு வெளியேறுவார்கள்” என்று அல்லாஹுத் தஆலா ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் முனாஜாத்துச் செய்த போது கூறினான்.

وَالَّذِيْنَ يُتَوَفَّوْنَ مِنْكُمْ وَيَذَرُوْنَ اَزْوَاجًا ۖ

وَصِيَّةً لِّأَزْوَاجِهِم مَّتَاعًا إِلَى الْحَوْلِ غَيْرَ إِخْرَاجٍ ۚ فَإِنْ خَرَجْنَ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ فِي مَا فَعَلْنَ فِي أَنفُسِهِنَّ مِن مَّعْرُوفٍ ۗ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ ۝

240. இன்னும், உங்களில் எவர்கள் மரணமடைந்து மனைவியரை (விதவைகளாக) விட்டுவிடுவார்களோ அவர்கள் தங்கள் மனைவியருக்கு ஒரு வருடம் வரை ஜீவனாம்சம் அளிப்பதற்கும், (வீட்டை விட்டு) வெளியேற்றாமலிருப்பதற்கும் வஸிய்யத்துச் செய்வதை (அவர்கள் மீது கடமையாக்கி இருக்கிறோம்). எனவே, (விதவையான) அவர்கள் (தாங்களாகவே) வெளியேறிக் கொண்டால், அவர்கள் சட்டப்படி தங்களுக்காகச் செய்து கொள்வதில் உங்கள்மீது எவ்விதக் குற்றமுமில்லை. மேலும், அல்லாஹ் (யாவற்றிலும்) மிகைத்தவன் விவேகமுள்ளவன்.

يُتَوَفَّوْنَ **யுத்தவஃப்பவ்ன** என்பதற்கு மரண மடைகிறவர்கள் என்பது பதவுரை. ஆயினும், மரணமடைகிறவர்கள் வஸிய்யத்துச் செய்யவோ அல்லது வேறு காரியம் செய்யவோ முடியாது. ஆதலால், இந்த இடத்தில் மரண மடைகிறவர்கள் என்பதற்கு மரணமடையும் தருவாயிலிருப்பவர்கள், மரண நோயால் பீடிக்கப்பட்டவர்கள், தங்கள் மனைவியரை வீட்டை விட்டு வெளியேற்றாமல் ஒருவருட காலம் வரை அவர்களுக்கு அன்ன வஸ்திரம் அளிக்க வேண்டும் என்று தங்களது வாரிசுதாரர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்பதும், அந்த ஒரு வருடம் பூர்த்தியாகுவதற்கு முன்பே அவர்கள் இறந்து போன தங்களது கணவர்களது வீட்டை விட்டுத் தாங்களாகவே வெளியேறி விட்டால் அதனைத் தடுக்கக் கூடாது என்பதும் இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ளது.

தாயிஃப் நகரில் ஹக்கீமுப்னுல் ஹாரித் ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்று ஒருவர் இருந்தார். அவர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி மதீனா முனவ்வராவுக்கு ஹிஜ்ரத்துச் செய்து வந்து குடியேறினார். ஆனால், அவருக்கு மக்களும், தாய் தந்தையும், மனைவியும் இருந்தனர். இவர்கள் அனைவரும் அவருடனேயே இருந்தனர். இந்நிலையில் இறந்து விட்டார். அப்பொழுது இறைவன் இந்த ஆயத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளினான். எனவே, இறந்து போன அந்த ஸஹாபிகள் சொத்துக்களை அவருடைய மக்களுக்கும் பெற்றோர் களுக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொடுத்து விட்டு, அவரது மனைவிக்கு ஒன்றும் கொடுக்காமல், அவருடைய சொத்திலிருந்து ஒரு வருடத்திற்கு அன்னவஸ்திர மளிக்க வேண்டும் என்று வாரிசுதாரர்களுக்குக் கட்டளை யிட்டார்கள். இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் விதவையாகி விட்ட பெண் ஒரு வருட காலம் வரை இத்தா இருக்க வேண்டும் என்ற நியதி இருந்தது. அவளது வீட்டை விட்டு ஒரு வருடத்திற்கு முன்னதாக அவளை வெளியேற்று வதற்கு வாரிசுதாரர்கள் மீது ஹராமாக இருந்தது. இன்னும் அவளது கணவனின் சொத்திலிருந்து அவளுக்கு ஒரு வருடம் வரை உணவும் உடையும் அளிக்க வேண்டும். அவளுக்குச் சொத்தில் வாரிசுரிமை இல்லை. ஆனால், அவள் தானாகவே அவ்வீட்டை விட்டு வெளியேறி விட்டால் அன்னவஸ்திரம் அடையும் உரிமை அவளுக்கும் இல்லாமற் போய்விடும். இவ்வாறு வஸியத்துச் செய்வதும் ஆடவர்கள் மீது கடமையாக இருந்தது. பின்னர் மனைவிமார்களுக்கும் சொத்தில் வாரிசுரிமையளிக்கப்பட்ட ஆயத்து அருளப்படவே மேலே சொன்ன இந்த விதிகள் மாற்றப்பட்டன.

وَلِلْمُطَلَّقَاتِ مَتَاعٌ بِالْمَعْرُوفِ ۖ حَقًّا عَلَى الْمُتَّقِينَ ۝

241. இன்னும், விவாக ரத்துச் செய்யப்பட்டவர்களுக்கு

(மார்க்கச்) சட்டப்படி ஜீவனாம்சம் (அளித்தல்) இருக்கிறது. (இது அல்லாஹ்வுக்குப்) பயபக்தியுள்ளவர்கள் மீது கடமையாகும்.

விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண்ணுக்கு அன்ன வஸ்திரமளித்து முத்ஆக் கொடுப்பதைப் பற்றி இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆயத்தில், விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண் தனது கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தவளா? அல்லவா? என்ற பாகுபாடில்லாமல் எல்லோருக்கும் பொதுவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, கணவனுடன் கலந்திருந்து வாழ்ந்தவளுக்கு முத்ஆக் கொடுப்பது முஸ்தஹப்பு என்பதும், அப்படி வாழாதவளுக்கு முத்ஆக் கொடுப்பது கடமை என்பதும் இந்த ஆயத்திலிருந்தும், இதற்கு முந்திய 236வது ஆயத்திலிருந்தும் தெரியவருகிறது. கணவனுடன் கலந்த பெண்ணுக்கும் முத்ஆக் கொடுப்பது பயபக்தியுள்ளவர்கள் மிகவும் அதிகமாகக் கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمْ آيَاتِهِ لَعَلَّكُمْ تَعْقِلُونَ

242. நீங்கள், உணரும் பொருட்டு இவ்விதமே அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரிக்கின்றான்.

தலாக்கு, இத்தா ஆகியவற்றைப் பற்றிய விதிவிலக்குகளைப் பற்றி இறைவன் கூறி இருப்பது போலவே இம்மை மறுமைப் பேற்றுக்கான இதர விபரங்களைப் பற்றியும் விபரித்துக் கூறுவான் என்பதைப் பற்றி இந்த ஆயத்தின் மூலமாக இறைவன் வாக்களித்திருக்கிறான் என்பதாக காலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்.

பெண் விவாக ரத்துச் செய்யப்படுவதன் மூலம் அவளது கணவனால் பலவந்தமாகப் பிரித்து வைக்கப்பட்டாலும், அவளுக்கு அன்னவஸ்திரம் முதலிய முத்ஆக் கொடுப்பதன் மூலமாக அவளது மனைவியின் கவலையை அகற்றப்படுவது பரமார்த்திகத் துரையில்

செல்லும் நல்லடியார்கள் தங்களுடைய உறவினர்களையும், உலக செல்வத்தையும் பெருமையையும் குடியிருந்த வீடுவாசல்களையும் விட்டுப் பிரிந்து, அல்லாஹுத்தஆலாவினது சொந்த அடியார்களான வலிமார்களிடம் இருக்க வேண்டியது ஏற்படுவதால் அவர்களது இக்கவலைக்கு பதிலாகத் தக்க பிரதியை அளிப்பான் என்பது இதிலிருந்து சமிக்ஞையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதாக **தாவீலாத்துன்னஜ்மிய்யா** என்ற கிரந்தத்தில் கூறப்பட்டிருக்கிறது ஆகவே, அறிவுடையோர் இந்த உலகத்தையும் இதிலுள்ள பொருள்களையும் இலட்சியம் செய்ய மாட்டார்கள். ஆனால், இதிலுள்ள பிரயோஜனங்களின் மூலமாக அல்லாஹுத் தஆலாவை அடையும்வரை பரமார்த்திக வழியில் உண்டாகக் கூடிய கஷ்டங்களை உணர்ந்து கொள்வர்.

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ خَرَجُوا مِن دِيَارِهِمْ وَهُمْ
أُلُوفٌ حَذَرَ الْمَوْتِ فَقَالَ لَهُمُ اللَّهُ مُوتُوا
ثُمَّ أَحْيَاهُمْ ۚ إِنَّ اللَّهَ لَذُو فَضْلٍ عَلَى النَّاسِ
وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَشْكُرُونَ

243. (ஊரில் வைசூரி நோய் பரவுவதைக் கண்ட இஸ்ராயீலின் சந்ததியினர்) மரணத்திற்குப் பயந்து தங்களின் இல்லங்களை விட்டு ஆயிரக்கணக்காக வெளியேறியவர்க(ளின் நிலைமைக)ளை நீங்கள் பார்க்கவில்லையா? ஆகவே, (எங்கு ஓடி ஒளிந்து கொண்டாலும் மரணம் விடாதென்பதைக் காண்பிப்பதற்காக) "நீங்கள் மரணித்து விடுங்கள்" என்று அல்லாஹ் அவர்களுக்குச் சொன்னான் (அவர்கள் யாவரும் மரணமடைந்தனர்). பின்னர் இவர்களை உயிர்ப்பித்தான். நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது கருணையுள்ளவன். ஆயினும், மனிதரில் பெரும்பாலர் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகிறார்களில்லை.

இந்த ஆயத்து முற்காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அச்சம்பவம் வருமாறு.

வாஸித்தைச் சேர்ந்த தாவர்தான் எனும் கிராமத்தில் அம்மை நோய் உண்டாயிற்று - வாந்திபேதி என்பதாகவும் சிலர் கூறுவர். அங்குள்ளவர்களில் செல்வந்தர்களாகவும், பிரபலஸ்தர்களாகவும் இருந்தவர்கள் அவ்வூரை விட்டுச் சென்றனர். அங்கு தங்கி இருந்தவர்களில் பலர் அந்நோயால் பீடிக்கப் பட்டு இறந்தனர். அங்கு நோய் விலகிய பின் ஊரை விட்டுச் சென்றவர்கள் நலமுடன் திரும்பி வந்தனர். இதனைக் கண்ட அவர்கள் ஊரை விட்டுச் சென்றதால்தான் அவர்கள் நலமுடன் இருந்தனர். இனியொரு முறை இந்நோய் நமதூருக்கு மீண்டும் வருமாயின் நாமும் அவர்களைப்போல் ஊரைவிட்டு வெளியேறி விடவேண்டுமென்று முடிவு செய்திருந்தனர். அடுத்த வருடத்தில் மறுபடியும் அவ்வூரில் அந்த நோய் பரவிற்று. அவர்கள் அனைவரும் அவ்வூரை விட்டு வெளியேறினர். அப்பொழுது அல்லாஹுத்தஆலாவின் கட்டளைப்படி அவர்களுக்கு மேல்புறம் ஒரு மலக்கும், கீழ்புறம் ஒரு மலக்கும் வந்திருந்து கொண்டு "நீங்கள் மரணித்து விடுங்கள்" என்று கூறினர். அவர்கள் அனைவரும் மரணித்தனர். அவர்களது கால்நடைகளும் கூட மரணித்துப்போயின. பின்னர் சின்னாட்கள் சென்று ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது மூன்றாவது கலீஃபாவான ஹளரத் ஹிஜ்கீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அங்கு வந்து பார்த்து ஆச்சரிய முற்று நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது இறைவன் ஹிஜ்கீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வஹியின் மூலம் "நீர் அற்புதத்தைப் பார்க்க விரும்புகிறீரா" என்று வினவி, அவர்களை அற்புதமாக உயிர் பெற்றெழும்பச் செய்தான். அவர்கள் அனைவரும் உயிர் பெற்று "நாயனே! உன்னை நாங்கள் துதிக்கிறோம்; இன்னும் உனது புகழைக் கொண்டு ஸ்தோத்திரம் செய்கிறோம். உன்னைத் தவிர வேறு நாயன் இல்லை" என்பதாகக் கூறிக்கொண்டு எழும்பினர். இப்படி எழும்பியவர்கள் சில காலம் வாழ்ந்து அவரவருக்கேற்பட்ட தவணையின்படி மரண மடைந்தனர்.

மக்கள் உயிருடனிருப்பதும், மரணிப்பதும் அவ்வல்லோனின் கட்டளைப்படி யேயாகும். ஒருவர் மரணத்திற்குப் பயந்து எங்கு சென்றாலும் அவரை அது விடாது. உலகத்தில் வாழ வேண்டிய காலம் எஞ்சி இருக்கும் போது அவர்களுக்கு எந்த அபாயமும் சம்பவிக்காது என்பதை உணர்த்தி, ஜிஹாது என்னும் மார்க்க யுத்தம் புரிவதற்கு முஸ்லிம்களைத் தூண்டுவதும், மார்க்க யுத்தத்தில் உயிர்த்தியாகம் செய்து ஷஹாதத் என்னும் பேறு பெறும்படியும் தூண்டுவதற்காகவே இந்தச் சம்பவத்தை இறைவன் இங்கு சுட்டிக் காட்டியிருக்கிறான்.

மேற்கண்ட யூத வகுப்பினர் அனைவரையும் இறைவன் இவ்வண்ணம் மரணிக்கச் செய்தது அல்லாஹு தஆலாவின் நாட்டத்தைக் கொண்டல்லாமல் எந்தக் காரியமும் நிகழாது என்பதையும், அவனது கற்பனையை விட்டுத் தப்பித்துக் கொள்ள எவராலும் முடியாது என்பதையும் அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக வேயாகும். இவர்களை இறைவன் இப்படி மரணிக்கச் செய்தது இவர்களைத் தண்டித்து அறிவுறுத்துவதற்காகவேயாகும் என்றும், தண்டனை என்ற முறையில் மரணிக்கச் செய்தால் அவர்கள் அப்புறம் உயிர் பெற்று எழும்புவார்கள் என்றும், வாழ்நாள் பூர்த்தியாகி மரணித்தால் இவ்வுலகில் அப்புறம் உயிர் பெற்று எழும்புவதில்லை என்றும் இமாமுல் முவஹ்ஹிதீன் இப்னுல் அறபி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின் இஸ்ரவேல் கூட்டத்தினருக்கு ஹளரத் யூஷஉப்னு நூன் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தலைமை வகித்து அவர்களது இம்மை மறுமைக் காரியங்களைக் கவனித்து வந்தார்கள். அவருக்குப் பிறகு ஹளரத் காலபுப்னு யூஹன்னா என்பவர், அதற்கப்புறம் ஹளரத் ஹிஜ்கீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். இவருக்கு இப்னுல் அஜூஸ் (கிழவியின் குமாரன்) என்பதாகவும் ஒரு பெயருண்டு. இவருடைய தாயார் வெகு காலம் வரை சந்ததியில்லாமலிருந்து வயோதிகத்தை யடைந்த பின் இறைவன் அருளால் இவரைப் பிரசவித்தார். ஆதலின், அவருக்கு இப்பெயர் வந்தது. துல்கிஃப்ல் என்பது இவருக்குள்ள மற்றொரு

பெயராகும். ஏனெனில், இவர் 70 நபிமார்களுக்குப் பதிலாக இருந்து அவர்கள் கொல்லப்படுவதை விட்டு அவர்களைக் காப்பாற்றினார்கள். பிறகு, அல்லாஹு தஆலா இவரையும் கொல்லப்படாமற் காப்பாற்றினான்.

وَقَاتِلُوا فِي سَبِيلِ اللَّهِ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ

244. எனவே, (நீங்கள் யுத்தம் செய்வதற்கு அஞ்சவேண்டாம்) அல்லாஹ்வின் பாதையில் (மார்க்க) யுத்தம் புரியுங்கள்; மேலும், நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள் கூறுவதைக்) கேட்பவன் (இன்னும்) மிகவும் அறிந்தவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மேலேகூறிய ஆயத்தில் மரணத்திற்கு பயந்து ஓடுவதில் பிரயோஜனமில்லை என்பதையும், அப்படி ஓடுபவர்கள் அந்தரங்க சுத்தியான நல்லடியார்களாக மாட்டார்கள் என்ற விஷயத்தையும், அவரவருக்கேற்பட்ட கற்பனை அவர்களுக்கு வந்தே தீரும் என்பதையும் இறைவன் அறிவித்து விட்டு நீங்கள் மார்க்க யுத்தத்திற்குச் சென்றால் வெற்றியுடன் திரும்புவீர்கள் அல்லது மார்க்கத்திற்காக உயிர்த்தியாகம் செய்வீர்கள், இவ்விரண்டில் ஒன்று நிச்சயமாகக் கிடைப்பதால் இதனைத் தவற விடாதீர்கள் என்பதையும் எச்சரிக்கை செய்து விட்டு இந்த ஆயத்தில் மார்க்க யுத்தம் செய்யும்படி கட்டளையிட்டிருக்கிறான்.

مَنْ ذَا الَّذِي يُقْرِضُ اللَّهَ قَرْضًا حَسَنًا فَيُضَاعِفَهُ لَهُ أَضْعَافًا كَثِيرَةً ۚ وَاللَّهُ يَقْبِضُ وَيَبْسُطُ وَإِلَيْهِ تُرْجَعُونَ

245. (யுத்தத்திற்காகப் பொருளுதவி செய்வதன் மூலம்) அல்லாஹ்வுக்கு அழகிய கடனாகக் கடன் கொடுப்பவர் யார்? அவருக்கு (அல்லாஹ்) அதை அநேக மடங்கு (அதிகமாக) இரட்டிப்பாக்கித் தருவான். மேலும், அல்லாஹ் (தன் அடியார்களைச் சோதிப்பதற்காக அதைக்) குறைக்கவும் செய்வான், கூட்டவும் செய்வான். இன்னும், நீங்கள் (மறுமையில்) அவனிடமே மீட்டப்படுவீர்கள்.

அல்கர்லு என்பது பிரித்தல், தரித்தல் என்பது பொருளாகும். கடன் கொடுப்பவர் தன்னிடமுள்ள பொருளிலிருந்து ஒரு பாகத்தை அல்லது தனது பொருள் முழுவதையும் தன்னை விட்டு பிரித்து எடுத்து, கடன் வாங்குபவரிடம் கொடுக்கிறார். ஆதலின், கடனுக்கும் **அல்கர்லு** என்பதாகப் பெயர் வந்தது. அல்லாஹு தஆலா தேவையற்றவனாக இருக்கிறான். ஆதலின், அவன் நம்மிடம் கடன் வாங்கும்படியான நிலைமைக்குத் தேவையுள்ளவனாகி விடவில்லை. ஆனால், அவனது சன்மார்க்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டு அவனது வழியில் நன்மையை நாடி நாம் நமது பொருட்களைப் பிரித்துக் கொடுப்போமாயின், அதற்குப் பதிலாக அவன் மறுமையில் நமக்கு நன்மையைத் திரும்பக் கொடுக்கிறான். எனவே, இந்தக் கருத்தில்தான் இறைவன் இந்த இடத்தில் "அல்லாஹ்வுக்குக் கடன் கொடுப்பவர் யார்?" என்பதாகக் கூறியுள்ளான்.

أَضْعَافًا كَثِيرَةً **அல்அஃபன் கதீரத்தன்** (அநேக மடங்கு) என்பதாக இறைவன் கூறி இருப்பதால் நாம் அவனது சன்மார்க்கத்திற்காகச் செலவு செய்வதற்குப் பதிலாக அவன் நமக்கு எத்தனை மடங்கு நன்மை தருவான் என்பதை உறுதியாகக் கூறுவதற்கில்லை. ஆனால், எழுநூறு மடங்கு அதிகமாக இரட்டிக்கப்படும் என்பதாகச் சிலர் கூறி இருக்கிறார்கள். அல்லாஹு தஆலா இவ்வண்ணம் அதிகமாக்கிக் கொடுப்பது அவனது கருணையேயாகும் என்ற விஷயத்தை **மேலும்** فَيُضَاعِفَهُ لَهُ أَضْعَافًا كَثِيرَةً **அல்லாஹ் (சிலருக்கு) குறைக்கவும் செய்வான் (இன்னும் சிலருக்கு) கூட்டவும் செய்வான்** என்ற வாக்கியத்தில் நமக்கு அறிவித்துள்ளான். எனவே, ஒருவருக்கு அதிகமாகவும், ஒருவருக்குக்

குறைவாகவும் அவன் கொடுப்பானாயின் அதனை ஆட்சேபிக்க மக்களுக்கு உரிமையில்லை. தவிரவும், இந்த வசனம் ஜனங்களை கஞ்சத்தனம் செய்ய வேண்டாம் என்பதையும், சன்மார்க்கத்திற்காக செலவு செய்வதால் தரித்திர திசையடைய முடியாது என்பதையும் அவன் நாடினால் ஒருவருக்கு அதிகமாகவும் ஒருவருக்குக் குறைவாகவும் கொடுப்பான் என்பதையும் அறிவிக்கிறது.

أَلَمْ تَرَ إِلَى الْمَلَإِ مِنْ بَنِي إِسْرَائِيلَ مِنْ بَعْدِ
مُوسَىٰ ۘ إِذْ قَالُوا لِنَبِيٍّ لَهُمُ ابْعَثْ لَنَا مَلِكًا
نُقَاتِلْ فِي سَبِيلِ اللَّهِ ۖ قَالَ هَلْ عَسَيْتُمْ
إِنْ كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ أَلَّا تُقَاتِلُوا ۖ قَالُوا
وَمَا لَنَا أَلَّا نُقَاتِلَ فِي سَبِيلِ اللَّهِ وَقَدْ أُخْرِجْنَا
مِنْ دِيَارِنَا وَأَبْنَائِنَا ۖ فَلَمَّا كُتِبَ عَلَيْهِمُ
الْقِتَالُ تَوَلَّوْا إِلَّا قَلِيلًا مِنْهُمْ ۗ وَاللَّهُ عَلِيمٌ
بِالظَّالِمِينَ ۝

246. மூஸாவுக்குப் பின்னர் இஸ்ராயீலின் சந்ததியினரில் ஒரு கூட்டத்தினரை நீர் பார்க்கவில்லையா? அவர்கள் தங்கள் நபியிடத்தில் எங்களுக்கு ஒரு அரசனை ஏற்படுத்துக! நாங்கள் (அவருடன் சேர்ந்து) அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிகிறோம் என்று கூறியபொழுது, (அதற்கு) "உங்கள்மீது யுத்தம் விதிக்கப்பட்டால் நீங்கள் யுத்தம் செய்யாதிருந்து விடக்கூடுமல்லவா?" என்று கூறினார். "எங்கள் இல்லங்களையும் எங்கள் மக்களையும் விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்டிருக்க" (எங்கள் விரோதியை எதிர்த்து)

நாங்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்யாதிருக்க எங்களுக்கு என்ன இருக்கிறது என்று அவர்கள் கூறினர். எனவே, (அவர்கள் விருப்பப்படி) அவர்கள் மீது யுத்தம் விதிக்கப்பட்ட போது அவர்களிற் சிலரைத் தவிர (மற்றையோர்) பின்வாங்கினர். மேலும், அல்லாஹ் வரம்பு மீறியவர்களை நன்கு அறிபவன்.

இந்த ஆயத்திலிருந்து இறைவன் பனீ இஸ்ராயீல் கூட்டத்தாரில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நமக்கு உதாரணமாக எடுத்துக் கூறுகிறான். அது வருமாறு:-

ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப்பின் ஹளரத் யூஷ உப்னு மதா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கலீஃபாவாக வந்தார்கள். இவருக்குப் பின் மற்றொருவர் இவ்விதமாகப் பல நபிமார்கள் ஒருவருக்குப் பின் ஒருவராக கலீஃபாவாக வந்து தவ்ராத் வேதத்திலுள்ள கட்டளைகளை அமல் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் அடிக்கடி மீறி நடந்து கொண்டே இருந்தனர். இறுதியாகச் சில காலம் அவர்களிடம் நபிமார்கள் உதிக்கவில்லை. அவர்களது பாவச் செய்கைகளும் அளவுக்கு மீறிவிட்டன. இந் நிலையில் பாலஸ்தீனத்திற்கும் எகிப்திற்குமிடையிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் வசித்து வந்த அமாலிக்கா என்ற வகுப்பினர் இவர்கள் மீது படையெடுத்து வந்து இவர்களை வென்று இவர்களது அரச குடும்பத்திலுள்ள 440 ஆடவர்களை அடிமைகளாகவும் ஆக்கி, இவர்களிடம் ஜிஸ்யா வரியையும் ஏற்படுத்தி விட்டனர். இன்னும், இஸ்ராயீலின் சந்ததியினருக்கு இவர்களால் வேறு பல கஷ்டங்களும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இந்தக் காலத்தில் இவர்களது காரியங்களைக் கவனிப்பதற்காக யாரும் நபியாக இருக்கவில்லை. மேலும் நபிமார்களது வம்சத்தில் தோன்றிய கர்ப்பமுற்ற பெண் ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லோரும் இறந்து விட்டனர். ஆகவே, பனீ இஸ்ராயீல்கள் அந்த பெண்ணைப் பிடித்துப் பாதிரிமார்களது வீட்டில் சிறை வைப்பது போல் வைத்துக் கொண்டனர். ஏனெனில், அந்தப் பெண் பெண் மகளைப் பிரசவித்தால் ஒருவருக்கும் தெரியாமல் அக்குழந்தையை மாற்றிவிட்டு ஒரு ஆண் மகனை அவள் ஈன்றதாக உலகில் பரப்பிவிடலாம் என்பது அவர்களது எண்ணம். பனூ

இஸ்ராயீல்கள் தங்களுக்கு வழி காட்டுவதற்காக தங்களுக்கு இறைவன் ஒரு நபியைத் தந்தருள வேண்டும் என்று விரும்பும் அவாவைப் பார்த்த அந்த பெண்ணும் தனது கர்ப்பத்திலுள்ள சிசு ஆணாக இருக்கும்படி அருள் புரிய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். இறைவன் அவ்வம்மையின் வயிற்றில் ஒரு ஆண் மகனைப் பிறக்கும்படி செய்தான். அக்குழந்தைக்கு உஷ்மூயில் என்று பெயர் சூட்டப்பட்டது. "இறைவன் எனது பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொண்டான்" என்பது இதன் பொருள். எனவே, அக்குழந்தைக்கு வயது வந்தபோது பைத்துல் முகத்தஸிலுள்ள ஒரு யூத மதப்பாதிரியான ஒரு முதியோரிடம் தவ்ராத் வேதத்தை கற்பிப்பதற்காக ஒப்புவித்தனர். அவ்வயோதிகர் அவரைத் தமது புதல்வரைப்போல பாவித்து கல்வி கற்றுக் கொடுத்தும் போஷித்தும் வந்தார். அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பருவ வயதினை அடைந்தபோது ஒருநாள் அவ்வயோதிகரின் அண்டையில் தூங்கிக் கொண்டிருக்கும் சமயம் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவ்வயோதிகரின் தொனியில், அவர் அழைப்பதுபோல் அழைத்தார். உடனே, அவர் அவ்வயோதிகரிடம் "பிதாவே! தாங்கள் என்னை அழைத்தீர்களோ" என்று வினவ அதற்கவர் "இல்லை" என்று பதில் கூற விரும்பாமல் "மகனே! நீ திரும்பிச் சென்று படுக்கையில் படுத்துக் கொள்" என்பதாகக் கூறினர். பிறகு மறுபடியும் இரண்டாவது முறையாக அவ்வண்ணமே அழைக்க அவர் தமது படுக்கையை விட்டு எழும்பி வயோதிகரிடம் வந்து முன்போல வினவினார். அப்பொழுது அவ்வயோதிகர் "இனி நான் அழைத்தால் நீர் எழுந்து வரவேண்டாம்" என்று கூறினார். பிறகு, மூன்றாவது அழைப்பிற்குப் பிறகு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவர் முன் தோன்றி "இறைவன் உம்மை உமது ஜனங்களுக்கு நபியாக ஏற்படுத்தி இருக்கிறான். ஆதலின், அவர்களிடம் சென்று சன்மார்க்கப் பிரசாரம் செய்வாயாக" என்பதாக அறிவித்தார்கள்.

இச்சம்பவத்திற்குப் பிறகு, அவர் தமது ஜனங்களிடம் சென்று தமது பிரசாரத்தை ஆரம்பித்தபோது, அவரை ஜனங்கள் பொய்ப்பித்து

"உமக்கு நபித்துவம் கிடைத்து விட்டதாக நீர் அவசரப்பட்டு தாவாச் செய்து விட்டீர். நீர் உமது தாவாவில் உண்மையுள்ளவராக இருப்பின் எங்களுக்காக ஒரு அரசரை நீர் ஏற்படுத்த வேண்டும். அவருடன் சேர்த்து நாங்கள் சன்மார்க்கத்திற்காக யுத்தம் புரிய வேண்டும். இப்படிச் செய்வதுதான் உமக்கு நபித்துவம் கிடைத்ததற்கு அடையாளம்" என்பதாகக் கூறினர். இஸ்ராயீலின் சந்ததியில் ஜனங்கள் அரசருக்குக் கட்டுப்பட்டு நடப்பதும், அரசர் நபிமார்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும், நபிமார்கள் அரசர்களது காரியங்களில் ஆலோசனை கூறி, இறைவனிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கும் செய்திகளை அறிவிப்பதும் அக்காலத்தில் வழக்கம். இவ்வழக்கத்திற்கேற்ப அவர்கள் அவரிடம் ஆயத்தில் கண்டவாறு கேட்டுக் கொண்டனர். எனவே, அவர்கள் கேட்டுக் கொண்ட பிரகாரம் அவர்களுக்கு அரசர் நியமனம் செய்யப்பட்டு, பகைவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய நேர்ந்தபோது எதிரிகளின் படை பலத்தைக் கண்டு அவர்கள் பயந்து பெரும்பாலோர் யுத்தத்திற்கு வராமறங்கி விட்டனர். இவ்விஷயம் இங்கு சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதற்கடுத்த வசனங்களில் இவ்விபரம் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ إِنَّ اللَّهَ قَدْ بَعَثَ لَكُمْ طَالُوتَ
مَلِكًا ۚ قَالُوا أَنَّىٰ يَكُونُ لَهُ الْمُلْكُ عَلَيْنَا وَنَحْنُ
أَحَقُّ بِالْمُلْكِ مِنْهُ وَلَمْ يُؤْتَ سَعَةً مِّنَ الْمَالِ ۚ
قَالَ إِنَّ اللَّهَ اصْطَفَاهُ عَلَيْكُمْ وَزَادَهُ بَسْطَةً
فِي الْعِلْمِ وَالْجِسْمِ ۖ وَاللَّهُ يُؤْتِي مُلْكَهُ مَن
يَشَاءُ ۚ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ ۝

247. மேலும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு தாலூத் என்பவரை அரசராக அனுப்பி இருக்கிறான் என அவர்களுடைய நபி

அவர்களுக்குக் கூறினார். (அதற்கு) அவர்கள், "எங்கள்மீது ஆட்சி செலுத்த அவருக்கு எங்ஙனம் (உரிமை) கிடைக்கும். நாங்களோ அவரைக் காட்டிலும், அரசுரிமைக்கு அதிக அருகதையுள்ளவர்களாக இருக்கிறோம்; இன்னும், பொருள் வசதியையும் அவர் கொடுக்கப்படவில்லை" என்று கூறினர். (அதற்கு) "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது (அதிகாரம் செலுத்த) அவரைத் தெரிந்தெடுத்து (யுத்த சம்பந்தமான) கல்வியிலும், (பலமான) உடலிலும், அவருக்கு விசாலத்தை அதிகரித்திருக்கிறான். இன்னும், அவன் நாடியவர் களுக்கு அல்லாஹ் தன்னுடைய ஆட்சியைக் கொடுக்கிறான். அல்லாஹ் விசாலமானவன் மிகவும் அறிந்தவன்" என்று (அவர்) கூறினார்.

இதற்கு முந்தின ஆயத்தில் சொல்லப்பட்டபடி பனீ இஸ்ராயீல் கூட்டத்தாருக்கு ஒரு அரசரை நியமிக்க வேண்டியது ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களது பொறுப்பாக இருந்தது. ஆகவே, அவர் இறைவனிடம் இதனைப்பற்றிப் பிரார்த்தனை செய்தார். அதன் காரணமாக, அவருக்கு ஒரு தண்டமும், பைத்துல் முகத்துஸுடைய எண்ணெய் வைக்கப்பட்டுள்ள ஒரு டப்பியும் கொடுக்கப்பட்டு "இஸ்ராயீலின் சந்ததியினருக்கு அரசராக வருபவர் இந்தத் தண்டத்தின் உயரமிருப்பார். அவர் வந்தவுடன் இந்த டப்பியிலுள்ள எண்ணெய் கொதிக்கும். அப்படிப்பட்டவருக்கு இந்த எண்ணெயைப் பூசி, அவரை அரசரென அறிவிக்க வேண்டும்" என இறைவன் கட்டளை யிட்டிருந்தான்.

இந்நிலையில் தாலூத்துடைய தந்தையின் கழுதை தவறிப் போய்விட்டது. அதனைத் தேடுவதற்காக அவர் தமது புதல்வர் தாலூத்தையும் தமது அடிமையையும் அனுப்பினார். அவ்விருவரும் ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களது வீட்டின் அண்டையிற் சென்ற போது தாலூத்திடம் அவ்வடிமை "நாம் நபியிடம் கழுதையைப் பற்றி விசாரிப்போம். அவர் அதனைப்பற்றி தகவல் அறிவிப்பார்" என்பதாகக் கூறினான். அதன் காரணமாக அவர் ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்று பேசிக்

கொண்டிருக்கும்போது டப்பியிலுள்ள எண்ணெய் கொதித்தது. உடனே, ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அத்தண்டத்தைக் கொண்டு அவர் உயரத்தைப் பார்க்க அதன் உயரமும் அவருடைய உயரமும் சரியாக இருந்தன. ஆதலால், அவர் மீது அந்த எண்ணெயைத் தடவி உம்மை அரசனாக்கும்படி இறைவன் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான். ஆதலின், நீர்தான் இஸ்ராயீலின் சந்ததியினருக்கு அரசர் என்று கூறினார். அதற்கவர் "என்னை அரசனாக்கும்படி இறைவன் கட்டளை யிட்டதற்கு அடையாள மென்ன?" வென்று கேட்டதற்கு "உமது கழுதை உமது தந்தையிடம் வந்திருக்கும் நீர் போய் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி அனுப்பி வைத்தார். அவ்வண்ணமே கழுதையும் வந்திருந்தது.

பிறகு, ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது ஜனங்களாகிய இஸ்ராயீலின் சந்ததியினருக்கு தாலூத் அரசராக்கப்படவேண்டும் என்பதாக இறைவன் கட்டளையிட்டிருப்பதாக அறிவிக்க. ஹளரத் யாகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மக்களில் லாவீ என்பவரின் சந்ததியில் நபிமார்களும், யஹூதா என்பவரின் சந்ததியில் அரசர்களும் தோன்றுவது வழக்கமாக இருந்ததாலும், தாலூத் என்பவர் புன்யாமீன் என்பவரின் சந்ததியில் உதித்தவரும், ஏழையும், தோல் பதனிடுபவருமாக இருந்ததாலும் இவரை அரசர் என்று நிர்ணயித்ததைக் குறித்து அவர்கள் ஆச்சரியமடைந்து மேற்கண்ட ஆயத்தில் கண்டவாறு அந்த நபியை வினவினார்கள். தாலூத் தண்ணீர் புகட்டுபவராக அல்லது கூலிக்காரராக இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. அவர்களது வினாவிற்கு பதிலாக அந்த நபியவர்கள் "அரசுரிமைக்கு வம்சம்தான் பிரதானம் என்பதில்லை; நாட்டை ஆட்சி செய்வதற்கு இன்றியமையாதனவான கல்வியும், உடல் பலமும் இருந்தால் போதுமானது" என்பதாகக் கூறினார். இவ்விஷயம் மேற்கண்ட ஆயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

وَقَالَ لَهُمْ نَبِيُّهُمْ إِنَّ آيَةَ مُلْكِهِ أَنْ يَأْتِيَكُمُ
التَّابُوتُ فِيهِ سَكِينَةٌ مِّنْ رَّبِّكُمْ وَبَقِيَّةٌ مِّمَّا تَرَكَ

آلُ مُوسَىٰ وَآلُ هَارُونَ تَحْمِلُهُ الْمَلَائِكَةُ ۚ إِنَّ فِي ذَٰلِكَ لَآيَةً لَّكُمْ إِن كُنتُم مُّؤْمِنِينَ ﴿٢٤٨﴾

248. மேலும், அவர்களுக்கு அவர்களுடைய நபி, "நிச்சயமாக அவருடைய அரசுரிமைக்கு அடையாளமாவது: உங்களிடத்தில் ஒரு பெட்டி வரும், அதில் உங்கள் ரப்பிடமிருந்து (உங்களுக்கு) அமைதியும், இன்னும், மூஸாவின் சந்ததியினரும் ஹாரூனின் சந்ததியினரும் விட்டுச் சென்றதில் மீதியுள்ளதும் இருக்கும். அதை அமரர்கள் சுமந்து கொண்டு வருவார்கள். நீங்கள் விசுவாசிகளாக இருந்தால் நிச்சயமாக இதில் உங்களுக்கு அத்தாட்சி இருக்கிறது" என்று கூறினான்.

அத்தாபூத் அதாவது பேழை. இது தவ்ராத் வேதம் வைக்கப்பட்டிருந்த பெட்டியாகும். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது மரணத்திற்குப் பின்னர், இஸ்ராயீலின் சந்ததியினர் அடிக்கடி மாறு செய்து பாவமான காரியங்களைச் செய்து கொண்டிருந்ததால் அவர்கள் மீது இறைவன் கோபமடைந்து அதனை உயர்த்திக் கொண்டான். எனவே, தாலூத்துக்கு அரசுரிமை இருப்பதற்குரிய அடையாளம் காண்பிக்கப்படவேண்டும் என்று அந்த நபியவர்களிடம் அவர்கள் கூறியபோது "அவர் அரசர் என்பதற்கு அடையாளம் வானத்திலிருந்து அந்தப் பேழை அவரிடம் வரும்" என்பதாக இறைவன் கூறினான். அதன்படி அந்தப் பேழை தாலூத் என்பவரிடம் வந்து இறங்கிற்று என்பதாக ஹளரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

வேறு சொற்படி, இந்தப் பெட்டியை இறைவன் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கி இருந்ததாகவும், இவரது சந்ததியினர் ஒருவருக்குப் பின் மற்றொருவராக ஹளரத் யாகூப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம் வரை வந்தது. பிறகு இஸ்ராயீலின் சந்ததியினரில் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம்

அவர்கள் காலம் வரை மேற்சொல்லிய பிரகாரமே இருந்து வந்தது. ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்தப் பெட்டிக்குள் தவ்ராத் வேதத்தையும், தம்முடைய பொருட்களில் ஒரு பொருளையும் வைத்துக் கொண்டிருந்தார். யுத்த காலங்களில் அவர் அப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு போர்க்களம் செல்வது வழக்கம். இப்பெட்டி இருப்பதால்தான் தங்களுக்கு வெற்றி கிடைக்கிறதென்று இஸ்ராயீலின் சந்ததியினர் மனச் சாந்தியடைவர். இவ்விதமாக இஸ்ராயீலின் சந்ததியினரிடமே இது இருந்து வந்தது. இவர்களும் தங்களது பகைவரை எதிர்த்து யுத்தம் செய்யும் போது இதனையும் போர்க்களங் கொண்டு செல்வர். இதிலிருந்து ஒரு வகையான சப்தம் வரும். அப்படிச் சப்தம் வந்தால் தங்களுக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும். இந்நிலையில் இவர்கள் இறைவனுக்கு மாறு செய்து பாவங்களைச் செய்ததால் இறைவன் இவர்கள் மீது கோபமாகி அமாலிக்கா என்று முற்கூறப்பட்ட ஜனங்களை இவர்கள் மீது ஏற்படுத்தினான். இவர்கள் இஸ்ராயீலின் சந்ததியினரை வென்று இந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய், மல ஜலம் கழிக்குமிடத்தில் வைத்து விட்டார்கள். பிறகு, அல்லாஹு தஆலா தாலூத்தை அரசனாக்க நாடியபோது அமாலிக்கா என்ற அவ்வகுப்பினருக்கு நோயை ஏற்படுத்தினான். அதாவது அந்தப் பெட்டியினண்டையில் மலம் ஜலம் கழித்தவர்கள் மூல ரோகத்தால் பீடிக்கப்பட்டனர். இவ்வண்ணம் அவர்களது நகரங்களில் ஐந்து நகரங்களில் உள்ளவர்கள் அழிந்து போயினர். இவ்விதமான நோய் வந்ததற்கு அந்தப் பெட்டியை அவமதித்ததுதான் காரணம் என்பதாக அவர்கள் உணர்ந்து, அதனை அப்புறப்படுத்தி இரண்டு காளைகளின் மீது வைத்துக் கட்டி அனுப்பி விட்டார்கள். அக்காளைகளை தாலூத்து இருக்குமிடத்திற்கு ஓட்டிவரும்படி இறைவன் மலக்குகளை ஏற்படுத்தி விட்டான். இவ்வாறு அப்பெட்டி இஸ்ராயீலின் சந்ததியினரிடம் மறுபடியும் வந்து சேர்ந்தது. ஆகவே, தாலூத் என்பவருக்கு அரசுரிமை இருப்பதற்கு அடையாளம் காண்பிக்க வேண்டும் என்று இஸ்ராயீலின் சந்ததியினர் கேட்டபோது "அவருக்கு அரசுரிமை இருக்கிறது என்பதற்கு அடையாளம் அவரிடம் அந்தப் பெட்டி இருப்பதைக் காண்பீர்கள்" என்பதாக அவருடைய நபி கூறினார் என்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

فِيهِ سَكِينَةٌ مِّن رَّبِّكُمْ அதில் உங்களது றப்பிடமிருந்து **அமைதி இருக்கிறது** என்பதன் விபரமாவது, அந்தப் பெட்டியில் ஒரு பொருள் இருந்தது. அதற்கு பூனைத் தலைபோல் தலையும் பூனை வால்போல் வாலும், பச்சை மரகதத்தால் இரண்டு கையும், கதிர் வீசும்படி இரு கண்களும் இருந்தன. அவர்கள் யுத்தத்திற்குச் செல்லும்போது அதனை முன்னால் வைத்துக் கொண்டு செல்வார்கள். அது சப்தமிட்டால் அந்த யுத்தத்தில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் என்பதாக **தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீமில்** எழுதப்பட்டிருக்கிறது.

"அந்தப் பெட்டியைக் கொண்டு வருவதில் உங்கள் றப்பிடமிருந்து உங்களுக்கு அமைதி இருக்கிறது" என்று இந்த ஆயத்திற்கு இன்னொரு விதமாகவும் பொருள் செய்யப்படுகிறது. வேறு சிலர் **அஸ்ஸக்கீனத்து** என்பது இஸ்ராயீலின் சந்ததியினருக்குப் பெட்டியில் கொடுக்கப்பட்ட பொருள் என்று கூறி இருக்கிறார்கள். இது ஒரு வகை வாசனைக் காற்று. இது பகைவர்களது உள்ளத்தைக் கவர்ந்து விடும். இதனுடைய சப்தத்தால் ஒருவிதமான பயங்கரம் ஏற்படும். யுத்தத்திற்கு இரு கட்சியினரின் படைகளும் அணிவகுத்து ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கும்போது இதிலிருந்து சப்தம் உண்டாகும். இது அவர்களது நபிமார்களுக்கு அற்புதமாகவும், அவர்களது அரசர்களுக்குப் பெருமையளிப்பதாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்பதாக **தஃப்ஸீர் ரூஹுல் பயானில்** எழுதப்பட்டிருக்கிறது. தாபூத் என்பது இருதயம். ஸக்கீனத் என்பது அதிலுள்ள கல்வி, உண்மை, அந்தரங்க சுத்தி, அல்லாஹுதஆலாவின் மீதுள்ள ஞாபகம் என்பதாகச் சிலர் பொருள் கூறியுள்ளனர்.

பக்கிய்யத்துன் அதாவது எஞ்சியது என்பது ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது அஸா என்னும் கைத்தடியும், தவ்ராத் வேதம் எழுதப்பட்ட இரண்டு பலகைகளும், ஹாரூன் அலைஹிஸ ஸலாம் அவர்களது தலைப்பாகையும் ஒரு முத்திரை மோதிரமும் என்றும் - இதனைத்தான் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அணிந்திருந்தார்கள் - இன்னும் சில பொருள்களும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

فَلَمَّا فَصَلَ طَالُوتُ بِالْجُنُودِ قَالَ إِنَّ اللَّهَ
مُبْتَلِيكُم بِنَهَرٍ فَمَن شَرِبَ مِنْهُ فَلَيْسَ مِنِّي
وَمَن لَّمْ يَطْعَمْهُ فَإِنَّهُ مِنِّي إِلَّا مَنِ اغْتَرَفَ
غُرْفَةً بِيَدِهِ فَشَرِبُوا مِنْهُ إِلَّا قَلِيلًا مِّنْهُمْ فَلَمَّا
جَاوَزَهُ هُوَ وَالَّذِينَ آمَنُوا مَعَهُ قَالُوا لَا طَاقَةَ
لَنَا الْيَوْمَ بِجَالُوتَ وَجُنُودِهِ قَالَ الَّذِينَ
يَظُنُّونَ أَنَّهُم مُّلَاقُو اللَّهِ كَم مِّن فِئَةٍ قَلِيلَةٍ
غَلَبَتْ فِئَةً كَثِيرَةً بِإِذْنِ اللَّهِ وَاللَّهُ مَعَ
الصَّابِرِينَ

249. ஆகவே, தாலூத் (அரசர்) படைகளுடன் புறப்பட்ட போது "நிச்சயமாக அல்லாஹ் ஒரு நதியைக் கொண்டு உங்களைச் சோதிப்பவனாக இருக்கிறான்; அதிலிருந்து எவன் அருந்துகிறானோ அவன் என்னைச் சேர்ந்தவனல்ல: ஆனால், தன் கையினால் ஒரு சிரங்கையை எவன் அருந்துகிறானோ அவனைத் தவிர,மேலும், அதில் எவன் அருந்தவில்லையோ அவன் நிச்சயமாக என்னைச் சேர்ந்தவனே" என்று கூறினார். எனினும், அவர்களிற் சிலரைத் தவிர அதிலிருந்து பருகினர். ஆகவே, அவரும், அவருடனிருந்த விசுவாசிகளும் அதைக் கடந்தபோது (அந்த நதியில் நீர் அருந்திய காரணத்தால்) "அவர்கள் இன்று எங்களுக்கு ஜாலூத்தையும் அவனது படைகளையும் (எதிர்க்கச்) சக்தி கிடையாது" என்று

சொன்னார்கள். தாங்கள் அல்லாஹ்வை நிச்சயமாகச் சந்திப்பவர்கள் என்று எவர்கள் நம்பியிருந்தார்களோ அவர்கள் "அல்லாஹ்வின் கட்டளைப்படி எத்தனையோ சிறிய கூட்டத்தினர் பெருங்கூட்டத்தினரை வென்றிருக்கின்றனர். மேலும், அல்லாஹ் பொறுமையுடையவர் களுடன் இருக்கின்றான்" என்றும் கூறினர்.

தாலூத் என்பவரை அவர்கள் அரசராக ஒப்புக் கொண்ட பின் அவர் பகைவர்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்காகப் படை திரட்டினார். வயோதிகர், நோயாளி, வீடு கட்டிக் கொண்டிருப்பவர், வியாபாரி, கடன்காரர், புதிதாக திருமணம் செய்தவர் ஆகியவர்களைத் தவிர்த்து மற்றவர்களில் நல்ல பிராயமுள்ள வாலிபர்களைப் பார்த்து தேர்ந்து எடுத்தார். அப்படித் திரட்டியும் 80 ஆயிரம் பேர் சேர்ந்து விட்டனர். இத்தனை பேரையும் கொண்ட பெரும் படையுடன் தாலூத்து தமது எதிரிகளைத் துரத்துவதற்காகப் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டார். அக்காலம் முதுவேனிற் காலமாக இருந்தது. இவர் இடையில் ஒரு வனாந்திரத்தைக் கடக்க வேண்டியது ஏற்பட்டதால் தண்ணீர் குறைவாக இருப்பதைப் பற்றி முறையிட்டதுடன் தங்களுக்காக ஒரு நதியை உண்டாக்கும்படியும் கேட்டுக் கொண்டனர்.

எனவே, இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்து **"உங்களை அல்லாஹ் ஒரு நதியைக் கொண்டு சோதிப்பான். அந்த நதியில் ஒரு சிறங்கைக்கு அதிகமாக தண்ணீர் அருந்தக் கூடாது. அப்படி அதிகமாக அருந்துபவர் நம்மைச் சேர்ந்தவரல்லர்"** என்று கூறி விடும்படி சொல்ல வேண்டும் என்பதாக தாலூத்திடம் கூறினார். இவ்வண்ணம் இறைவன் சோதித்தது தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்ற பேராசையினால் பலர் இந்தப் படைகளில் சேர்ந்திருந்தனர். யுத்தத்திற்கு ஆசைப்படாமல் வெற்றியை மட்டும் கருதி வந்திருப்பவர்களால் யுத்தம் நடைபெறும் போது பலஹீனம் ஏற்பட்டுவிடும். ஆதலின், இவர்களை அப்படையை விட்டுப் பிரித்து பகைவர்களை எதிர்த்து மார்க்க யுத்தம் செய்ய வேண்டும் என்ற உண்மையான எண்ணத்துடன் படையில் சேர்ந்தவர்களை மட்டும்

போர்க்களம் அனுப்ப வேண்டும் என்பதற்காக இறைவன் இவர்களைச் சோதித்தான். இவர்களில் 313 பேரைத் தவிர மற்றவர்களெல்லாம் தாலூத் அரசரின் கட்டளையை மீறி அதிகமாக அருந்தி விட்டனர். ஆகவே, தமக்குக் கீழ்ப்படிபவர் எவர் என்பதை அவ்வரசர் அறிந்து கொண்டார். மேலும், அதிகமாக தண்ணீர் அருந்தியவர்களுக்கு மென்மேலும் தாகமுண்டாகி ஆற்றங் கரையிலேயே தங்கி விட்டார்கள். அவர்கள் இப்படித் தங்கியதைக் குறித்துத்தான் **"எங்களுக்கு இன்றைய தினம் சக்தி இல்லை"** என்பதாக கூறினர் என்று கூறப்பட்டிருக்கிறது.

இவர்கள் கடந்த நதி பலஸ்தீனுக்கும் உர்துனுக்கும் இடையில் ஓடிக் கொண்டிருக்கும் நதி என்பதாகவும், ஒரு சிறங்கை தண்ணீரைக் கொண்டு அவர்கள் தங்களுக்கும் தங்கள் மிருகங்களுக்கும் புகட்டிக் கொண்டனர் என்பதாகவும் சொல்லப்படுகிறது. தவிரவும், இரண்டு கையாலும் ஒரு முறை தண்ணீர் எடுத்து அந்த தண்ணீர் அவர்களுக்கும் அவர்களது மிருகங்களுக்கும் போதுமானதாக ஏற்பட்டது அக்காலத்து நபியின் அற்புதச் செய்கையாக இருந்தது என்றும் சொல்லப்படுகிறது. மேலும், ஒரே முறையில் அவர்களுக்கு வேண்டிய தண்ணீர் முழுவதையும் எடுத்துக் கொள்ள அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டதாகவும் அந்த ஒரு முறையிலேயே அந்த 313 பேரும் தங்களுக்கும் தங்கள் மிருகங்களுக்கும் வேண்டிய தண்ணீரை எடுத்துக் கொண்டனர் என்றும், மற்றவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றும் ஒரு ரிவாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

وَلَمَّا بَرَزُوا لِجَالُوتَ وَجُنُودِهِ قَالُوا رَبَّنَا أَفْرِغْ
عَلَيْنَا صَبْرًا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى
الْقَوْمِ الْكَافِرِينَ ۝

250. இன்னும், அவர்கள் ஜாலூத்தையும் அவர்களுடைய ஜனங்களையும் எதிர்த்து அவர்கள் புறப்பட்டபொழுது, "எங்கள் ரப்பே! எங்கள் மீது பொறுமையைச் சொரிவாயாக! இன்னும், எங்களுடைய

கால்களை உறுதிப்படுத்தி வைப்பாயாக! இன்னும், நிராகரிப்புச் செய்யும் மனிதர்களின் மீது எங்களுக்கு (வெற்றியைத் தந்து) உதவி புரிவாயாக" என்று (பிரார்த்தித்துக்) கூறினர்.

தாலூத் அரசரும் அவரது போர் வீரர்களும் தங்களது எதிரியாகிய ஜாலூத்தையும் அவனது படையினரையும் பார்த்து. எண்ணிக்கையில் தாங்கள் மிகக் குறைவாகவும், எதிரிகள் மிக அதிகமாகவும் இருப்பதை உணர்ந்த போது மேற்கண்டவாறு இறைவனை இறைஞ்சினர். இந்தப் பிரார்த்தனையில், பகைவர்களின் தாக்குதலைச் சகித்துக் கொள்ளத்தக்க அதிகமான பொறுமையை அளிக்க வேண்டும் என்றும், பகைவர்களது தாக்குதலைச் சகித்துக் கொண்டாலும் போர்க்களத்தில் கோழையராகிப் பின் வாங்கி விடாதபடி மென்மேலும் உற்சாகமும் ஊக்கமும் தரத்தக்கதாகிய ஸ்திரமும், அப்பால் விரோதிகளை வெற்றியடைவதற்கான உதவியும் அளிக்க வேண்டும் என்றும் மூன்று விஷயங்களை வரிசையாகக் கேட்டிருப்பது கவனிக்கத்தக்கது. யுத்தத்திற்குச் செல்பவருக்கு இம்மூன்று காரியங்களும் இன்றியமையாதனவாகும்.

فَهَزَمُوهُم بِإِذْنِ اللَّهِ وَقَتَلَ دَاوُودُ جَالُوتَ
وَآتَاهُ اللَّهُ الْمُلْكَ وَالْحِكْمَةَ وَعَلَّمَهُ مِمَّا
يَشَاءُ ۗ وَلَوْلَا دَفْعُ اللَّهِ النَّاسَ بَعْضَهُم بِبَعْضٍ
لَّفَسَدَتِ الْأَرْضُ وَلَٰكِنَّ اللَّهَ ذُو فَضْلٍ عَلَى
الْعَالَمِينَ

251. ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைப்படி அவர்க(ளின் எதிரிக)ளை அவர்கள் தோற்கடித்தனர். இன்னும் ஜாலூத்தை தாவூது வெட்டினார். மேலும், அல்லாஹ் (தாவூதாகிய) அவருக்கு அரசுரிமையையும், அறிவையுங் கொடுத்து, அவன் நாடியவற்றையும் அவருக்குக் கற்றுக் கொடுத்தான். மேலும் அல்லாஹ் மனிதர்களிற் சிலரைக் கொண்டு அவர்களிற் சிலரைத் தடுக்கவில்லையாயின், நிச்சயமாக பூமி குழப்பமாகி விடும். என்றாலும், அல்லாஹ் உலகத்தாரின் மீது கருணையுடையவன்.

இஸ்ராயீலின் சந்ததியினர் கேட்ட துஆவை இறைவன் அங்கீகரித்து அவர்களுக்கு வெற்றியளித்தான். அதன் விபரம் வருமாறு.

ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களது தந்தையான அய்ஷா என்பவர் தாலூத் அரசருடன் அந்த நதியைக் கடந்தவர்களில் ஒருவர். இவருடன் அவரது மக்களும் யுத்தத்திற்கு வந்திருந்தனர். ஆனால், அவருடைய இளைய புதல்வரான ஹளரத் தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் ஆடு மேய்ப்பதற்காக ஊரில் தங்கி இருந்தார். அல்லாஹுத்தஆலா அந்தப் படையிலிருந்த நபியவர்களுக்கு வஹியின் மூலமாக அய்ஷாவின் புதல்வர் தாவூத் என்பவர்தான் ஜாலூத்தைக் கொல்வார் என்பதாக அறிவித்தான். ஆகவே, அவர் ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தேடிவந்து "ஜாலூத்தைக் கொல்லும் வேலையை இறைவன் உமது கையில் ஏற்படுத்தி இருக்கிறான். ஆகவே, எங்களுடன் சேர்ந்து அவனை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டும்" என்று அழைத்துக் கொண்டு சென்றார். ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செல்லும் போது ஒரு கல் அவரை அழைத்து "தாவூதே! என்னை எடுத்துக் கொள். என்னைக் கொண்டு ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இன்னின்ன அரசர்களைக் கொன்றிருக்கிறார்கள்" என்று கூறிற்று. அதனை அவர் எடுத்து வைத்துக் கொண்டார். பிறகு, மற்றொரு கல் அவரை அழைத்து "என்னையும் எடுத்துக் கொள். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்னைக் கொண்டு இன்னின்ன மனிதர்களைக் கொன்றிருக்கிறார்கள்" என்று கூறிற்று. பிறகு, மூன்றாவது கல்லொன்று அவரை அழைத்து "என்னையும் எடுத்துக் கொள், என்னைக் கொண்டு ஜாலூத்தை நீர் கொல்வீர்" என்று கூறிற்று. அதனையும் அவர் எடுத்துக் கொண்டார்.

இரு கட்சியினரின் படைகளும் ஒன்றுக்கொன்று எதிரில் அணிவகுத்து நின்றபோது ஜாலூத்து போர்க்களம் வந்து தன்னை எதிர்க்க வருபவர் யார்? என்பதாக அறை கூவலாயினன். ஒருவரும் அவனது அறை கூவலை ஏற்றுக் கொண்டு அவன் முன் செல்லவில்லை. பிறகு, தாலூத் அரசர் ஹளரத் தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்களை வேண்டிக் கொண்டு, ஜாலூத்தைக் கொன்று விட்டு வந்தால் தனது புதல்வியை அவருக்கு திருமணம் செய்து வைப்பதாகவும், தனது நாட்டில் பாதியைக் கொடுப்பதாகவும் வாக்களித்தார். ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இதற்கிணங்கவே, அவருக்குக் குதிரையும் உருக்குச் சட்டையும் ஆயுதமும் கொடுத்து அனுப்பினார். ஆனால், அவர் அவனை நெருங்கிச் சென்ற பின் திரும்ப வந்து இந்த ஆயுதங்களும் சட்டைகளும் தமக்கு வேண்டாமென்று அவற்றைத் திரும்பக் கொடுத்து விட்டு தமது அம்புகளையும் கவண் கல்லெறியும் பட்டையையும் எடுத்துக் கொண்டு அவனை நெருங்கினார். ஜாலூத் என்பவன் அமாலிக்கா வகுப்பு ஜனங்களுக்குத் தலைவனும் அரசனுமாவன். அவர்களில் மிகவும் வீர தீர பராக்கிரமமுள்ளவன். இவன் மட்டும் தன்னந்தனியே நின்று பகைவர்களது படைகளைத் தோற்கடித்து விடுவது வழக்கம். அவனது தலையில் அணிந்திருக்கும் இரும்புக் குல்லாய் மட்டும் 100 ராத்தல் (ஒரு பலம் 35 கிராம் 13 பலம் சேர்ந்தது 1 ராத்தல். எனவே 1 ராத்தலுக்கு 455 கிராம் ஆகிறது. அப்படியானால் 100 ராத்தலுக்கு 45,500 கிராம் ஆகிறது. ஆக 100 ராத்தலுக்கு 45 1/2 கிலோ ஆகிறது) எடையுள்ளது. அவனது நீளத்தின் நிழல் ஒரு மைல் தூரம் வரையில் இருக்கும். அவன் ஹளரத் தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கண்டவுடன் மனதிற்குள் திடுக்கிட்டான். ஆயினும், ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி "இளைஞரே! உனக்கு இரங்குகின்றேன். ஆதலின் நீ திரும்பச் சென்று விடுவாயாக" என்றான். அதனை மறுத்து ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "நான்தான் உன்னைக் கொல்வேன்" என்றார். அப்பொழுது அவன் அவரை நோக்கி, "நாயை அடிப்பதற்குக் கல்லையும் கவண் பட்டையையும் கொண்டு போவது போல என்னிடம்

கல்லையும் கவண்பட்டையையும் கொண்டு வந்தாயோ?" என்று இகழ்ச்சியாகக் கூறினான். அதற்கவர் "ஆம்! நீ நாயினுங் கடையன்" என்று கூறினார். இவ்வார்த்தையை கேட்டவுடன் அவன் கோபமடைந்து "உன்னை நான் பறவைகளுக்கு உணவாகக் கொடுப்பேன்" என்று வீராவேசங் கொண்டு எழுந்தான். பிறகு இருவருக்கும் போர் நடந்தது. ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அம்மூன்று கற்களையும் எடுத்துத் தமது கவணில் வைத்து பிஸ்மில்லாச் சொல்லி எறிந்தார். அம்மூன்று கற்களும் அற்புதமாக ஒரு கல்லாக மாறி அவனது நெற்றியில் பட்டுத் துளைத்துக் கொண்டு பிடரி வழியாக வெளியேறி அவனது போர் வீரர்களிலும் முப்பது பேரை ஊடுருவிப் பாய்ந்தது. அந்த அடியினால் அவன் மாண்டான். அவன் உடலை ஹளரத் தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இழுத்துக் கொண்டு வந்து தாலூத் திடம் போட்டார்கள். இதனைப் பார்த்த எதிரியின் போர் வீரர்கள் பயந்து பின் வாங்கி ஓடிவிட்டனர். தாலூத்தும் அவரது போர்வீரர்களும் சந்தோஷ மடைந்ததுடன், ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தமது வாக்குறுதியின் படி தமது புதல்வியையும் நாட்டில் பாதியையும் கொடுத்தார். ஆயினும், அன்று முதல் ஜனங்கள் ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நேசிக்கலாயினர். ஹளரத் உஷ்மூயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் மரணமடைந்தார்கள். தாலூத் அரசனுக்கு ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பால் துவேஷமும் பொறாமையும் உண்டாயிற்று. அவரைக் கொல்லச் சதி செய்தார். இவ்விபரம் ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தெரியவே அவர் மலைகளில் சென்று தபசிகளுடன் சேர்ந்து கொண்டார். பின்னர், தாலூத்து தமது குற்றத்தை உணர்ந்து தமது குற்றத்திற்காக தவ்பாச் செய்து இவ்வுலகை விட்டு அகன்ற பின், எஞ்சிய பாதி நாட்டிற்கு தாவூதே அரசராகி, பனீ இஸ்ராயீல்களுக்கு ஏகச் சக்கரவர்த்தியானார். இதனைக் குறித்துத்தான் இறைவன் وَاٰتٰىهُ اللّٰهُ الْمُلْكَ وَالْحِكْمَةَ **நாம் அவருக்கு அரசுரிமையையும் நபித்துவத்தையும் கொடுத்தோம்** என்று கூறி இருக்கிறான். பனீ இஸ்ராயீல்களில் இவருக்கு முன் வேறு எவருக்கும் நபித்துவமும் அரசுரிமையும் சேர்ந்தாற்போற் கிடைக்க வில்லை. இரண்டு அந்தஸ்துகளையும் பெற்றவர்களில் இவர்தான் முதலாமவர்.

تِلْكَ اٰيٰتُ اللّٰهِ نَتْلُوْهَا عَلَيْكَ بِالْحَقِّ ؕ وَاِنَّكَ لَمِنَ
الْمُرْسَلِيْنَ ۝

252. இவைகள் அல்லாஹ்வின் வசனங்கள். இவற்றை நாம் உம்மிடம் உண்மையைக் கொண்டு ஓதிக் காண்பிக்கிறோம். மேலும், நிச்சயமாக (நபியே) நீர் (நம்மால்) அனுப்பப்பட்டவர்களில் ஒருவர்தான்.

நிராகரிப்பாளர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியல்லவென்றும் ரசூல் அல்ல வென்றும் கூறி பொய்ப்பித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பொய்ப்பித்ததை மறுத்து இறைவன் "நிச்சயமாக நீர் (நம்மால் அனுப்பப்பட்ட) தூதர்களில் ஒருவர்" என்பதாக அறிவித்திருப்பதுடன் இதற்கு ஆதாரமாக மேலே சொல்லப்பட்ட முற்காலத்துச் சம்பவங்களையும் நியதிகளையும் கூறி இருக்கிறான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவும், இதர வேதாகமங்களை பார்க்காதவர்களாகவும் இருந்தும் இவற்றின் உண்மை நிகழ்ச்சிகளை அறிவிப்பது இறைவனால் அறிவிக்கப்பட்டதே யன்றி வேறொன்று மில்லை என்பதை விளக்குகிறது.

تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ ۘ
مِنْهُمْ مَّنْ كَلَّمَ اللّٰهُ وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجٰتٍ ؕ
وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ
الْقُدُسِ ؕ وَلَوْ شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلَ الَّذِيْنَ مِنْ
بَعْدِهِمْ مِّنْ بَعْدِ مَا جَآءَتْهُمُ الْبَيِّنٰتُ وَلٰكِنِ
اخْتَلَفُوْا فَمِنْهُمْ مَّنْ اٰمَنَ وَمِنْهُمْ مَّنْ كَفَرَ ؕ وَلَوْ

شَآءَ اللّٰهُ مَا اقْتَتَلُوْا ۗ وَلٰكِنَّ اللّٰهَ يَفْعَلُ مَا يُرِيْدُ ۝

253. இந்த ரசூல்மார்கள் – இவர்களில் சிலரைப் பார்க்கினும் சிலரை மேன்மைப்படுத்தி வைத்தோம். இவர்களில் அல்லாஹ் (அவருடன்) பேசியவரும் இருக்கிறார்கள். இன்னும், அவர்களில் சிலரைப் (பல) அந்தஸ்துகளில் உயர்த்தினான்; இன்னும், மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து, ரூஹுல் குதுஸைக் கொண்டு அவரைப் பலப்படுத்தினோம். மேலும், அல்லாஹ் நாடி இருந்தால், (ரசூல்மார்களாகிய) அவர்களுக்குப் பின்னுள்ளவர்கள் தங்களுக்குத் தெளிவான) அத்தாட்சிகள் வந்த பின்னும், சண்டை செய்திருக்க மாட்டார்கள். என்றாலும், அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டனர்; ஆகவே, விசுவாசங் கொண்டவர்களும் அவர்களில் உண்டு. நிராகரித்தவர் களும் அவர்களில் உண்டு. மேலும், அல்லாஹ் நாடியிருந்தால், அவர்கள் சண்டை செய்திருக்க மாட்டார்கள். எனினும், தான் நாடியதை அல்லாஹ் செய்வான்.

அறிந்துகொள்:- நபித்துவம் என்பது தனிப்பெரும் அந்தஸ்தாகும். இது பலவிதமாக இல்லை. ஆதலின், நபித்துவம் என்ற விஷயத்தில் எல்லா நபிமார்களும் சம அந்தஸ்துள்ளவர்கள்தாம். அவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வில்லை. ஆனால், அந்த நபிமார்களுக்கு இருக்கிற இதர அந்தஸ்துகளைக் கவனித்துத்தான் அவர்களுக்குள்ள வித்தியாசம் ஏற்படுவதுண்டு.

உதாரணமாக, ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுக்கு கலீலாக (அன்பராக) இருக்கும் அந்தஸ்தை அடைந்திருக்கிறார்கள். இந்த அந்தஸ்து நபிமார்களில் வேறு யாருக்குமில்லை. ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நபித்துவம், அரசுரிமை, இனிமையான பேச்சு ஆகியவைகள் ஒன்று சேர்ந்திருந்தன. ஹளரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஜின், மனு, பறவை, காற்று ஆகியவைகள் வசப்பட்டன.

இவ்விதமான சக்தி இவர்களது தந்தை ஹளரத் தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் இருக்கவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனு ஜின் ஆகிய இரு வர்க்கத்திற்கும் நபியாக அனுப்பப்பட்டிருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த ஷரீஅத்து அதற்கு முன்னருள்ள எல்லா ஷரீஅத்துகளையும் மாற்றிவிட்டது. இவ்விஷயம் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மட்டும்தான் இருந்தது. வேறு யாருக்கும் இல்லை.

நபிமார்களுக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்ட அந்தஸ்தைப் பற்றி இந்த ஆயத்தின் ஆரம்பத்தில் பொதுவாகக் கூறி விட்டு சில நபிமார்களைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுக் கூறி இருக்கிறான். ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுடன் நேருக்கு நேராக உரையாடினார்கள். ஆகவே, அவர்களுக்கு "கலீமுல்லா" என்ற பெயர் வந்தது. ஆனால், ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனுடன் உரையாடிப் பேசிய பேச்சுக்களை மற்றவர்களும் செவியேற்றிருக்கிறார்கள். ஆதலின், இந்தக் குறிப்பிட்ட பேச்சுகள் அவ்வல்லோனின் அனாதி (அஜலி)யான, பூர்வீக(கதீ)மான வாக்கியமா அல்லவா என்ற விஷயத்தைப் பற்றி உலமாக்கள் ஒரு முகரான கருத்து தெரிவிக்க வில்லை.

وَرَفَعَ بَعْضَهُمْ دَرَجٰتٍ **இன்னும் அவர்களிற் சிலரைப் பார்க்கினும் சிலரை மேன்மைப் படுத்தி வைத்தோம்** என்ற இவ்வசனம் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டதாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு 3000க்கு அதிகமான முஅஜிஸாக்கள் என்னும் அற்புதச் செய்கைகள் அளிக்கப்பட்டிருந்தன. இவ்வளவு அதிகமான அற்புதங்கள் வேறு யாருக்கும் அளிக்கப்படவில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அளிக்கப் பட்டதுள்ள திருக்குர்ஆன் ஒன்றைத் தவிர மற்றைய எல்லா முஅஜிஸாக்(அற்புதங்)களும் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தாலும் கூட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏனைய நபிமார்களைப் பார்க்கினும் பல அந்தஸ்துகளில்

உயர்ந்தவர்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், திருக்குர்ஆன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது முஅஜிஸாத்து (அற்புதங்) களிலெல்லாம் மிகவும் முக்கியமானது. இது நித்தியமானது. இனி கியாமத்து நாள் வரை உலகில் நிலைத்திருப்பது.

ஹதீஸ்:- "மற்ற நபிமார்களைப் பார்க்கினும் ஆறு காரியங்களில் நான் சிறப்பிக்கப் பட்டிருக்கிறேன். 1. ஜவாமி உல்கலிம் (எல்லாப் பேச்சுகளையும் ஒருங்கே அமைந்ததாக) நான் அளிக்கப் பட்டிருக்கிறேன், 2. என்னைப் பார்த்தவுடனேயே அச்சம் உண்டாகும் விதமான ஒரு சாயை எனக்கு அளிக்கப்பட்டு உதவி புரியப் பட்டுள்ளேன், 3. எனக்கு கனீமத்துப் பொருள்கள் அதாவது பகைவர்கள் விட்டுச் சென்ற பொருள்களை அனுபவித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறேன், 4. எனக்கு உலகம் முழுவதும் மஸ்ஜிதாகவும் சுத்தமானதாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அதாவது எந்த இடத்தில் வேண்டுமானாலும் தொழுது கொள்ளலாம், 5. நான் எல்லா சிருஷ்டிகளுக்கும் நபியாக அனுப்பப்பட்டிருக்கிறேன், 6. என்னைக் கொண்டு நபித்துவம் முற்றுப் பெற்று விட்டது" என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَآتَيْنَا عِيسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنٰتِ **இன்னும் மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு தெளிவான அத்தாட்சிகளை நாம் கொடுத்தோம்** என்பதாகக் கூறியது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பித் தார்கள், நோயாளிகளைக் குணப்படுத்தினார்கள், பிறவிக் குருடரையும், வெண்குஷ்ட ரோகிகளையும் குணப்படுத்தினார்கள், களிமண்ணினால் பறவையின் உருவங்களைச் சிருஷ்டித்து அவற்றைப் பறக்கும் படி செய்தார்கள், மறைவான விஷயங்களைப் பற்றி அறிவித்தார்கள், இஞ்சில் வேதம் அருளப்பட்டார்கள் ஆகிய அற்புதங்களைக் கொடுக்கப்பட்டிருந்தார்கள் அற்புதங்கள் கொடுக்கப்பட்ட விஷயத்தில் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மட்டும் சொந்தமாக இல்லை. எல்லா நபிமார்களும் அற்புதங்கள் அளிக்கப்பட்டவர்களே யாவர். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய அற்புதங்களைக் குறிப்பாகச்

சுட்டிக் காட்டப்பட்டது. ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மேற்குறித்தவாறு அநேகம் அற்புதங்கள் நிகழ்ந்ததை யூதர்கள் பிரத்தியட்சமாக நேருக்கு நேராகப் பார்த்தும், மிகவும் கேலமான முறையில் அளவுக்கதிகமாக நிராகரித்து, அவர்களது நபித்துவத்தை அங்கீகரிக்கவில்லை. கிறிஸ்துவர்கள் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை அளவுக்கதிகமாகப் போற்றி திரியேக தத்துவத்தையுங் கூட ஏற்படுத்தி விட்டனர். இவ்விருவரது செய்கைகளும் தவறு என்பதை விளக்குவதற்காகவே அல்லாஹூ தஆலாவினால் கொடுக்கப்பட்ட அற்புதங்களைத்தான் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காண்பித்தார்களே யன்றி தங்களது சொந்தமாக சுயேட்சையாக ஒன்றையுங் காட்டவில்லை. ஆதலின், அவர்களுக்குத் தெய்வாம்சத்தை ஏற்படுத்துவது கூடாது என்பதைக் கிறிஸ்துவர்கள் உணர வேண்டும். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மந்திரத்தாலோ அல்லது தந்திரத்தாலோ அல்லது வஞ்சனை யினாலோ இவ்வற்புதங்களைக் காண்பிக்கவில்லை. இறைவனால் அளிக்கப்பட்டவைகளையே அவர்கள் காண்பித்தார்கள். ஆதலின், மற்றைய நபிமார்களைப் போல் ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஒரு நபிதான் என்பதை யூதர்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இதனைப் பற்றிக் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

ரூஹுல் குதுஸ் என்பது இரண்டு பதங்களாகும். ரூஹு என்பதற்கு ஆன்மா (உயிர்) என்பது பொருள். இந்த இடத்தில் ஆன்மா என்பது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறிக்கிறது. அல்குதுஸ் என்பதற்கு பரிசுத்தன் என்பது பொருள். இது அல்லாஹுத்தஆலாவின் திருப்பெயர்களிலொன்று. எனவே, அல்லாஹுத் தஆலா வினது பெயருடன் ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களது பெயரை இணைத்துக் கூறியது, ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கண்ணியத்தைக் கொடுப்பதற் காகவேயாகும். ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மூன்று முறை உதவி செய்திருக்கிறார்கள். அதாவது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது ஆரம்ப காலத்தில் ஒரு முறை இதனைக் குறித்து இறைவன்

மேலும் நமது ஆன்மாவிலிருந்து அவரில் நாம் ஊதினோம் என்பதாகக் கூறி இருக்கிறான். அவரது மத்திய காலத்தில் இரண்டாவது முறை உதவி புரிந்தார். அதாவது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்தான் ஹளரத் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு சகல அறிவுகளையும் கற்பித்துப் பகைவர்களை விட்டுக் காப்பாற்றினார்கள். பிறகு, ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை யூதர்கள் கொன்றுவிட வேண்டும் என்ற முடிவு செய்தபோது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவருக்கு உதவி புரிந்து வானத்திற்கு அவரை உயர்த்தினார்கள். இவ்வுதவிகளைக் குறித்துத்தான் இறைவன் இந்த ஆயத்தில் وَأَيَّدْنَٰهُ بِرُوحِ ٱلْقُدُسِ **“ரூஹுல் குதுஸைக் கொண்டு அவருக்கு நாம் உதவி புரிந்தோம்”** என்று கூறி இருக்கிறான்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَنفِقُوا۟ مِمَّا رَزَقْنَٰكُم مِّن
قَبْلِ أَن يَأْتِىَ يَوْمٌ لَّا بَيْعٌ فِيهِ وَلَا خُلَّةٌ وَلَا شَفَٰعَةٌ ۗ
وَٱلْكَٰفِرُونَ هُمُ ٱلظَّٰلِمُونَ ۝

254. விசுவாசங் கொண்டவர்களே! விற்பனையோ, நட்புரிமையோ, பரிந்து பேசுதலோ இல்லாத அத்தகைய ஒரு நாள் வருவதற்கு முன் உங்களுக்கு நாம் அளித்ததிலிருந்து செலவு செய்யுங்கள்; இன்னும், நிராகரிப்பவர்கள்தாம் வரம்பு மீறியவர்கள்.

أَنفِقُوا۟ مِمَّا رَزَقْنَٰكُم **உங்களுக்கு நாம் அளித்ததிலிருந்து செலவு செய்யுங்கள்** என்று இறைவன் பல இடங்களிலும் கூறி இருக்கிறான். ஆகவே, இப்படிக் கூறப்பட்ட இடங்களில் பெரும்பாலும் மக்கள் மீது கடமையானதும், கடமையில்லாததுமான தான தர்மங்களைப் பற்றியே பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த இடத்தில் கடமையான செலவு அதாவது ஜக்காத் கொடுப்பதைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. ஏனெனில், அக்கட்டளையை மீறிச் செலவு செய்யாமல் இருக்கிறவர்கள்தான் அநியாயக்காரர்கள் என்று

கண்டனம் செய்து கூறப்பட்டிருப்பது, முன்னர் கூறப்பட்ட கட்டளை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய கட்டளை என்பதை அறிவிக்கிறது.

اَللّٰهُ لَآ اِلٰهَ اِلَّا هُوَۚ اَلْحَیُّ الْقَیُّوْمُ ۚ۬ لَا تَاْخُذُهٗ
سِنَةٌ وَّلَا نَوْمٌ ؕ لَهٗ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الْاَرْضِ ؕ
مَنْ ذَا الَّذِیْ یَشْفَعُ عِنْدَهٗۤ اِلَّا بِاِذْنِهٖ ؕ یَعْلَمُ مَا
بَیْنَ اَیْدِیْهِمْ وَمَا خَلْفَهُمْ ۚ وَلَا یُحِیْطُوْنَ بِشَیْءٍ
مِّنْ عِلْمِهٖۤ اِلَّا بِمَا شَآءَ ۚ وَسِعَ كُرْسِیُّهُ السَّمٰوٰتِ
وَالْاَرْضَ ۚ وَلَا یَـُٔوْدُهٗ حِفْظُهُمَا ۚ وَهُوَ
الْعَلِیُّ الْعَظِیْمُ ۝

255. அல்லாஹ் (எப்படியுள்ளவனெனில்) அவனைத் தவிர (வேறு) நாயன் இல்லை. (அவன் எப்பொழுதும்) ஜீவித்திருப்பவன். (சிருஷ்டிகளின் காரியங்களை ஒழுங்கு செய்து) நிலை நிறுத்துபவன். அவனைத் தூக்கமும் பிடிக்காது, நித்திரையும் பிடிக்காது. வானங்களிலுள்ளதும் பூமியிலுள்ளதும் அவனுக்கே இருக்கின்றன. அவனது அனுமதியின்றி அவனிடம் மன்றாடுபவர் யார்? அவர்களுக்கு எதிரிலிருப்பதையும், அவர்களுக்குப் பின்னாலிருப்பதையும் அவன் அறிவான். இன்னும் அவனுக்குத் தெரிந்திருப்பதிலிருந்து அவன் நாடியதைத் தவிர (வேறு) எதனையும் (அமரர்கள் நபிமார்கள் முதலியவர்கள்) அறிந்து கொள்ள மாட்டார்கள். அவனது குர்ஸியானது வானங்களிலும் பூமியினும் விஸ்தீரணமாகி விட்டது. (வானம் பூமி ஆகிய) அவ்விரண்டையும் காப்பது அவனுக்குக் கஷ்டமில்லை. மேலும், அவன் (மிகவும்) உயர்ந்தவன் (இன்னும் மிகவும்) மகத்தானவன்.

அல்லாஹ் என்பது அவனுக்குரிய தொண்ணூற்றொன்பது திருப்பெயர்களில் மிகவும் பிரதானமானது. இந்தப் பெயர் அவனது தாத்தை அறிவிக்கிறது. இந்தப் பெயரை அவனுக்குத் தவிர வேறு யாருக்கும் எக்காரணத்தைக் கொண்டும் கூறுவதில்லை. இதனைத் தவிரவுள்ள இதர பெயர்களைச் சிற்சில காரணங்களால் அல்லாஹு தஆலாவைத் தவிரவுள்ளவைகளுக்கும் கூறமுடியும். **அவனைத் தவிர (வேறு) நாயன் இல்லை** என்ற இந்த வாக்கியம் அல்லாஹு தஆலா ஒருவன்தான் வணக்கத்திற்குரியவன், அவனுக்கு இணையானவர் எவருமில்லை, அவனைத் தவிரவுள்ளவைகளெல்லாம் சிருஷ்டிக்கப் பட்டவைகள் என்பதை அறிவிக்கிறது.

அல்ஹையு என்பதற்கு ஜீவித்திருப்பவன் என்பது பொருள். ஆயினும், மரணத்திற்கும், தாதுப்பொருளுக்கும் நேர்மாறானது. உணர்வு, நாட்டம், அசைதல் ஆகியவைகள் இருக்க வேண்டும் என்பதை இந்தப் பதம் அறிவிக்கிறது. மறு உலகில் மனிதனுக்குக் கிடைக்கிறவைகளில் நிரந்தர வாழ்வை அடைவதுதான் மிகவும் சிறப்புப் பொருந்தியதாகும். ஆகவே, அல்லாஹு தஆலாவுக்கு இந்தத் தன்மை இருப்பதாகக் கூறப்பட்டிருப்பது அவன் நிரந்தரமாக இருப்பவன், அவனுக்கு மரணம், அழிவு என்பதில்லை என்பதை அறிவிக்கிறது.

அல்கையூம் என்பது அல்லாஹு தஆலா எல்லா பொருட்களையும் எப்பொழுதும் நிர்வகித்து வருகிறான் என்பதையும், அவற்றைப் பரிபூரணத் தன்மை அடையச் செய்வதிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் கருத்தாக இருக்கிறான் என்பதையும் அறிவிக்கிறது.

اَلْحَیُّ الْقَیُّوْمُ **அல்ஹையுல்கையூம்** என்பது அல்லாஹு தஆலாவின் இஸ்முல் அஃலம் என்று சிலர் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- இஸ்முல் அஃலம் மூன்று சூரத்துகள் இருக்கின்றன. அதனைக் கொண்டு துஆச் செய்தால் அந்த துஆ ஒப்புக் கொள்ளப்படும். இன்னும் அதனைக் கொண்டு இறைவனிடம் துஆக் கேட்டால், உடனே கேட்டது கொடுக்கப்படும். சூரத்துல் பகரா, ஆல இம்ரான், தாஹா ஆகிய மூன்று சூரத்துகளிலும் இருக்கிறது

என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதாக அபீ உமாமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள். இன்னும் அவற்றை நான் தேடிப் பார்த்து சூரத்துல் பகராவில் ஆயத்துல் குர்ஸியில் அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கய்யூம் என்ற வாக்கியமும், ஆல இம்ரானில் அலிஃப், லாம், மீம் அல்லாஹு லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம் (1,2) என்ற வாக்கியமும், தாஹாவில் வஅனதில் ஷஜ்ஹு லில்ஹய்யுல் கய்யூம் (111) என்ற வாக்கியமும் என்று கண்டேன் என்பதாகவும் அபீஉமாமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறியதாக இமாம் பைஹக்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி ரிவாயத்துச் செய்திருக்கிறார் என்பதாக **"துர்ரேமன்தூர்"** என்ற திருக்குர்ஆன் விரிவுரையில் எழுதப்பட்டிருக்கிறது.

ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பிக்க நாடும் போதெல்லாம் **யாஹைய்யு யாகைய்யூம்** என்பதாக துஆச் செய்து கொண்டிருப்பார்கள். கடலில் செல்பவர்கள் தங்களது மரக்கலங்கள் மூழ்கிவிடும் என்று பயந்தால் **யாஹைய்யு யாகைய்யூம்** என்பதைக் கூறியே துஆச் செய்வார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இன்னும், "பத்ருப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்ப்பதற்காக வந்தேன். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுஜூது செய்தவர்களாக **யாஹைய்யு யாகைய்யூம்** என்பதாகப் பலமுறை திரும்ப திரும்ப கூறிக் கொணடே இருந்தார்கள். இன்னும் இறைவன் தங்களுக்கு வெற்றி யளிக்கும்வரை இதே விதமாகப் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தார்கள்" என்பதாக ஹளரத் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

لَا تَأْخُذُهُۥ سِنَةٌ وَلَا نَوْمٌ **"அவனைத் தூக்கமும், நித்திரையும் பிடிக்காது"** என்பது அல்லாஹு தஆலாவுக்கு தூக்கம், அசதி போன்றவைகள் ஏற்படுவதை விட்டு அவன் தூயவன் என்பதையும், சிருஷ்டிப் பொருள்களுக்குச் சம்பவிக்கிற இத்தன்மைகள்

அவனுக்குச் சம்பவிக்க மாட்டா என்பதையும், அப்படிச் சம்பவிப்பது கைய்யூம் என்கிற அவனது திருப்பெயருக்கு முரண்பட்டதாக இருக்கிறது என்பதையும் அறிவிக்கிறது.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தூங்கும்போது கனவில் மலக்குகளை நோக்கி "நமது றப்புக்கு தூக்கம் வருமா?" என்பதாக வினவினார்கள். ஆகவே, மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை மூன்று நாளைக்குத் தூங்க விடாமல் விழித்திருக்கச் செய்யும்படி மலக்குகளுக்கு அவன் கட்டளை யிட்டான். பிறகு ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி "உமது கையால் இரண்டு சீசாக்களை எடுத்துப் பிடித்துக்கொள்" என்று கட்டளையிட்டான். அவர் அவ்விரண்டையும் எடுத்துப் பிடித்துக் கொண்ட பின் அவருக்கு தூக்கத்தை விட்டான். அவர் கையிலிருந்த இரண்டு சீசாக்களும் நழுவிக் கீழே விழுந்து உடைந்து விட்டன. பிறகு அல்லாஹு தஆலா ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி "நான் வானங்களையும் பூமியையும் எனது குத்ரத் என்னும் வல்லமையைக் கொண்டு தடுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே எனக்குத் தூக்கம் அல்லது அசதி ஏற்பட்டு விடுமாயின் அவைகள் என்னை விட்டு நழுவி விடும்" என்று கூறினான் என்பதாக **தஃப்ஸீர் கஷ்ஷாஃபில்** எழுதப்பட்டிருக்கிறது.

ஸனத்துன் என்பது ஆழ்ந்த தூக்கத்திற்கு முன் வருகிற அசதி அல்லது தூக்க மயக்கம், அல்லது சிறு தூக்கத்திற்குப் பெயர்.

"நிச்சயமாக அல்லாஹ் தூங்க மாட்டான். மேலும் அவனுக்கு தூங்க தேவையுமில்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

لَهُۥ مَا فِى السَّمٰوٰتِ وَمَا فِى الْأَرْضِ **வானங்களிலுள்ளதும் பூமியிலுள்ளதும் அவனுக்கே உரியன** என்ற இந்த வசனம் அவனது கைய்யூம் என்ற தன்மையை ஊர்ஜிதம் செய்கிறது. இன்னும், தெய்வத் தன்மையில் அவனுக்கு வேறுயாரும் கூட்டாகவில்லை, அவன்தான் ஒரே இறைவன் என்பதை வலியுறுத்துகிறது. எவ்வாறெனில், அல்லாஹு

தஆலா வானங் களையும் பூமியையும், இவற்றில் உள்ளவை களையும் சிருஷ்டித்தான். இவைகளெல்லாம் அவனுக்கே சொந்தமானவை. எனவே, அவனுக்குச் சொந்தமாகவுள்ள ஒரு பொருள் அவனது தெய்வீகத் தன்மையில் கூட்டாக இருக்கிறது என்பது பொருந்தாத விஷயமாகும். இன்னும், இவைகள் மீது அவனைத் தவிர்த்து வேறு யாருக்கும் அதிகாரமில்லை. ஆதலால் அவைகள் அவனைத் தவிர்த்து வேறு யாரையும் வணங்கக் கூடாது என்ற விஷயமும் இதிலிருந்து வெளியாகிறது.

مَن ذَا الَّذِي يَشْفَعُ عِندَهُ إِلَّا بِإِذْنِهِ **அவனது அனுமதியின்றி அவனிடத்தில் மன்றாட்டம் செய்பவர் யார்?** என்ற இவ்வசனம் இணைவைப்போர் "விக்கிரகங்களும் மற்றவைகளும் தெய்வீகத் தன்மையில் அல்லாஹு தஆலாவுடன் கூட்டாக இருப்பதுடன், அவனிடம் எங்களுக்கு பரிந்து பேசுவாகவும் இருக்கின்றன" என்று கூறும் தாவாவை மறுப்பதாக இருக்கிறது. மேலும் இந்த வசனம் பரிந்து பேசுவதை அடியுடன் மறுத்து விடாமல் அவனது அனுமதியைப் பெற்றவர்கள் அவனிடம் பரிந்து பேசுவார்கள் என்பதையும் அறிவிக்கிறது.

يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ **அவர்களுக்கு எதிரில் உள்ளதையும், அவர்களுக்குப் பின்னாலுள்ளதையும் அவன் அறிவான்** என்ற இவ்வசனம் அவனது அறிவின் விசாலத்தைப் பற்றி அறிவிக்கிறது. அதாவது பரிந்து பேசுபவர் யார்? பரிந்துரை செய்யப்படுபவர் யார்? என்பதையும், அவர்களுடைய தன்மைகள் யாவை என்பதையும் அவனறிவான் என்பதை விளக்குகிறது.

எதிரிலுள்ளது என்பது மறுமையைப் பற்றி அறிவிக்கிறது. எவ்வாறெனில், கியாமத்து நாள் இனிமேல்தான் வருகிறதாக இருப்பதால் அதற்கு இந்தப் பெயர் வந்தது. அவர்களுக்குப் பின்னாலுள்ளது என்பது இம்மையைக் குறித்துச் சொல்லப்பட்டதாகும், ஏனெனில் இந்த உலகம் ஜனங்களது மறு உலகப் பிரயாணத்தில் பின்னுக்குச் சென்று கொண்டு இருக்கிறது.

وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ **இன்னும் அவனுக்குத் தெரிந்திருப்பதிலிருந்து அவன் நாடியதைத் தவிர வேறு எதையும் அவர்கள் அறியமாட்டார்கள்** என்பது அவனது அறிவின் விசாலத்தை அறிவிக்கிறது. அல்லாஹு தஆலாவிற்குத் தெரிந்திருப்பவைகள் அனைத்தையும் வேறு யாரும் அறிந்துகொள்ள முடியாது. நபிமார்கள் வலிமார்கள் முதலியவர் களுக்கு வஹியின் மூலமாகவும் இல்ஹாமின் மூலமாகவும் அவன் அறிவிப்பவைகளைத்தான் அவர்கள் அறிய முடியும், அதற்குமேல் அதிகமாக அவர்களும் தெரிந்து கொள்ள முடியாது. மலக்குகளாகிய வானவர்களும் கூட அவன் அறிவித்தவை களைத் தவிர அதிகமாகத் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே, இவர்களைத் தவிரவுள்ள மற்றவர்கள் இன்னும் மிகக் குறைவாகவே அறிந்திருக்கிறார்கள். இவ்வித நிலைமையில் மறைவானவற்றை அவன் அறிவித்தால் அல்லாமல் வேறு யாரும் தெரிந்து கொள்வதற் கில்லை என்பது நிதரிசனம்.

وَسِعَ كُرْسِيُّهُ السَّمَاوَاتِ وَالْأَرْضَ **இன்னும் அவனது குர்ஸீ வானங்களிலும் பூமியினும் விஸ்தீரணமானது** என்ற இந்த வசனம் அல்லாஹுத்தஆலாவுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் பற்றி உருவகமாகக் கூறப்பட்டது. ஏனெனில், குர்ஸீ என்பதற்கு ஆசனம் என்பது பதப் பொருள். இப்பொருளின்படி அல்லாஹு தஆலாவினுடைய ஆசனம் வானங் களையும் பூமியையும் பார்க்கினும் விஸ்தீரணமானது என்றும், இந்த ஆசனத்தை வைப்பதற்கு ஒரு இடமிருக்க வேண்டும் என்றும், இவ்வளவு பெரிய ஆசனத்தின் மீது அமருபவன் மிகப் பருமனுள்ள வனாக இருக்க வேண்டுமென்றும் ஏற்படுகிறது. எனவே, அல்லாஹு தஆலா மற்றவர்களைப்போல் குறிப்பான ஒரு ஸ்தூலமுள்ளவன் என்றும், ஸ்தூலங்களுக்குத் தேவையானவைகள் அவனுக்கும் தேவை என்றும் நினைக்க இடமுண்டு. அவன் தேவையற்றவன், நம்மைப் போல் ஸ்தூலமும் உருவமற்றவன்.

குர்ஸி என்பது ஏழு வானங்களையும் சூழ்ந்து கொண்டிருக்கக் கூடியது. எவ்வாறெனில், பூமி முட்டை வடிவத்தில் இருக்கிறது, முதலாவது வானம் இந்த பூமியைச் சுற்றிலும் சூழ்ந்து கொண்டு

இருக்கிறது, இரண்டாவது வானம் பூமியையும் முதலாவது வானத்தையும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. இவ்விதமாக ஏழு வானங்களும் ஒன்றுக்குமேல் மற்றொன்று சூழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த ஏழு வானங்களையும் சூழ்ந்து கொண்டிருப்பதற்கு **குர்ஸீ** என்று பெயர். இதற்கு மேல் அனைத்தையும் சூழ்ந்து கொண்டிருப்பதற்கு அர்ஷ் என்று பெயர். அர்ஷ் என்பதும் குர்ஸீ என்பதும் ஒன்றுதான் என்றும் இரண்டும் ஒரே பொருளுக்குள்ள இரு பெயர்களாகுமென்றும் சிலர் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- "காட்டில் கிடக்கும் ஒரு வளையம் காட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது எவ்வளவு அற்பமாக இருக்கிறதோ அதுபோல ஏழு வானங்களும் ஏழு பூமிகளும் குர்ஸியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் அற்பமாக இருக்கின்றன" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- குர்ஸி அர்ஷுக்கு முன்னாலிருக்கிறது. குர்ஸியுடைய ஒரு தூண் ஏழு வானங்கள் ஏழு பூமிகளினுடைய நீளமிருக்கிறது. குர்ஸியை நான்கு மலக்குகள் சுமந்து கொண்டிருக்கிறார்கள். அம்மலக்குகள் ஒவ்வொருவருக்கும் நான்கு முகங்கள் இருக்கின்றன. அவர்களது கால்கள் பூமிக்குக் கீழில் பாதாளத்தில் இருக்கின்றன. அவர்களில் ஒருவர் மனித உருவத்திலிருக்கிறார். இவர் மனிதருக்கு உணவும் மழையும் அளிக்கும்படி இறைவனை இரைஞ்சுகின்றனார். மற்றொரு மலக்கு காளை மாட்டின் உருவத்திலிருக்கிறார். இவர் மாடு முதலியவற்றிற்கு இரையளிக்கும்படி பிரார்த்திக்கின்றார். மற்றொரு மலக்கு புலியுடைய வடிவத்திலிருக்கிறார். இவர் புலி முதலிய கொடிய மிருகங்களுக்கு இரையளிக்கும்படி வேண்டுகிறார். மற்றொரு மலக்கு கழுகின் உருவத்திலிருக்கிறார். இவர் கழுகு முதலிய பறவையினங்களுக்கு இரையளிக்கும்படி கேட்கிறார்.

وَلَا يَئُودُهُ حِفْظُهُمَا **இன்னும் (வானம் பூமி ஆகிய) அவ்விரண்டையும் காப்பது அவனுக்கு கஷ்டமில்லை** என்பதற்கு அற்ப பொருளைக் காப்பது சுலபம் என்பதும், பிரம்மாண்டமான பொருளைக் காப்பது கஷ்டம் என்பதும் அவனிடமில்லை, நமது கண்ணுக்கு

அற்பமாகத் தோன்றுவனவும், பிரம்மாண்டமாகத் தோன்றுவனவும் அவனிடம் ஒன்றுதான் என்பது கருத்து. வானங்களையும் பூமியையும் கூறிவிட்டு, அவற்றிலுள்ளவைகளைக் கூறாமல் விட்டதேனெனில், இவ்விரண்டையும் காப்பதனாலேயே இவ்விரண்டிற்கு முன் உள்ள எல்லா பொருட்களையும் அவன் காப்பாற்றுகிறான் என்பது வந்து விடுகிறது. இவற்றில் உள்ளவைகளைக் காக்காமல் இவற்றை மட்டும் அவன் காக்கிறான் என்றால், அது பரிபூரணமான காவலாக மாட்டாது.

அல்அலிய்யு அதாவது உயர்ந்தவன் என்பதற்கு அதிகமாக வளர்ந்தவன் என்பது கருத்தன்று. கண்ணியத்தில், சிறப்பில், மகத்துவத்தில் மிக்கோன் என்பது கருத்து. இதுபோலவே **அல்அலீம்** அதாவது மகத்தானவன் என்பதற்கும் கருத்தாகும்.

இந்த ஆயத்து அல்லாஹு தஆலாவுடைய தாத்தையும் ஸிஃபத்துகள் என்னும் தன்மைகளையும் பற்றிய பிரதம விஷயங்களைத் தெளிவாக அறிவிக்கின்றது. இதனாற்றான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "திருக்குர்ஆனில் மிகவும் மகத்துவமுள்ள ஆயத்து ஆயத்துல் குர்ஸீயாகும். அதனை ஒருவர் ஓதுவாராயின் அல்லாஹு தஆலா ஒரு மலக்கை அனுப்புகிறான். அம்மலக்கு அந்த கணத்திலிருந்து மறு நாள் வரை அவருக்கு நன்மைகளை எழுதுவதுடன், அவரது தீமைகளை அழிக்கிறார்" என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

ரிவாயத்து:- "அலியே! இந்த ஆயத்தை நீர் ஒரு வீட்டில் ஓதுவீராயின் அந்த வீட்டில் முப்பது நாட்களுக்கு ஷைத்தானை வரவிடாமல் விரட்டி விடுவாய். இன்னும் அவ்வீட்டினுள் சூனியக்காரனும் சூனியக்காரியும் நாற்பது இரவுகள் வரை நுழைய மாட்டார்கள். இந்த ஆயத்தை உமது மக்களுக்கும், குடும்பத்திற்கும், உமது அயலகத்தாருக்கும் கற்றுக் கொடுப்பாயாக. இதனைப் பார்க்கினும் அதிக மகத்துவமுள்ள ஆயத்து அருளப்படவில்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு கூறினார்கள் என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- "இந்த ஆயத்துல் குர்ஸீயை ஃபர்லான தொழுகை ஒவ்வொன்றிற்கும் பிறகு எவர் ஓதுகிறாரோ மரணம் ஒன்றைத் தவிர வேறெதுவும் அவர் சுவர்க்கம் புகுவதை விட்டு அவரைத் தடுக்க மாட்டாது. ஸித்தீக், ஆபிது ஆகியவர்களைத் தவிர வேறு யாரும் இதனை விடாமல் ஓத மாட்டார்கள். ஒருவர் தனது படுக்கையில் இதனை ஓதுவாராயின் அவரும், அவரது அயலகத்தாரும் இவ்விதமாக அவரைச் சுற்றியுள்ள யாவரும் அச்சந்தீர்ந்தவர்களாகி விடுகிறார்கள்" என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று ஹளரத் அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சொன்னதாக மற்றொரு ரிவாயத்துச் சொல்லப் பட்டிருக்கிறது.

لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ ۖ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ۚ فَمَنْ
يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ
الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا ۗ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ۝

256. **மார்க்கத்திற் (சேர்ப்பதில்) நிர்ப்பந்தங் கிடையாது. (ஏனெனில்) வழி கேட்டிலிருந்து நேர்வழி (இன்னதென) நிச்சயமாக வெளியாகிவிட்டது. எனவே, எவன் ஷைத்தானை மறுத்து அல்லாஹ்வை விசுவாசிக்கிறானோ அவன் நிச்சயமாகப் பலமான கயிற்றைப் பற்றிக் கொண்டான். அதற்கு முறிவு (அறுபட்டுப் போதாது) கிடையாது. மேலும், அல்லாஹ் செவியேற்பவன், மிகவும் அறிந்தவன்.**

அன்ஸாரிகளில் ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். அவ்விருவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நபித்துவத்திற்கு முன்னதாகவே கிறிஸ்தவ மதத்தைத் தழுவிவிட்டனர். பின்னர், அவ்விருவரும் மதீனமா நகரம் வந்தபோது அவ்வன்ஸாரி தம்முடைய இரு புதல்வர்களையும் தடுத்து வைத்துக் கொண்டு அவர்களை இஸ்லாமாக்காமல் விடமாட்டேன் என்று கூறினார்.

அப்பொழுது "மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை" என்ற இந்த ஆயத்து அருளப்பட்டது.

மேலும், இந்த ஆயத்தில் கண்ட விஷயம் மஜூஸிகளையும், யூத, கிறிஸ்துவர்களையும் பொறுத்தது. இவர்களிடம் ஜிஸ்யா வரி வாங்கிக் கொண்டு இவர்களை இஸ்லாத்தில் சேரும்படி நிர்ப்பந்திக் காமலிருக்கலாம். ஆனால், அரபு நாட்டிலுள்ள இணை வைப்பாளர் களிடம் இவ்வாறு ஜிஸ்யா வாங்கிக் கொள்ளக் கூடாது. இவர்கள் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் அல்லது இவர்களுடன் யுத்தம் செய்ய வேண்டும். இவ்விரண்டில் ஒன்றைத் தவிர வேறு ஒன்றையும் செய்யக்கூடாது. இதனைக் குறித்து இறைவன் "**அவர்களுடன் நீங்கள் யுத்தம் செய்ய வேண்டும் அல்லது அவர்கள் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும்**" (சூரத்துல் ஃபத்தஹ் 16) என்பதாகக் கூறி இருக்கிறான்.

அர்ருஷ்து என்னும் இந்தப் பதம் நன்மையான காரியம் அனைத்தையும் பொதிந்த பதமாகும். ஆனாலும், இந்த இடத்தில் இப்பதத்திற்கு நித்திய சீதேவித்தனத்தின்பால் சேர்த்து வைக்கக்கூடிய ஈமான் என்பது கருத்து.

அல்கய்யி அழிச்சாட்டியம் என்பதற்கு இங்கு குஃப்ரு என்பது கருத்து.

اَللّٰهُ وَلِيُّ الَّذِيْنَ اٰمَنُوْا ۙ يُخْرِجُهُمْ مِّنَ الظُّلُمٰتِ
اِلَى النُّوْرِ ؕ وَالَّذِيْنَ كَفَرُوْٓا اَوْلِيٰٓـُٔهُمُ الطَّاغُوْتُ
يُخْرِجُوْنَهُمْ مِّنَ النُّوْرِ اِلَى الظُّلُمٰتِ ؕ اُولٰٓئِكَ
اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ۝

257. **அல்லாஹ் விசுவாசிகளுக்குக் காரியஸ்தனாக இருக்கிறான். அவர்களை இருளிலிருந்து பிரகாசத்தின்பால்**

வெளியேற்றுகிறான். ஆனால், எவர்கள் நிராகரிப்பவர்களாகி விட்டார்களோ அவர்களுக்குக் காரியஸ்தர்கள் ஷைத்தான்கள்தான். அவர்களைப் பிரகாசத்திலிருந்து இருளின்பால் (ஷைத்தான்கள்) வெளிப்படுத்துகிறார்கள். இவர்கள் நரகவாசிகளே. இவர்களில் அதில் எப்பொழுதுமிருப்பார்கள்.

வலி என்பதற்கு நேசிப்பவர், உதவி புரிபவர், காரியஸ்தர் என்பது பொருள்.

اَلطَّاغُوْتُ **அத்தாகூத்** என்பது பைசாசங்கள், சத்திய மார்க்கத்தை விட்டு விலகிச் செல்பவர்களான குறிகாரர்கள், ஜோஷியர்கள், தீமைகளைச் செய்பவர்களுக்குத் தலைமையாக இருப்பவர்கள் முதலிய யாவரையும் குறிக்கும்.

அன்னூர் அதாவது பிரகாசம் என்பதற்கு ஈமான், உறுதி முதலியவைகள் என்பது கருத்து. **அல்லுலுமாத்** அதாவது இருள்கள் என்பதற்கு குஃப்ரு, குழப்பம், இச்சைகளில் பிரவேசித்தல் முதலியவைகள் என்பது கருத்து.

விசுவாசம் கொண்டு இஸ்லாத்தைத் தழுவியவர்கள் குஃப்ரு முதலிய இருள்களை விட்டு வெளிவந்து விட்டார்கள். ஆதலின், விசுவாசங் கொண்டவர்கள் என்பதற்கு இந்த இடத்தில் விசுவாசங் கொண்டு இஸ்லாத்தைத் தழுவிவிட விரும்புபவர்கள் என்பது கருத்து, இது போல நிராகரிப்பாளராகி விட்டவர்கள் என்பதற்கு நிராகரிப்பாளராகி விடுவார்கள் என்று அல்லாஹு தஆலாவுக்குத் தெரிந்திருப்பவர்கள் என்பது கருத்து.

أَلَمْ تَرَ إِلَى الَّذِي حَاجَّ إِبْرَاهِيمَ فِي رَبِّهِ أَنْ آتَاهُ
اللَّهُ الْمُلْكَ إِذْ قَالَ إِبْرَاهِيمُ رَبِّيَ الَّذِي يُحْيِي وَيُمِيتُ
قَالَ أَنَا أُحْيِي وَأُمِيتُ قَالَ إِبْرَاهِيمُ فَإِنَّ اللَّهَ يَأْتِي

بِالشَّمْسِ مِنَ الْمَشْرِقِ فَأْتِ بِهَا مِنَ الْمَغْرِبِ
فَبُهِتَ الَّذِي كَفَرَ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ
الظَّالِمِينَ

258. அல்லாஹ் ஆட்சியைத் தனக்குக் கொடுத்த காரணத்தால் (நபி) இப்ராஹீமுடன் அவருடைய ரப்பு சம்பந்தமாகத் தர்க்கஞ் செய்த ஒருவனை நீர் பார்க்கவில்லையா? "எவன் உயிர்கொடுக்கவும் மரணத்தை அளிக்கவும் செய்கிறானோ அவனே என்னுடைய ரப்பு" என நபி இப்ராஹீம் கூறியபொழுது, "நானும் உயிர்ப்பிக்கிறேன் இன்னும், மரணிக்கச் செய்கிறேன்" என அவன் கூறினான். (அதற்கு) "நிச்சயமாக அல்லாஹ் கிழக்குத் திசையிலிருந்து சூரியனை உதிக்கச் செய்கிறான். ஆகவே, நீர் அதை மேற்குத் திசையில் உதிக்கச் செய்" என இப்ராஹீம் கூறினார். ஆகவே, நிராகரிப்பனாகிவிட்ட அவன் (நம்ரூத் ஸர்கோன் அரசன்) மயங்கி விட்டான் மேலும், அல்லாஹ் அக்கிரமக்காரரை நேர்வழியிற் சேர்க்க மாட்டான்.

இந்த ஆயத்து ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும், அவர்களது காலத்தில் பாபில் என்னும் நாட்டை ஆண்டு வந்த நம்ரூது என்னும் அரசனுக்கு மிடையில் நடந்த தர்க்கத்தைப் பற்றி அறிவிக்கிறது. இவ்வரசன் ஹளரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களது புதல்வரான ஸாம் என்பவரின் பேரன். கன்ஆன் என்பவரின் புதல்வன். இவன் பாபில் என்ற நகரில் சீரும் சிறப்புமாக ஆட்சி புரியும் காலத்தில் தனது படை பலத்தாலும், பணச்செருக்காலும் மமதை கொண்டு தன்னைப்போல் விக்கிரகம் செய்து, அதனை அவர்கள் வணங்க வேண்டும் என்று உத்தர விட்டானாம். எனவே, இவன் தனக்கு இறைவனளித்த அரசுரிமைக்கும் செல்வாக்குக்கும் நன்றி செலுத்திச் சன்மார்க்கத்தை வளரச் செய்ய

முயலுவதற்குப் பதிலாக அவன் விக்கிரக ஆராதனையை வளர்த்து மல்லாமல், தன்னை ஜனங்கள் வணங்க வேண்டும் என்றுங் கட்டளையிட்டான். இதனைக் குறித்துத்தான் இறைவன் أَنْ آتَاهُ اللَّهُ الْمُلْكَ **தனக்கு அல்லாஹ் ஆட்சியைக் கொடுத்ததற்காக** என்று கூறி இருக்கிறான்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை இறைவன் இந்த ஜனங்களுக்கு வழிகாண்பிக்கும் பொருட்டு நபியாக அனுப்பினான். அவர் விக்கிரக ஆராதனையை எதிர்த்துப் பிரசாரம் செய்ததால், அரசன் கோபமடைந்து அவரை அக்கினிக் குண்டத்தில் தள்ளிவிட வேண்டுமென்று முடிவு செய்து சிறையில் வைத்திருந்தான். பிறகு, அவரை அக்கினிக் குண்டத்தில் போடுவதற்காகச் சிறையில் இருந்து வெளியேற்றிய போது ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை நோக்கி "எங்களிடத்தில் நீர் உமது ரப்பைப் பற்றி பிரசாரம் செய்கிறீரல்லவா? அந்த றப்பு யார்?" என்பதாக வினவினான். அதற்கவர்கள் ஆயத்தில் கண்டவாறு رَبِّيَ الَّذِي يُحْيِي وَيُمِيتُ "எனது றப்பு உயிர்கொடுக்கச் செய்பவன் இன்னும் மரணிக்கச் செய்பவன்" என்று பதில் கூறினார்கள். இந்தப் பதிலிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களை அவன் சரியாக உணர்ந்து கொள்ளாமல் أَنَا أُحْيِي وَأُمِيتُ "நானும் உயிர் கொடுக்கச் செய்கிறேன் இன்னும் மரணிக்கச் செய்கிறேன்" என்று பதில் கூறி இரண்டு கைதிகளைக் கொண்டு வரச் செய்து ஒருவரைக் கொன்று விட்டு மற்றொருவரை விடுதலை செய்தான். எனவே, இவனது அறிவிற்குத் தக்கவாறு பதில் கொடுப்பதுதான் சரியென்று ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "எனது ரப்பு கிழக்குத் திசையிலிருந்து சூரியனை உதயமாகச் செய்கிறான். நீர் அதனை மேற்கிலிருந்து உதயமாகச் செய்" என்பதாகக் கூறினார்கள். இப்பதிலுக்கு அவன் தக்க மறுமொழி சொல்லத் தெரியாமல் தோல்வியடைந்தான். இவ்விபரத்தை இறைவன் இங்கு கூறி அவ்வரசன் தனக்குக் கிடைத்த பாக்கியத்திற்கு நன்றி செலுத்தாது அதனை மறந்து, சன்மார்க்கத்தைப் பற்றிய தக்க ஆதாரம் அவனுக்குத் தெளிவாகக் காண்பித்தும், அதனை அவன் நன்கு உணர்ந்தும் வேண்டுமென்றே அதனை ஒப்புக் கொள்ளாமல் நிராகரித்து விட்டதால்

அவன் நேர்வழியிற் சேரவில்லை. இவ்வாறு சத்தியத்தை உணர்ந்த பின்னரும் அதனை வேண்டுமென்றே நிராகரிப்பவர்களான அக்கிரமக் காரர்களுக்கு மறுமையில் சுவர்க்கத்தின்பால் செல்லும்படியான பாதையை இறைவன் காண்பிக்க மாட்டான் என்பதையும் விளக்கியுள்ளான்.

أَوْ كَالَّذِي مَرَّ عَلَىٰ قَرْيَةٍ وَهِيَ خَاوِيَةٌ عَلَىٰ
عُرُوشِهَا قَالَ أَنَّىٰ يُحْيِي هَٰذِهِ اللَّهُ بَعْدَ مَوْتِهَا ۖ
فَأَمَاتَهُ اللَّهُ مِائَةَ عَامٍ ثُمَّ بَعَثَهُ ۖ قَالَ كَمْ لَبِثْتَ ۖ
قَالَ لَبِثْتُ يَوْمًا أَوْ بَعْضَ يَوْمٍ ۖ قَالَ بَل لَّبِثْتَ
مِائَةَ عَامٍ فَانظُرْ إِلَىٰ طَعَامِكَ وَشَرَابِكَ لَمْ يَتَسَنَّهْ ۖ
وَانظُرْ إِلَىٰ حِمَارِكَ وَلِنَجْعَلَكَ آيَةً لِّلنَّاسِ ۖ وَانظُرْ
إِلَى الْعِظَامِ كَيْفَ نُنشِزُهَا ثُمَّ نَكْسُوهَا لَحْمًا ۚ
فَلَمَّا تَبَيَّنَ لَهُ قَالَ أَعْلَمُ أَنَّ اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ
قَدِيرٌ ۝

259. ஒரு நகரத்தின் மீது சென்ற (உஜைர் நபி என்ற) வரை நீர் பார்க்கவில்லையா? அதுவோ (அப்பொழுது) தன்னுடைய (வீட்டு) முகட்டின் மீது விழுந்து கிடந்தது. "(அதைப் பார்த்து) இது, அழிந்து (நாசமடைந்து) விட்டபின் இதை அல்லாஹ் எங்ஙனம் உயிர்ப்பிப்பான்" என்று (அவர்) கூறினார். ஆதலால், அல்லாஹ் அவரை நூறு வருடம்வரை மரணிக்கச் செய்தான். பின்பு அவரை

(உயிர் கொடுத்து) எழுப்பி "எவ்வளவு காலம் (இந்நிலையில்) தங்கியிருந்தீர்" என்று (அல்லாஹ்) கேட்டான். (அதற்கு) அவர் ஒருநாள் அல்லது ஒரு நாளிற் சிறிது தாமதித்தேன் எனக் கூறினார் (அதற்கு அல்லாஹ்) "அவ்வாறில்லை; நீர் நூறு வருடம் தங்கியிருந்தீர்; (இதோ), உம்முடைய உணவையும் உம்முடைய பானத்தையும் பாரும், அது மாறுபட்டு (வீசிப் போக வில்லை; இன்னும் (மடிந்து விட்ட), உம்முடைய கழுதையைப் பாரும், (இவை நீர் அறிந்து கொள்வதற்காகவும்) இன்னும் உம்மை மனிதர்களுக்கு அத்தாட்சியாக ஆக்குவதற்காகவும் (உமது உணவுக் கெட்டுப்போகாமலும் உமது கழுதையை மரணித்து உக்கிப்போன எலும்பாகவும் ஆக்கி வைத்தோம்). எனவே (அக்கழுதையின்) எலும்புகளை - அவற்றை நாம் எவ்வாறு (திரும்ப) உண்டாக்குகிறோம். பின்னும், நாம் அவற்றிற்கு (எவ்வாறு) சதையை உடுத்துகிறோம் என்று கவனியும்" என்று (அல்லாஹ்) கூறினான். ஆகவே, (விஷயம்) அவருக்குத் தெளிவான போது "நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் மிகச் சக்தி பெற்றவன் என்பதை நான் அறிவேன்" என்று அவர் கூறினார்.

ஒரு ஊர் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பது பைத்துல் முகத்தஸ் (எருசலேம்) என்னும் நகரைக் குறிக்கிறது. அந்த ஊரின் பக்கமாக நடந்து சென்றவர் ஹளரத் உஜைருப்னு ஷர்க்கியா அலைஹிஸ்ஸலாம் அவர்களாவார்கள். இந்த ஆயத்து முற்காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டுவதுடன் அல்லாஹு தஆலா சர்வ வல்லமையுள்ளவன் என்ற விஷயத்தையும் ஊர்ஜிதப் படுத்துகிறது. இச்சம்பவம் வருமாறு.

இஸ்ராயீலின் சந்ததியினருக்கு இறைவன் அநேகம் அருட்கொடைகளை கொடுத்தான். அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தி அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்காமல் அடிக்கடி மீறிக் கொண்டு வந்ததும், இவர்களது மீறுகை அளவிற்கதிகமாகி விட்டதால் இறைவன் அவர்களைத் தண்டித்துப் புத்தி புகட்டியதும் இதே சூரத்தில் இதற்கு முன் பல இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவமும் இஸ்ராயீலின் சந்ததியினர் செய்த அக்கிரமங் களுக்குத் தண்டனையாகவே நிகழ்ந்தது. அதாவது இஸ்ராயீலின்

சந்ததியினர் அளவுக்கு மீறி அநியாய அட்டூழியங்களைச் செய்து கொண்டிருந்த ஒரு சமயத்தில் பாபில் என்னு மிடத்தை ஆட்சி புரிந்து கொண்டிருந்த புக்து நஸர் என்னும் ஒரு அரசன் ஷாம் தேசத்தை நோக்கிப் படை யெடுத்து வந்தான். இஸ்ராயீலின் சந்ததியினர் அவ்வரசனை எதிர்த்து வெல்ல முடியாமற் தோல்வி யடைந்தனர். இவர்கள் தம்மை எதிர்த்துச் சங்கடம் விளைவித்ததற்காக அவ்வரசன் கோபமடைந்து இவர்களைப் பழிவாங்கும்படி தமது வீரர்களுக்குக் கட்டளையிட்டு விட்டான். ஆதலின், இஸ்ராயீலின் சந்ததியினரில் மூன்றிலொரு பாகத்தினர் வாளுக்கிரையாகி மடிந்தனர். மற்றொரு பாகத்தினர் கைதிகளாகப் பிடிக்கப் பட்டனர். மற்றவர்கள் தப்பிப் பிழைத்தனர். கைதிகளாகச் சென்றவர்களில் மட்டும் ஒரு லட்சம் ஆடவர்கள் அடிமைகளாக்கப் பட்டார்களாம். இவர்களை அவ்வரசன் தனது துணைவர்களான சிற்றரசர்களுக்கு, தலைக்கு நான்கு அடிமைகள் விகிதம் பகிர்ந்து கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படிக் கைதிகளாகச் சென்றவர்களில் ஹளரத் உஜைருப்னு ஷர்க்கியா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஒருவராவார்கள். சில காலத்திற்குப்பின் ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விடுதலை யடைந்து தமது கழுதையில் ஏறி பைத்துல் முகத்தஸ் நகருக்கு வந்தார்கள். அந்த நகரம் அப்போது மனித நடமாட்டம் இல்லாமலும், கட்டிடங்கள் இடிந்தும், பைத்துல் முகத்தஸ் என்ற மஸ்ஜிது பாழ்படுத்தப்பட்டும் கிடந்தது. இதனைப் பார்த்து ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆச்சரியமுற்று اَنّٰى يُحْيٖ هٰذِهِ اللّٰهُ بَعْدَ مَوْتِهَا "இந்த ஊர் அழிந்து போனபின் இதனை அல்லாஹ் எவ்விதம் செழிக்கச் செய்வான்?" என்பதாகக் கூறினார்கள். ஹளரத் உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவ்வாறு கூறியது அல்லாஹு தஆலாவுடைய ஆற்றலை நம்பாமற் சொன்னதன்று. இவ்வாறு அழிந்து போன இடங்கள் நீண்ட காலத்திற்குப் பிறகுதான் ஒருவாறு செம்மை யடைவது வழக்கமாக இருந்து வருவதை யொட்டிக் கூறியதாகும். ஆகவே, இறைவன் இவரை மற்றவர்களிடம் தனது வல்லமையை அறிவிக்கும் படியான அத்தாட்சியாகக் காண்பித்து அவர்களுக்கு மறுமையின் மீது நம்பிக்கை உண்டாகும்படி செய்வதற்காக அவரை நூறு வருட காலம்

இறந்தவராகவே கிடக்கும்படி செய்தான். எவ்வாறெனில், அவர் அவ்வூருக்குள் சென்று மரத்தினடியில் இறங்கி, அங்கு தமது கழுதையைக் கட்டி வைத்து விட்டு, ஊர் முழுவதையும் சுற்றிப் பார்த்து ஒருவரையும் காணாததால் மேற்கண்டவாறு அவ்வூரைப் பற்றிக் கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த மரங்களில் அத்திப் பழங்களைப் பறித்துப் புசித்து, திராட்சைப் பழத்திலிருந்து ரசமெடுத்து அருந்தி விட்டு தூங்கி விட்டார்கள். அப்பொழுது இறைவன் அவரை மரணிக்கச் செய்து விட்டான். அப்போது அவர் நல்ல பிராய முள்ளவராகவுமிருந்தார் அவரது உணவும் பானமுமாகிய அத்திப் பழம், திராட்சைப் பழம், திராட்சை ரசம் ஆகியவற்றில் எஞ்சியவைகளும் அவர் அருகிலேயே இருந்தன. அவர் மரத்தில் கட்டிவைத்திருந்த கழுதையும் அப்படியே இறந்து விட்டது. இறைவன் இவையனைத்தையும் மனிதர்கள், பறவைகள், மிருகங்களது கண்ணுக்குத் தென்படாமல் மறைத்து வைத்திருந்தான்.இது நிகழ்ந்த எழுபது வருடங்களுக்குப் பிறகு ஈரான் நாட்டு அரசர்களிலொருவர் பைத்துல் முகத்தஸ் வந்து அதனைப் புதுப்பித்துக் கட்டினார். அக்காலத்தில் புக்து நஸர் என்ற அரசன் இறந்து விட்டதால் இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விடுதலை கிடைத்து அவர்களும் வந்து குடியேறி அதனை வளஞ் செய்து வாழ்ந்து வந்தனர். இவ்விதமாக முப்பது வருட காலம் சென்றபின் இறைவன் ஹளரத் உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களை மறுபடியும் எழும்பச் செய்து மேற்கண்ட ஆயத்தில் கூறியபடி அவரிடம் வினவினான். அவர் எழும்பிப் பார்க்கும்போது விரைவில் கெட்டுப் போகக் கூடிய உணவுப் பதார்த்தமும், பானகமும் முன்பு வைத்ததுபோல புதிதாகவே இருப்பதையும், அவரது கழுதையின் எலும்புகள் மக்கிப்போயிருப் பதையும் கண்டார். பின்னர் அக்கழுதை உயிர்ப்பிக்கப்பட்டதை அவர் பிரத்தியட்சமாகப் பார்த்தார். இவ்விஷயம் ஆயத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

இவ்வாறு உயிர்ப்பித் தெழும்பிய ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது வீடு இருக்கும் தெருவிற்குச் சென்றார். ஆனால், அவரை அறிந்தவர் ஒருவருமில்லை. பின்னர், தமது இல்லம் சென்று, அங்கிருந்த ஓர் கண் பார்வையிழந்த

மூதாட்டியிடம் "இவ்வீடு உஜைர் நபியின் வீடல்லவா?" என்று வினவினார். அம்மூதாட்டி "மெய்தான், அவர் சென்று வெகு காலமாயிற்று, இங்கு உஜைர் நபியின் பெயரைச் சொல்பவர் எவருமில்லையே, தாங்கள் யார்?" என்பதாக வினவினாள். அதற்கந்த நபியவர்கள் "நானே உஜைர் நபி" என்றார். இதனைக் கேட்ட அம்மூதாட்டி அவரை நோக்கி "உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் கேட்கும் பிரார்த்தனை உடனே அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறுவது வழக்கம். நீர் உண்மையாகவே அவராக இருப்பின் எனது கண் பார்வை எனக்கு மறுபடியும் கிடைக்க வேண்டும்" என்று இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். எனது கண் பார்வை திரும்ப வரும்பட்சத்தில் உமது முகத்தைப் பார்த்து நான் உம்மைப் பற்றி சாட்சியம் சொல்லக்கூடும்" என்றாள். இவளது வேண்டுகோளின் படி ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனைப் பிரார்த்திக்கவே அவளுக்குக் கண் பார்வை திரும்பவும் வந்தது. அவள் அவரை அடையாளங் கண்டு ஒப்புக் கொண்டது மட்டுமில்லாமல், இஸ்ரவேலர்களது சபை கூடி இருந்த இடம் சென்று உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் வந்து விட்டார் என்பதாக அறிவித்தாள். அங்கு குழுமி இருந்தவர்கள் அனைவரும் "இது பண்டைப் பேச்சாகும், அவர் இப்பொழுது எங்கே வரப்போகிறார்" என்று கூறி அவளைப் பொய்ப்பித்தனர். அதற்கவள் தனக்கு கண்பார்வை வந்ததையும், முதுமையால் ஏற்பட்டிருந்த மெலிவும் சோர்வும் நீங்கி உடலில் பலம் வந்ததையும் குறித்து அவர்களிடம் கூறவே அவர்கள் அனைவரும் அவரை வந்து கண்டனர். அக்கூட்டத்தில் ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்களது 108 வயதுள்ள புதல்வரும், முதுமையை அடைந்த பேரர்களும் இருந்தனர். ஆகவே, 108 வயதினையுடைய அவரது புதல்வர் என் தந்தைக்குத் தோள் புஜத்தில் பிறைவட்டம் போல் மருவு ஒன்றிருந்தது. அந்த அடையாளத்தைப் பார்க்க வேண்டுமென்று கூறினார். அவ்வண்ணமே மரு இருக்கக் கண்டு யாவரும் அவரை அங்கீகரித்துக் கொண்டனர்.

முன்னர் புக்து நஸர் செய்த கொள்ளையாலும் படுகொலை யாலும் தவ்ராத் வேதம் தவறிப்போய்விட்டது. அதனை ஓதத்

தெரிந்திருந்தவர்களும் கொல்லப்பட்டுப் போயினர். ஆதலின், இஸ்ராயீலின் சந்ததியினர் தங்களது வேதம் தவறிப் போனதைப் பற்றி வருந்திக் கொண்டிருந்தனர். தவ்ராத் வேதத்தை அவர்கள் திரும்பவும் எழுதிக் கொள்வதற்காகவே, ஹளரத் உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதனை மனனமாக ஓதிக் காண்பித்தார். இதன் காரணமாக இஸ்ரவேலர்கள் ஹளரத் உஜைர் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களை அளவுக்கதிகமாக கொண்டாடி **அல்லாஹ்வின் புதல்வர்** என்பதாகக் கூறலாயினர்.

இந்த சம்பவத்தை இங்கு இறைவன் சுட்டிக் காண்பித்ததில் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பலவுள. ஒருவர் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டிய முறைப்படி பிரார்த்தித்தால் அவரது பிரார்த்தனை உடனே ஒப்புக் கொள்ளப்பட்டு அது அவருக்கு கைகூடும். ஆனால், அவ்வொழுங்குகளைத் தவற விட்டு விட்டால் அப்பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவதில் அநேகம் தடைகளேற்படுவது மட்டுமில்லாமல், அது நிறைவேறுவதும் தாமதத்திலேயே இருக்கும். இவ்விஷயம் இச்சம்பவத்திலும், இதற்கடுத்துள்ள ஆயத்தில் கண்ட விஷயத்திலும் நன்கு புலனாகும்.

தவிர, சில ஜனங்கள் மரணித்தோர் தங்களது பூத உடலுடன் உயிர்ப்பிக்கப்பட்டு எழும்புவதை மறுக்கின்றனர். மறுமையில் ஜனங்கள் கேள்வி கணக்குக் கேட்கப்பட்டு நரக சுவர்க்கங்களை அடைவதெல்லாம் ஆன்மாக்களே யன்றி ஸ்தூலமன்று என்பதாகப் பலர் விவாதம் செய்கின்றனர். இவர்களது இவ்விவாதம் இந்த சம்பவத்தால் மறுக்கப்படுகிறது. மறுமையில் இறந்தவர்களை உயிர்ப்பிப்பதும், அவர்களுக்கு நரக சுவர்க்கப் பலனை அளிப்பதும் இவ்வையகத்தில் அவர்களுக்கிருந்த பூத உடலுடன்தான் என்பதை ருஜுப் பிக்கிறது.

وَاِذْ قَالَ اِبْرٰهٖمُ رَبِّ اَرِنِىْ كَيْفَ تُحْىِ الْمَوْتٰى ؕ
قَالَ اَوَلَمْ تُؤْمِنْ ؕ قَالَ بَلٰى وَلٰـكِنْ لِّيَطْمَئِنَّ

قَلْبِىْ ؕ قَالَ فَخُذْ اَرْبَعَةً مِّنَ الطَّيْرِ فَصُرْهُنَّ
اِلَيْكَ ثُمَّ اجْعَلْ عَلٰى كُلِّ جَبَلٍ مِّنْهُنَّ
جُزْءًا ثُمَّ ادْعُهُنَّ يَاْتِيْنَكَ سَعْيًا ؕ وَاعْلَمْ اَنَّ اللّٰهَ
عَزِيْزٌ حَكِيْمٌ ۠

260. மேலும், என்னுடைய றப்பே! இறந்தவர்களை எவ்வாறு உயிர்ப்பிப்பாய் என்பதை எனக்கு (ப் பிரத்தியட்சமாய்)க் காட்டுவாயாக என இப்ராஹீம் கூறியபோது "நீர் நம்பவில்லையா" என அவன் கூறினான். (அதற்கு) அவர், ஆம்! (நம்பினேன்) என்றாலும் என் மனம் சாந்தியடைவதற்காக(க் கேட்டேன்) என்று கூறினார். (அதற்கு அவன்) அவ்வாறாயின், "நீர், பறவையிலிருந்து நான்கைப் பிடித்து அவற்றை உம்மிடம் சேர்த்துத் துண்டுபடுத்திக்கலந்து பின்பு அவற்றிலிருந்து ஒரு பாகத்தை ஒவ்வொரு மலையின் மீதும் வைப்பீராக. பின்பு, நீர் அவற்றை அழையும்! உம்மிடத்தில் அவைகள் விரைவாக வரும். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், ஞானமுள்ளவன் என்பதை நீர் அறிந்து கொள்வீர்" எனக் கூறினான்.

ஹளரத் இப்ராஹீம் கலீலுல்லாஹி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹு தஆலாவுடைய ஆற்றலையும் வல்லமையையும் நன்கு அறிந்திருந்தாலும், அவற்றைப் பிரத்தியட்சமாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக மேற்கண்டவாறு இறைவனைப் பிரார்த்தித்துப் பிரத்தியட்சத்தில் பார்த்துக் கொண்டார்கள். ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மயில், கோழி, காக்கை, கழுகு ஆகிய நான்கு பறவைகளைப் பிடித்து, மயிர், இறக்கை, கால், கழுத்து, தலை முதலிய அங்கங்களை எல்லாம் துண்டு துண்டாகப் பிரித்து அவற்றை ஏழு மலைகளில் கொஞ்சம் கொஞ்சமாக வைத்து விட்டு, அவற்றின் தலைகளை மட்டும் தம்மிடம் வைத்துக் கொண்டு 'அல்லாஹ்வின் கட்டளைப்படி நீங்கள் என்னிடம் வாருங்கள்' என்று

அழைத்தார். அவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து அதாவது அந்தந்தப் பறவைக்குரிய அங்கங்கள், உரோமங்கள், தசைகள் ஆகியவைகள் ஒன்று கூடி நான்கு பறவைகளுக்கும் உரிய உடல்கள் ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து அவற்றிற்குரிய தலைகளில் ஒட்டிக் கொண்டன. இவற்றை அவர்கள் அதி ஆச்சரியமாகக் கண்டு கொண்டார்கள்.

ஹளரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனிடம் தங்களது இருதயத்திற்கு ஜீவியம் வேண்டுமென்று கேட்டார்கள் என்பதாகவும், அவர்கள் கேட்டபடி அவர்கள் இருதயத்தை ஜீவியமுள்ளதாக்குவதற்குரிய வழியை இறைவன் காண்பித்தான் என்பதாகவும், அதன்படி அவர்கள் செய்தார்கள் என்பதாகவும் குஷைரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருப்பதுடன், நான்கு பறவைகள் என்றது நான்கு விதமான தன்மைகளைக் குறிக்கும் என்பதாகக் கூறி மயில் என்பதற்கு அழகு, காக்கை என்பதற்கு மேலெண்ணம், கோழி என்பதற்கு காம இச்சை, தாரா என்பதற்கு பேராசை என்பதாகவும் விளக்கம் கூறி, அல்லாஹு தஆலாவுடைய வணக்கத்தில் ஈடுபட்டுத் தனது அகத்திலுள்ள இந்நான்கு தன்மை களையும் கொல்லாத அவரது இருதயம் அல்லாஹு தஆலாவுடைய முஷாஹதாவினால் ஜீவியத்தை அடையாது என்பதாக விளக்கி இருக்கிறார்கள்.

مَثَلُ الَّذِينَ يُنفِقُونَ أَمْوَالَهُمْ فِي سَبِيلِ اللَّهِ
كَمَثَلِ حَبَّةٍ أَنبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِي كُلِّ سُنبُلَةٍ
مِّائَةُ حَبَّةٍ ۗ وَاللَّهُ يُضَاعِفُ لِمَن يَشَاءُ ۗ وَاللَّهُ وَاسِعٌ
عَلِيمٌ ۝

261. அல்லாஹ்வின் பாதையில் தங்களுடைய பொருள் களைச் செலவு செய்பவர்களுக்கு உதாரணமாவது – ஒவ்வொரு

குலையிலும் நூறு வித்துக்களுள்ள ஏழு குலைகளை முளைப்பித்த ஒரு வித்து (விதைத்தவனுக்கு ஒப்பாகும்; மேலும், தான் நாடியவருக்கு அல்லாஹ் (இதைவிட) இரட்டிப்பாக்குவான். இன்னும், அல்லாஹ் (கொடுப்பதில்) விசாலமானவன், மிகவும் அறிந்தவன்.

தர்மத்திற்காகச் செலவிடும் பொருளை இறைவன் வித்துக்குச் சமமாகக் கூறி இருக்கிறான்.

நிலத்தை நன்கு உழுது, பண்படுத்தி, பழுதில்லாத வித்தைப் பருவ காலத்தில் விதைத்தால் அது தக்க காலத்தில் ஒன்றுக்கு நூறாகவும் அதற்கதிகமாகவும் பலன் தருவதுபோல தர்மங் கொடுப்பவர் நல்லவராகவும், அவரது தர்மப்பொருள் நல்ல முதலாகவுமிருந்து அதாவது ஹராமான காரியங்கள் முதலியவற்றால் சம்பாதித்ததாக இல்லாமலுமிருந்து, தக்க இடத்தில் அதனைக் கொடுத்தால் அந்தத் தர்மம் ஒன்றுக்கு 700 ஆகவும் அதற்கதிக மாகவும் பெருகிப் பயனளிக்குமென்பது இந்த ஆயத்தின் கருத்து. விவசாயம் செய்பவர் திறமையாளராகவும், உழைப்பாளியாகவும் இருந்து, பூமியும் நல்ல விவசாயத்திற்கேற்ற இடமாகவும், வித்துச் சரியானதாகவும் இருந்து நிலத்தை நன்கு பண்படுத்தி பருவத்தே பயிர் செய்தால் அது மேலே கண்ட ஆயத்தில் கூறப்பட்ட பிரகாரம் ஒரு செடி ஏழு பணர்களாகப் பிரிந்து ஏழு கதிர்களை விடுவதும், கதிர் ஒன்றுக்கு நூறுமணிகளும் அதற்கதிகமாகவும் இருப்பது சாதாரணமாய் பலருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

ஹதீஸ்:- "நியாயமான முறையில் சம்பாதித்ததிலிருந்து ஒருவர் ஒரு பேரீத்தம் பழத்தினளவு தர்மம் செய்வாராயின் அல்லாஹு தஆலா அதனைத் தனது வலக்கரத்தால் ஏற்றுக் கொண்டு உங்களிலொருவர் தனது காட்டில் வளர்ப்பது போல அதனை ஒரு மலையைப் போலாகும் வரை வளர்க்கிறான். அல்லாஹு தஆலா நல்லதையல்லாது அங்கீகரிப்பதில்லை" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள் என்பதாக ஹளரத் அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஹதீஸ்:- மூமினின் தர்மம் அதனை அளிப்பவருக்கு வருகிற உலக ஆபத்துகளையும், கப்ருடைய ஃபித்னாவையும் கியாமத்து நாளின் வேதனையையும் தடுக்கும்.

ஹதீஸ்:- "தர்மம் என்பது ஒரு மரம். அதன் அடிமரம் சுவர்க்கத்தில் இருக்கிறது. அதன் பணர்கள் இவ்வுலகில் படர்ந்திருக்கின்றன. அவற்றில் ஒரு பணரைப் பற்றிப் பிடித்துக் கொண்டவரை அது சுவர்க்கத்தின்பால் இழுத்துக் கொள்ளும். கஞ்சத்தனம் என்பது ஒரு மரம். அதன் அடிமரம் நரகத்திலிருக்கிறது. அதன் பணர்கள் உலகில் படர்ந்திருக்கின்றன. அவற்றில் ஒன்றைப் பற்றிப் பிடித்துக் கொள்பவரை அது நரகின்பால் இழுத்துச் செல்லும்".

الَّذِينَ يُنفِقُونَ أَمْوَالَهُمْ فِي سَبِيلِ اللَّهِ ثُمَّ لَا يُتْبِعُونَ مَا أَنفَقُوا مَنًّا وَلَا أَذًى لَّهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

262. எவர்கள் தங்கள் பொருள்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்து பின்பு, தாங்கள் செலவு செய்ததை சொல்லிக் காண்பித்தலாலும் நோவினை செய்ததினாலும் தொடரும்படி செய்யவில்லையோ அவர்களுக்கு அவர்களின் (நற்) கூலி அவர்கள் ரப்பிடத்திலிருக்கிறது. மேலும், அவர்களுக்குப் பயமும் கிடையாது, இன்னும் அவர்கள் கவலைப் படவுமாட்டார்கள்.

மன்னு என்பது சொல்லிக் காண்பித்தல் அதாவது ஒருவருக்கு ஒரு உதவியைச் செய்து விட்டு உனக்காக நான் அநேகம் செய்தேன் என்று சொல்லுதல் அல்லது தான் செய்த உதவிக்காக அவர் மீது ஒரு கடமையை ஏற்படுத்தி விட்டதாகக் காண்பித்துக் கொள்ளுதல் முதலியவைகளாகும். **அதன்** என்பது நோவினை செய்தல் அதாவது உனக்கு நான் உதவி செய்திருக்க நீ நன்றி மறந்தாய்? எத்தனை முறை நீ என்னிடம் வந்து என்னைத் தொந்தரவு செய்து கொண்டே

இருப்பாய்? எத்தனை முறை என்னிடம் கேட்கிறாய்? உனக்கு வெட்கமில்லையா? என்பன போன்ற வாக்கியங்களைக் கூறுதல்.

ரிவாயத்து:- இந்த ஆயத்தும் இதற்கு முந்திய ஆயத்தும் ஹளரத் உதுமானுப்னு அஃப்பான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அப்துர் ரஹ்மானிப்னு அவ்ஃப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களைப் பற்றி அருளப்பட்டவைகளாகும். தபூக் போருக்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபிகளிடம் உதவி தேடியபோது ஹளரத் உதுமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஆயிரம் ஒட்டகைகளையும், அவைகள் சுமக்கும் உணவுப் பொருள்களையும், ஆயிரம் (தீனார் என்னும்) தங்க நாணயங்களையும் கொடுத்தார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது இரு கரங்களையும் உயர்த்தி "எனது றப்பே! நான் உதுமான் மீது திருப்தியடைந்திருக்கிறேன். நீயும் அவர்பால் திருப்தி யடைவாயாக" என்பதாகப் பிரார்த்தித்தார்கள். அப்துர் ரஹ்மானிப்னு அவ்ஃப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களிடமுள்ள எட்டாயிரம் தங்க நாணயங்களில் சரி பகுதியான நான்காயிரம் தங்க நாணயங்களைக் கொடுத்து "அல்லாஹ்வின் தூதரே! எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் நாலாயிரம் தங்க நாணயங்களை வைத்துக் கொண்டு எனது றப்புக்கு நாலாயிரம் தங்க நாணயங்களைக் கடன் கொடுத்திருக்கிறேன்" என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீ உமக்காக வைத்துக் கொண்டதிலும், நீர் கொடுத்ததிலும் அல்லாஹ் அபிவிருத்தியை அளிப்பானாக" என்பதாகப் பிரார்த்தித்தார்கள்.

ரிவாயத்து:- ஹளரத் அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது புதல்வரான ஹளரத் ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஒரு உணவை உண்ண வேண்டுமென்று விரும்பி அதனை வாங்குவதற்காக ஆறு திர்ஹம்களுக்குத் தமது தாயாரின் சட்டையை விற்பனை செய்தார்கள். அப்பொழுது ஒருவர் தர்மங் கேட்கவே அவற்றைக் கொடுத்து விட்டார்கள். பிறகு, வேறொருவர்

ஒட்டகம் விற்பதைக் கண்டு அதனைத் தவணை முறையில் வாங்கினார். பிறகு அதனை மற்றொருவரிடம் விற்று அதன் விலையைத் தமக்கு விற்றவரிடம் கொடுக்க விரும்பினார்கள். அப்பொழுது அவர் காணப்பட வில்லை. எனவே, இவ்விஷயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யாசகம் கேட்டு வாங்கியவர் சுவர்க்கத்தின் அதிபதியான **ரில்வான்** என்னும் மலக்காவார். தவணைக்கு விற்றவர் **மீக்காயீல்** அலைஹிஸ் ஸலாம் என்பவராவர். விலைக்கு வாங்கியவர் **ஜிப்ரயீல்** அலைஹிஸ் ஸலாம் என்பவராவார் என்று கூறினார்கள். அப்பொழுது இறைவன் இந்த ஆயத்தை அருளினான்.

قَوْلٌ مَّعْرُوفٌ وَمَغْفِرَةٌ خَيْرٌ مِّن صَدَقَةٍ يَتْبَعُهَا
أَذًى ۗ وَاللَّهُ غَنِيٌّ حَلِيمٌ ۝

263. நோவினையுடன் கூடிய தர்மத்தைப் பார்க்கிலும் நல்ல வார்த்தையும் மன்னித்தலும் மேலானது. மேலும், அல்லாஹ் (எவ்விதத்) தேவையுமில்லாதவன்; பொறுமையாளன்.

இரப்போருக்குக் கொடுக்க ஒன்று மில்லையானாலும் அவரது மனம் வருந்தாத முறையில் அழகான விதத்தில் பதில் சொல்ல வேண்டும். இரப்போர்களிற் சிலர் அதிகாரத் தோரணையில் அதட்டியும் கேட்பர். அப்படிக் கேட்டாலும் அவர்கள் பால் கோபமடையாமல் அவர்களை மன்னிக்க வேண்டும். இப்படிச் செய்வது தர்மங் கொடுத்து விட்டு அவர்களது மனதைப் புண்படுத்துவதைப் பார்க்கினும் சிறந்ததாகும். ஏனெனில், உடலுக்குச் சுகம் கொடுப்பதைப் பார்க்கினும் ஆத்துமாவிற்குச் சுகம் கொடுப்பது மிகவும் விசேஷமானது. ஆகவே, ஒருவருக்குத் தருமங் கொடுப்பது ஸ்தூலத்திற்குச் சுகம் கொடுப்பதாக இருந்தாலும், அவர் மனதைப் புண்படும்படி செய்வது அவரது ஆத்மாவிற்கு நோவினை செய்வதாக இருக்கிறது. ஸ்தூலத்திற்குச் சுகம் கொடுக்காமற் போயினும் அமுத மொழி பேசி ஆத்துமாவிற்கு

இன்பத்தை யளிப்பது இப்படிச் செய்வதைப் பார்க்கினும், மிகவும் விசேஷமாகும்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُبْطِلُوا صَدَقَاتِكُم بِالْمَنِّ
وَالْأَذَىٰ كَالَّذِي يُنفِقُ مَالَهُ رِئَاءَ النَّاسِ وَلَا
يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ ۖ فَمَثَلُهُ كَمَثَلِ صَفْوَانٍ
عَلَيْهِ تُرَابٌ فَأَصَابَهُ وَابِلٌ فَتَرَكَهُ صَلْدًا ۖ
لَّا يَقْدِرُونَ عَلَىٰ شَيْءٍ مِّمَّا كَسَبُوا ۗ وَاللَّهُ لَا
يَهْدِي الْقَوْمَ الْكَافِرِينَ ۝

264. விசுவாசங் கொண்டவர்களே! அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்ளாமலிருக்கும் நிலையில் மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காகத் தம்முடைய பொருளைச் செலவு செய்பவர்களைப்போல் உங்கள் தர்மங்களைச் சொல்லிக் காண்பித்துக் கொண்டும், நோவினை செய்வது கொண்டும் பயனற்றதாகச் செய்து விடாதீர்கள். ஆகவே, இ(வ்வாறு செய்ப)வனுக்கு உதாரணமாகிறது மண் (நிறைந்து) இருக்கிற ஒரு வழுக்குப் பாறையை அதை பலமான மழை பிடித்துப்பின்பு அதை வெறும் பாறையாக்கி விட்டுவிடுவதைப் போலாகும். அவர்கள் சம்பாத்தியம் செய்ததிலிருந்து எந்த பொருளின் மீதும் (மறுமையில்) அவர்கள் பயன்பெற மாட்டார்கள். மேலும், அல்லாஹ் நிராகரிக்கும் கூட்டத்தினருக்கு நேர்வழி காட்டமாட்டான்.

"ஒருவனைப் போல்" என்று சொன்னது நயவஞ்சகரைக் குறித்துச் சொல்லப்பட்டதாகும். ஏனெனில், நிராகரிப்பாளர்கள் பகிரங்கமாகவே அல்லாஹ்வுக்கு மாறு செய்வதால் அவர்கள் பிறரை

மெய்க்கச் செய்ய வேண்டிய அவசியமில்லை. முனாஃபிக்குகள் உள்ளுக்குள் நிராகரிப்பாளர்களாகவும் வெளிக்கு முஸ்லிம்களாகவும் இருப்பதால் தங்களை உண்மை முஸ்லிம்கள் என்று மற்றவர்கள் எண்ணிக் கொள்ளட்டும் என்பதற்காக தர்மம் கொடுக்கிறார்கள். இவர்களுடைய தர்மம் பிறரை மெய்க்கச் செய்வதால் வீணாகிப் பயனற்றதாகப் போவது போல உண்மை முஸ்லிம்களும் தர்மத்தைக் கொடுத்து, அதனைப் பிறரிடம் சொல்லிக் காண்பிக்கவோ அல்லது தர்மம் வாங்கியவரை புண்படுத்துவாராயின் அவர்களது தர்மமும் பயனில்லாமல் வீணாகி விடும் என்பது கருத்து.

وَمَثَلُ الَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمُ ابْتِغَاءَ مَرْضَاتِ
اللَّهِ وَتَثْبِيتًا مِنْ أَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍ بِرَبْوَةٍ
أَصَابَهَا وَابِلٌ فَآتَتْ أُكُلَهَا ضِعْفَيْنِ ۚ فَإِنْ لَمْ
يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ ۝

265. தங்கள் பொருள்களை அல்லாஹ்வின் பொருத்தத்தைத் தேடியும், தங்கள் மனங்களில் (நன்மையின்) உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியும் செலவு செய்பவர்களுக்கு உவமையானது:- உயரமான இடத்திலிருக்கிற தோட்டத்தைப் போலாகும். அதற்குப் பலமான மழை கிடைத்து அதனால் அது தன்னுடைய பலனை இரட்டிப்பாகத் தந்தது. ஆகவே, பலமான மழை கிடைக்காவிட்டாலும் இலேசான மழை கிடைக்கிறது. (அதனாலும் இரட்டிப்பான பலனைத் தருகிறது) மேலும் அல்லாஹ் நீங்கள் செய்வதைப் பார்க்கிறவன்.

பூமிகள் மிகவும் பள்ளத்தாக்காக இருந்தால் நல்ல பலன் கிடைப்பது அரிது. மிகவும் உயரமானதாக இருந்தால் ஆற்று நீர் போன்றவைகள் கிடைக்க மாட்டா. ஆதலின், இரண்டிற்கும் பொதுவான

உயரமும், சமதளமும், கரடு முரடில்லாததுமான பூமிக்கு **ரப்வத்** என்று பெயர்.

வாபில் என்பது பெரிய துளிகளுள்ள முரட்டு மழைக்குப் பெயர் அதாவது நமது நாட்டிலுள்ள கோடை மழைகள் போன்றவை. **தல்லு** என்பது சிறு துளிகளுள்ள மழை. அதாவது நமது நாட்டிலுள்ள சோனை மலை போன்றவை. இம்மழையின் துளிகள் சிறியனவாயிருந்த போதிலும் தொடர்ந்து பெய்யுமாயின் பெருந்துளிகளுள்ள மழையால் ஏற்படும் பயனை அளித்து விடும்.

எனவே, அல்லாஹு தஆலாவுடைய திருப்தியை மட்டும் நாடி உண்மையுடன் அளிக்கும் தர்மம் அதிக பயனைத்தரும் என்பதும், பிறரை மெய்ப்பிக்கச் செய்யும் தர்மம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் பயன்தராது என்பதும் இந்த ஆயத்திலிருந்தும் இதற்கு முந்திய ஆயத்திலிருந்தும் தெரிய வருகிறது.

أَيَوَدُّ أَحَدُكُمْ أَنْ تَكُونَ لَهُ جَنَّةٌ مِنْ نَخِيلٍ وَ
أَعْنَابٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ لَهُ فِيهَا
مِنْ كُلِّ الثَّمَرَاتِ وَأَصَابَهُ الْكِبَرُ وَلَهُ ذُرِّيَّةٌ
ضُعَفَاءُ فَأَصَابَهَا إِعْصَارٌ فِيهِ نَارٌ فَاحْتَرَقَتْ ۗ
كَذَٰلِكَ يُبَيِّنُ اللَّهُ لَكُمُ الْآيَاتِ لَعَلَّكُمْ تَتَفَكَّرُونَ ۝

266. உங்களில் ஒருவனுக்கு, பேரீச்சை மரம் திராட்சைக் கொடிகள் கொண்ட ஒரு தோட்டம் இருக்கிறது; அதற்கு கீழ் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன, அதில் அவனுக்கு எல்லாவிதமான கனி வர்க்கங்களுமிருந்து, அவனுக்கு வயோதிகம் ஏற்பட்டு அவனுக்குப் பலஹீனமான சந்ததிகளுமிருக்க அந்தத் தோட்டத்தை நெருப்புள்ள புயற்காற்றுத் தீண்டி அதை எரித்து விடுவதை அவன் விரும்புவானா?

இம்மாதிரியே அல்லாஹ் உங்களுக்குத் தன் கட்டளைகளைக் கொண்டுள்ள) வசனங்களை நீங்கள் கவனி(த்து நட)க்கும் பொருட்டு விவரிக்கின்றான்.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிற தோட்டம் சகல விதமான மரங்களையுடைய தோட்டமேயாகும். என்றாலும், பேரீத்த மரமும், முந்திரியும் ஜனங்களுக்கு அதிகப் பிரயோஜனமுள்ளனவாகவும் இலாபகரமானவைகளாகவும் இருப்பதால் அவ்விரண்டையும் சிறப்பாகச் சுட்டி காட்டப்பட்டிருக்கிறது.

நல்ல காரியத்தைச் செய்யும்போதே அதில் ரியா என்கிற பிறர் மெச்சுவதற்காகச் செய்யும் எண்ணத்தையும் கலந்து தங்களது நல்ல காரியங்களைக் கெடுத்துக் கொள்பவர்களது நிலைமையை இறைவன் இந்த ஆயத்தில் உதாரணத்தின் மூலமாக எடுத்துக் கூறி இருக்கிறான்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَنفِقُوا۟ مِن طَيِّبَٰتِ مَا كَسَبْتُمْ
وَمِمَّآ أَخْرَجْنَا لَكُم مِّنَ ٱلْأَرْضِ ۖ وَلَا تَيَمَّمُوا۟
ٱلْخَبِيثَ مِنْهُ تُنفِقُونَ وَلَسْتُم بِـَٔاخِذِيهِ إِلَّآ أَن
تُغْمِضُوا۟ فِيهِ ۚ وَٱعْلَمُوٓا۟ أَنَّ ٱللَّهَ غَنِىٌّ حَمِيدٌ ۝

267. விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள் சம்பாதித்ததில் நல்லதிலிருந்தும், பூமியிலிருந்து நாம் உங்களுக்கு வெளிப் படுத்தியதிலிருந்தும் (தர்மத்தில்) செலவு செய்யுங்கள். மேலும், அதிலிருந்து கெட்டதைச் செலவு செய்வதற்கு நாடவேண்டாம்; இன்னும் (அந்தக் கெட்டவைகளைப் பிறர் உங்களுக்குக் கொடுத்தால்) அதில் நீங்கள் கண்ணை மூடிக் கொள்கிறவர்களாக அல்லாமல் அதை வாங்க மாட்டீர்கள். மேலும், நிச்சயமாக அல்லாஹ் தேவையற்றவன்; புகழப் பெற்றவன் என்பதை அறியுங்கள்.

தர்மங் கொடுப்பவர் விவசாயம் செய்பவரைப் போலிருக்கிறார். ஒரு விவசாயி நல்லபலன் கிடைக்குமென்று அறிந்தால் அந்த விவசாயத்தை மிகவும் நேர்த்தியாகச் செய்வான், நல்ல வித்துக்களைச் சரியான காலத்தில் விதைப்பான். இதுபோலே தர்மங் கொடுப்பவரும், தாம் கொடுக்கும் தர்மம் மறுமையில் தமக்கு உதவும் என்பதை உறுதியாக நம்பி இருப்பாராயின் நல்ல பொருள்களையே தருமமாகக் கொடுப்பார்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தர்மங் கொடுப்பது சம்மந்தமாகத் தங்கள் தோழர்களைத் தூண்டினார்கள். ஆகவே அவர்கள் எல்லோரும் தங்கள் தங்களால் இயன்ற அளவிற்குத் தர்மங் கொடுக்கலானார்கள். அனால், ஹளரத் அபூ உமாமத்தில் பாஹிலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மட்டும் உதட்டை அசைத்தார்கள். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீங்கள் உங்களது உதட்டை அசைத்து, என்ன சொல்கிறீர்கள்?" என்பதாகக் கேட்டார்கள். அதற்கவர் "நபியே! ஜனங்களெல்லோரும் தர்மங் கொடுக்கிறார்கள். என்னிடத்தில் தர்மங் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. ஆகவே எனக்குள் **சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்** (அல்லாஹ் தூயவன், இன்னும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன, இன்னும் வணக்கத்திற்கு உரியன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, இன்னும் அல்லாஹ் மிகப் பெரியவன்) என்பதாகச் சொல்லிக் கொள்கிறேன்" என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீர் ஒரு கை நிறம்ப தங்கத்தை ஏழைகளுக்குக் கொடுப்பதைப் பார்க்கினும் உமது விஷயத்தில் இந்த வார்த்தைகள் மிகவும் மேலானவைகளாகும்" என்பதாகக் கூறினார்கள்.

ஆகவே, பணமுள்ளவர் தர்மங் கொடுத்தாலும், பணம் இல்லாதவர்கள் திக்ருகள், வஜீபாக்கள் ஓதுவது அந்தத் தர்மத்திற்குச் சமமாக இருக்கிறது என்பது இந்த ரிவாயத்திலிருந்து தெரியவருகிறது. ஆனால், பணமுள்ளவர்கள் தர்மங் கொடுக்காமல் வெறும் திக்ரு மட்டும் செய்து விடலாம் என்று நினைப்பது கூடாது.

الشَّيْطَانُ يَعِدُكُمُ الْفَقْرَ وَيَأْمُرُكُم بِالْفَحْشَاءِ ۖ
وَاللَّهُ يَعِدُكُم مَّغْفِرَةً مِّنْهُ وَفَضْلًا ۗ وَاللَّهُ
وَاسِعٌ عَلِيمٌ

268. (நீங்கள் ஜகாத் கொடுப்பதில்) ஷைத்தான் உங்களுக்கு வறுமையைக் கொண்டு பயங்காட்டுகின்றான். இன்னும் உங்களுக்கு (கஞ்சத்தனம் என்னும்) கெடுதிகளை (ச் செய்ய) ஏவுகின்றான். ஆனால் அல்லாஹ் தன்னிடமிருந்துள்ள மன்னிப்பையும், அபிவிருத்தியையும் வாக்களிக்கிறான். மேலும், அல்லாஹ் விசாலமானவன், மிக அறிந்தவன்.

ஒரு காரியத்தைச் செய்வதால் வருங்காலத்தில் நிகழப்போகிற பலனைப்பற்றி செய்தி அறிவிப்பதற்கு **அல்வஅது** என்று சொல்லப் படும். இப்பலன் செய்தியை அறிவிப்பவரால் நிகழ்ந்தாலும் சரி, அல்லது பிறரால் நிகழ்ந்தாலும் சரி இப்பலன் நன்மை பயப்பதாக இருந்தாலும் சரி அல்லது தீமை பயப்பதாக இருந்தாலும் சரி எல்லா வற்றிற்கும் பொதுவானது. எனவே, இந்த ஆயத்தில் இரண்டிடத்தில் **அல்வஅது** என்ற பதம் உபயோகப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்றில் தீமை பயப்பதைப் பற்றியும், மற்றொன்றில் நன்மை பயப்பதைப் பற்றியும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

அல்ஃபஹ்ஷாஉ என்பதற்கு மானக்கேடானது என்பது பதப் பொருளாகும். என்றாலும் இந்த இடத்தில் இப்பதத்திற்கு கஞ்சத்தனம் என்பது கருத்து. ஏனெனில், கஞ்சத்தனம் மனிதனது கண்ணியத்தைக் குறைக்கக்கூடிய தன்மையாகும்.

ஒரு காரியத்திற்குப் பிரதிபலனாகவும், அதற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அளவிற்கு அதிகமாகவும் உள்ளதற்கு **அல்ஃபழ்லு** என்று பெயர். தர்மம் கொடுப்பவருக்கு அவரது தர்மத்திற்குப் பிரதி

பலனாக இவ்வுலகிலேயே பிழை பொறுத்தலைச் செய்வதுடன் மறு உலகிலும் அவருக்கு நன்மையை அளிப்பதால் இங்கு **ஃபழ்லுன்** என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

يُؤْتِي الْحِكْمَةَ مَن يَشَاءُ ۚ وَمَن يُؤْتَ الْحِكْمَةَ
فَقَدْ أُوتِيَ خَيْرًا كَثِيرًا ۗ وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو
الْأَلْبَابِ

269. (அவன்) தான் நாடியவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கிறான். இன்னும், ஞானம் எவருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவன் நிச்சயமாக அநேக நன்மையைக் கொடுக்கப் பட்டு விட்டான். மேலும், அறிவுடையோரே தவிர (மற்றவர்கள் இதனால்) உபதேசம் பெற மாட்டார்கள்.

இந்த ஆயத்தில் இரண்டிடத்தில் **அல்ஹிக்மத்** (ஞானம்) என்ற பதம் சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது சொல்லப்பட்ட **அல்ஹிக்மத்** என்ற பதத்திற்கு திருக்குர்ஆனின் உபதேசங்கள் என்பது கருத்து. இரண்டாவது இடத்தில் சொல்லப்பட்ட **அல்ஹிக்மத்** என்ற பதத்திற்கு கல்வியும் கல்வியின் படி நடக்கும் தன்மையும் என்பது கருத்து. எனவே, இத்தன்மையை அடைந்தவர் இம்மை மறுமை இரண்டிலும் வெற்றி பெற்றவராவார்.

அல்பாபு என்பது **லுப்பு** என்பதன் பன்மைச் சொல். சந்தேகம் என்ற வாடையில்லாமலும், மன இச்சையைப் பின்பற்றுந் தன்மையில்லாமலும் உள்ள சுத்தமான அறிவு என்பது கருத்து. எனவே, ஒருவர் அறிவாளியாக இருந்து அவரது அறிவு அவரது இச்சையை வெல்லாமலும், அந்த அறிவைக் கொண்டு அவர் பிரயோஜனம் பெறாமலும் இருப்பாராயின் அவர் அறிவில்லாத வருக்குச் சமமாகவே இருக்கிறார். தவிரவும், இது அல்லாஹ

தஆலாவுடைய ஜலாலி ஜமாலியான தன்மைகள் தஜல்லியாகி (தோன்றி) சிருஷ்டிப் பொருளாயிருத்தல் என்ற தன்மைகள் சிருஷ்டித்தவனாக இருப்பவனின் தன்மைகளை முஷாஹதாச் செய்தவன் (பார்ப்பதன்) மூலம் அழியும் போது நபிமார்கள் வலிமார்களது இருதயங்களில் இறைவனால் நன்கொடையாக அளிக்கப்படுகிறது. எனவே, அப்போது பொருள்களது அகமியங் களைக் கொண்டுள்ள இரகசியங்கள் அவர்களுக்கு வெளியாகும்.

وَمَا أَنفَقْتُم مِّن نَّفَقَةٍ أَوْ نَذَرْتُم مِّن نَّذْرٍ
فَإِنَّ اللَّهَ يَعْلَمُهُ ۗ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنصَارٍ

270. நீங்கள் (தர்மசி) செலவிலிருந்து எதைச் செலவு செய்தாலும், நேர்ச்சையிலிருந்து எதை நீங்கள் நேர்ச்சை (நதர்) செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை அறிகிறான். மேலும், அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் இல்லை.

நல்ல காரியத்திலோ, அல்லது கெட்ட காரியத்திலோ, கொஞ்சமாகவோ அல்லது அதிகமாகவோ, பகிரங்கமாகவோ அல்லது இரகசியமாகவோ எவ்விதம் செலவு செய்தாலும் அதனை அல்லாஹு தஆலா அறிந்து கொள்வதுடன் நல்ல காரியத்திற்குப் பிரதிபலனையும், தீயகாரியத்திற்குத் தண்டனையையும் அளிக்கிறான். இதுபோலவே நேர்ச்சை செய்து கொள்வோரும் நல்ல காரியத்திற்காகவோ அல்லது கெட்ட காரியத்திற்காகவோ நேர்ச்சை செய்து கொண்டாலும் அதனை இறைவன் அறிந்து கொள்வதுடன் தக்கது செய்கிறான். ஆகவே, பாவமான காரியத்திற்குச் செலவு செய்பவர், பாவமான காரியத்திற்காக வேண்டுதல் செய்து கொள்வோர், தர்மம் செய்யாதிருப்போர், வேண்டுதல்களை நிறைவேற்றாதிருப்போர் முதலிய அக்கிரமக் காரர்களுக்கு அளிக்கப்படும் வேதனையை ஷஃபாஅத்துச் செய்வதன் மூலமாகவோ அல்லது வேறு வகையாலோ தடுத்து விடக்கூடியவர்கள் எவருமில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்தாகும்.

إِن تُبْدُوا الصَّدَقَاتِ فَنِعِمَّا هِيَ ۖ وَإِن تُخْفُوهَا
وَتُؤْتُوهَا الْفُقَرَاءَ فَهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَيُكَفِّرُ
عَنكُم مِّن سَيِّئَاتِكُمْ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ
خَبِيرٌ

271. தர்மங்களை நீங்கள் பகிரங்கப்படுத்தினால் (அது பிறரையும் தூண்டுவதாக இருப்பதால்) அது நல்லதுதான். ஆனால், அதை நீங்கள் மறைத்து அதை ஏழைகளுக்கு நீங்கள் கொடுத்தால் அது உங்களுக்கு (இன்னும் மிக) நன்மையாக இருக்கும். இன்னும், உங்களுடைய தீமைகளை உங்களை விட்டு அது நீக்கும். மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வதை மிகவும் அறிந்தவன்.

தர்மம் செய்வதை மறைத்துச் செய்தாலும் பகிரங்கமாகச் செய்தாலும் நன்மை உண்டு. ஆனால், கீர்த்திக்காகவும் புகழுக்காகவும் பகிரங்கமாகப் பிறர் அறிய தர்மம் செய்வதில் நன்மை இல்லை. இதனாற்றான், முற்காலத்திலிருந்த பெரியோர்கள் மிகவும் இரகசியமாகத் தர்மம் செய்து வந்தனர். கண் பார்வையற்றவர்கள் தங்களைப் பார்த்துக் கொள்ள முடியாது என்பதற்காகச் சிலர் கண் பார்வையற்றவர்களுக்கு மட்டும் தர்மம் செய்தனர். வேறு சிலர், ஏழைகள் தூங்கும்போது அவர்களது உடையில் பணத்தைக் கட்டிவிட்டு மெதுவாகச் சென்று விடுவர். மற்றும் சிலர் ஏழைகள் செல்லும் இடங்களில் பணத்தை முடிந்து வைத்து விடுவர். இவ்விதமாக தங்களது தர்மத்தை தர்மம் வாங்குபவர்கூட அறியாத விதமாக முற்காலத்தில் உள்ளவர்கள் தர்மம் செய்தனர். இதற்குக் காரணம் "புகழை விரும்புவோர், பிறர் மெச்சச் செய்வோர், சொல்லிக் காண்பிப்போர் ஆகியவர்களின் தர்மம் அங்கீகரிக்கப்பட மாட்டாது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருப்பதால் தங்களது தர்மம் இந்த இனங்களில் எதிலும் சேர்ந்து விடலாகாது

என்பதற்காகவேயாகும். ஆனால், ஒருவர் தர்மம் கொடுப்பதைப் பார்த்து மற்றவரும் தர்மம் கொடுப்பார்கள் என்றிருந்தால் அப்படிப்பட்ட மனிதர் பகிரங்கமாகச் செய்யும் தர்மத்தையும் மறைத்துச் செய்யும் தர்மத்தையும் சிலாகித்துக் கூறியுள்ளான். என்றாலும், இந்த ஆயத்தில் சொல்லப்பட்டுள்ள பகிரங்கமாகச் செய்யும் தர்மத்தைக் கொண்டு கடமையான தர்மம் என்பதும், மறைவான தர்மத்தைக் கொண்டு கடமையில்லாத தர்மம் என்பதும் கருத்து என்பதாகவும் சில இமாம்கள் கூறி இருக்கிறார்கள்.

நிற்க, தர்மம் பகிரங்கமாகக் கொடுக்கப்பட்டாலும் இரகசியமாகக் கொடுக்கப்பட்டாலும் அதனை ஏழைகள் முதலியவர் களுக்கே கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்க இந்த ஆயத்தில் மறைவாகத் தர்மம் கொடுப்பதைக் கூறி இருக்குமிடத்தில் **“அவற்றை ஏழைகளுக்குக் கொடுத்தீர்களானால்”** என்று கூறி இருப்பது இலவசமாகப் பணம் கிடைப்பதை உணர்ந்தால் ஏழை பணக்காரர் முதல் யாவரும் தர்மம் வாங்குவதற்கு முன் வருவர். என்றாலும், பகிரங்கமாகக் கொடுக்கப்படும் தர்மத்தை வாங்க பணக்காரர் முன் வரமாட்டார்கள். ஏனெனில் தர்மம் வாங்குவதைப் பிறர் பார்த்தால் கேவலமாக மதிப்பர் என்று எண்ணி அஞ்சுவர். இரகசியமாகத் தர்மம் வாங்குவதில் இத்தகைய அச்சமில்லாததால் இரகசியமாக தர்மத்தை வாங்கப் பணக்காரர்களும் முன் வருவர். ஆதலால், ஏழை பணக்காரர் என்பதை நன்கு கவனித்து ஏழைகளுக்குக் கொடுப்பது அவசியமாகும் என்பதற்காகவே இவ்வாக்கியம் இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது.

لَيْسَ عَلَيْكَ هُدٰىهُمْ وَلٰكِنَّ اللّٰهَ يَهْدِيْ مَنْ
يَّشَآءُ ۗ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ ۗ وَمَا
تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ ۗ وَمَا تُنْفِقُوْا
مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ ۝

272. அவர்களை நேர்வழியிற் சேர்ப்பது உமது பொறுப்பல்ல. எனினும், தான் நாடியவர்களை அல்லாஹ் நேர்வழியிற் சேர்ப்பான். ஆகவே பொருள்களிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்கின்றீர்களோ அது உங்களுக்காகத்தான். மேலும், நீங்கள் அல்லாஹ்வின் அருளைத் தேடுதற்கன்றி நீங்கள் செய்வதில்லை; ஆகவே, பொருளிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தீர்களோ அது உங்கள்பால் சேர்ப்பிக்கப்படும். இன்னும் நீங்கள் அநீதி செய்யப்படமாட்டீர்கள்.

முஸ்லிம்களில் ஏழைகள் அதிகமாகி விட்டபோது முஸ்லிம்கள் அல்லாதவருக்கு தர்மங்களைக் கொடுக்க வேண்டாமென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களைத் தடுத்து விட்டார்கள். முஸ்லிம்கள் இணை வைப்பாளர்களுக்குத் தர்மங் கொடுக்காததைக் கண்டு அவர்கள் இந்த தர்மத்தை வாங்குவதற்காக வேணும் இஸ்லாம் மார்க்கத்தில் சேரட்டும் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நோக்கம். எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது இந்நோக்கம் சரியன்று என்பதை இறைவன் **“அவர்களை நேர்வழியிற் சேர்ப்பது உமது பொறுப்பல்ல”** என்ற வசனத்தின் மூலம் அறிவித்து, நன்மையைச் செய்யும்படியும், தீமையைச் செய்யவேண்டாமென்றும் ஜனங்களிடம் அறிவிப்பது மட்டுமே உமது கடமை என்பதாக அறிவித்துள்ளான் என்பதாகச் சொல்லப்படுகிறது.

எனவே, கடமையாக இல்லாத தானதர்மங்களை நிராகரிப்பாளர்களுக்கும் கொடுக்கலாம் என்பது இதிலிருந்து தெரியவருகிறது. கடமையான தானதர்மங்களை நிராகரிப்பாளர் களுக்குக் கொடுக்கும் விஷயத்தில் இமாம்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறது. கடமையான தானதர்மங்களை நிராகரிப்பாளர்களுக்குக் கொடுப்பது கூடும் என்பதாக இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள். மற்றவர்கள் (இமாம்கள்) கொடுக்கக் கூடாது என்பதாக தடுத்து இருக்கிறார்கள்.

لِلْفُقَرَآءِ الَّذِيْنَ اُحْصِرُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ لَا

يَسْتَطِيعُونَ ضَرْبًا فِي الْأَرْضِ يَحْسَبُهُمُ الْجَاهِلُ
أَغْنِيَاءَ مِنَ التَّعَفُّفِ تَعْرِفُهُمْ بِسِيمَاهُمْ لَا يَسْأَلُونَ
النَّاسَ إِلْحَافًا وَمَا تُنْفِقُوا مِنْ خَيْرٍ فَإِنَّ اللَّهَ
بِهِ عَلِيمٌ

273. அல்லாஹ்வின் பாதையில் (மார்க்கத் தொண்டு புரிவதற்கென்றே தங்களைக்) கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற அந்த ஏழைகளுக்கு (தர்மஞ் செய்யுங்கள்) அவர்கள் (வியாபாரத்தின் பொருட்டோ அல்லது வேறு பிழைப்பின் பொருட்டோ) பூமியில் பயணம் செய்யச் சக்திபெற மாட்டார்கள். (அவர்கள் யாசகஞ் செய்யாமற் தங்களைப்) பேணியிருப்பதால், அவர்களை அறியாதவர்கள் செல்வந்தர் என்று நினைப்பர். அவர்களின் அடையாளங்களைக் கொண்டு அவர்களை நீர் தெரிந்து கொள்வீர்; அவர்கள் ஜனங்களிடத்தில் பிடிவாதமாகக் கேட்கமாட்டார்கள். மேலும், பொருளிலிருந்து எதை நீங்கள் (தர்ம வழியிற்) செலவு செய்தீர்களோ அதை நிச்சயமாக அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

இந்த ஆயத்து மதீனா முனவ்வராவிலிருந்த அஸ்ஹாபுஸ்ஸுஃப்பா என்பவர்களைக் குறித்து அருளப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. இவர்கள் குறைஷிகளிலுள்ள முஹாஜிர்களாவார்கள். இவர்களில் ஏறக்குறைய 400 பேர் இருந்தனர். இவர்களுக்கு மதீனா முனவ்வராவில் வீடுவாசல்களோ சொத்துக்களோ இல்லை. குடும்பத்தினரோ எவருமில்லை. இவர்கள் மஸ்ஜிதுன்னபவியில் தங்கி இருந்து கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அருளப்படும் திருக்குர்ஆனையும், மார்க்க விஷயங் களையும் கற்றுக் கொண்டிருந்தனர். அக்கம் பக்கத்தில் ஏற்படுகிற சிறுசிறு சச்சரவுகளை அடக்குவதற்காகவும், இஷாஅத்தே இஸ்லாத்திற்காகவும் இவர்கள் அனுப்பப்பட்டு வந்தார்கள். இவர்கள் தங்களது ஜீவனத்திற்காகச்

சொந்தத் தொழில் செய்யாமலும், வர்த்தகம் முதலியவைகள் செய்யாமலும் இருந்ததால், இவர்கள் பரம ஏழைகளாகவும், அன்றாடம் உணவுக்குக்கூட நிரந்தரமான ஏற்பாடு இல்லாதவர்களாகவும் இருந்தனர். ஆயினும், இவர்கள் ஜனங்களிடம் சென்று யாசகம் வாங்குவதோ, தங்கள் பசியை ஆற்றும்படி கெஞ்சிக் கேட்பதோ இல்லை. இவர்களது முகக் குறியைக் கண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவர்களது பசிப்பிணியை ஆற்றுவதற்கு அவ்வப்போது முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். எனவே, சன்மார்க்கத்தைப் பரவச் செய்வதற்காகத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற இவர்களுக்கு தர்மப் பொருள்களைக் கொடுக்கும்படி இறைவன் கூறியுள்ளான்.

ரிவாயத்து:- ஒருநாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஸ்ஹாபுஸ் ஸுஃப்பாக்களுடன் தங்கியிருந்து, அவர்களது எளிமையை கண்டு, அவர்களை நோக்கி "அஸ்ஹாபுஸ்ஸுஃப்பாக்களே! உங்களுக்கு நற்செய்தியுண்டாவதாக, நீங்கள் எந்த நிலைமையிலிருக்கிறீர்களோ, அந்த நிலைமையைப் பொருந்திக் கொண்டவராக எனது உம்மத்தில் ஒருவர் அல்லாஹுத்தஆலாவைச் சந்திப்பாராயின் நிச்சயமாக அவர் எனது தோழர்களிலொருவரே" என்பதாகக் கூறினார்கள் என்று ஹளரத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

இல்ஹாஃப் என்பது மனிதர்களை நிர்ப்பந்தப்படுத்தி இரத்தல் அதாவது தர்மம் கொடுக்கும்வரை விடாமல் இருந்து கேட்குதல். இவ்விதமாகத் தர்மம் கேட்பது கூடாது. ஆனால், தேவை ஏற்பட்ட போது ஒருவரிடம் கேட்டு வாங்கிக் கொள்வதை இஸ்லாம் விலக்கவில்லை. என்றாலும், யாசகற்றொழில் செய்வதை இஸ்லாம் ஆதரிக்க வில்லை. மிக மிக அற்பமான தொழிலாக இருந்தாலும் கூட அது பிறரிடம் சென்று யாசகம் செய்வதைப் பார்க்கினும் சிறந்தது என்பதைப் பற்றி பல ஹதீஸ்கள் கூறப்பட்டிருக்கின்றன.

الَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَ

عَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ
عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

274. எவர்கள் தங்கள் பொருள்களை இரகசியமாகவும் பகிரங்கமாகவும் இரவிலும் பகலிலும் (தர்மத்திற்) செலவு செய்கின்றார்களோ - அவர்களுக்கு - அவர்கள் (நற்) கூலி அவர்களின் ரப்பிடத்தில் இருக்கிறது. மேலும், அவர்களுக்கு எவ்விதப் பயமுங் கிடையாது. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்.

ஒருவருக்கு ஒரு தேவை ஏற்பட்டு அத்தேவையை நிறைவேற்றுவதற்காகத் தர்மம் செய்ய வேண்டுமானால், அதற்காக இரவு என்றோ பகலென்றோ பார்க்காமலும், இரகசியமாகக் கொடுக்க வேண்டும் என்றோ பகிரங்கமாகக் கொடுக்க வேண்டுமென்றோ கவனியாமலும் எந்த நேரத்தில் சமயமும் சந்தர்ப்பமும் வாய்க்கிறதோ அந்த நேரத்தில் கொடுக்க வேண்டும் என்பதையும் அப்படிக் கொடுக்கும் தர்மம் இரகசியமாயினும், பகிரங்கமாயினும், இரவு நேரத்திலாயினும், பகற்பொழுதிலாயினும் இருந்தாலும் சரியே, எல்லாவற்றிற்கும் தக்க கூலி இருக்கிறது என்பதையும் இந்த ஆயத்து அறிவிக்கிறது.

தவிரவும், இந்த ஆயத்து ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் குறித்து அருளப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களிடமிருந்த 40 ஆயிரம் தீனார்கள் என்னும் தங்க நாணயங்களில் பத்தாயிரத்தை இரவிலும், மற்றொரு பத்தாயிரத்தைப் பகலிலும், இன்னொரு பத்தாயிரத்தை இரகசியமாகவும், மற்றொரு பத்தாயிரத்தைப் பகிரங்கமாகவும் தர்மம் செய்து விட்டார்கள்.

الَّذِينَ يَأْكُلُونَ الرِّبَا لَا يَقُومُونَ إِلَّا كَمَا يَقُومُ

الَّذِي يَتَخَبَّطُهُ الشَّيْطَانُ مِنَ الْمَسِّ ۚ ذَٰلِكَ بِأَنَّهُمْ
قَالُوا إِنَّمَا الْبَيْعُ مِثْلُ الرِّبَا ۗ وَأَحَلَّ اللَّهُ الْبَيْعَ وَحَرَّمَ
الرِّبَا ۚ فَمَنْ جَاءَهُ مَوْعِظَةٌ مِنْ رَبِّهِ فَانْتَهَىٰ
فَلَهُ مَا سَلَفَ وَأَمْرُهُ إِلَى اللَّهِ ۖ وَمَنْ عَادَ
فَأُولَٰئِكَ أَصْحَابُ النَّارِ ۖ هُمْ فِيهَا خَالِدُونَ ۝

275. எவர்கள், வட்டி (வாங்கி)த் தின்கின்றனரோ அவர்கள், ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்ததாக எழுவது போலல்லாது (இறுதித் தீர்ப்பு நாளில் வேறு விதமாய்) எழமாட்டார்கள். இதற்குக் காரணம் வியாபாரம் வட்டியைப்போல்தானே என்று நிச்சயமாக அவர்கள் கூறியதனாலேயாகும். ஆனால், அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி வட்டியை விலக்கி இருக்கிறான். ஆகவே எவனுக்குத் தன் ரப்பிடமிருந்து (வட்டி சம்பந்தமான இந்து உபதேசம் கிடைத்து அ(தன்படி வட்டி வாங்குவ)தைத் தவிர்த்துக் கொண்ட அவனுக்கு (வட்டி சம்பந்தமான இந்தச் சட்டம் வருவதற்கு முன் அவன் வாங்கி இருந்த வட்டித் தொகை) உரியதே. மேலும், இவனின் காரியம் அல்லாஹ்வின்பால் (ஒப்புவிக்கப் பெற்று) இருக்கிறது. இன்னும், எவர்கள் (இதற்குப் பின்னும் வட்டி வாங்குவதில்) மீண்டார்களோ அவர்கள் நரக வாசிகளே. அதில் அவர்கள் எப்பொழுதுமிருப்பர்.

பொருள் தேடுவதன் முக்கிய நோக்கம் உண்பதாக இருப்பதால் இந்த ஆயத்தில் இறைவன் வட்டி யுண்பவரைப் பற்றிக் கூறி இருக்கிறான். ஆகவே, வட்டி யுண்ணல் என்பதற்கு வட்டித் தொழில் செய்தல் என்பது கருத்தாகும்.

இலாபத்தைக் கொண்டு வருகிற கடன்களெல்லாம் வட்டியாகும். எனவே, ஒருவருக்கு ஒரு பொருளைத் திரும்பத் தரவேண்டும் என்று நிபந்தனை ஏற்படுத்தினால் அது வட்டியாகும்.

ஹளரத் இமாம் அபூஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஒருவருக்கு ஆயிரம் திர்ஹம் கடன் கொடுத்தார்கள். அந்த திர்ஹம்கள் கருப்பாக இருந்தன. பின்னர், கடன் வாங்கிய அந்த மனிதர் கடனைக் கொடுக்கும் போது ஆயிரம் திர்ஹம்களைத்தான் கொடுத்தார். ஆயினும், அவைகள் வெண்மை நிறமுள்ளனவாக இருந்தன. ஆதலால், இமாம் அபூ ஹனீஃபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அந்த திர்ஹம்களை வாங்க மறுத்து "என்னுடைய திர்ஹம்களுக்குப் பதிலாக இந்த வெள்ளை திர்ஹம்களை வாங்க நான் விரும்பவில்லை. ஏனெனில், இந்த வெள்ளை நிறம் எனது திர்ஹம்களுக்கு வட்டியாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன்" என்று கூறித் தங்களது திர்ஹம் போன்ற திர்ஹம் (வெள்ளிக் காசு)களையே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்.

ரிவாயத்து:- ஹளரத் இமாம் அபூஹனீஃபா ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் ஒரு வீட்டின் கதவைத் தட்டி விட்டு வெய்யிலில் நகர்ந்து நின்று கொண்டதை நான் பார்த்து, இவ்வாறு வெய்யலில் நகர்ந்து நின்று கொண்டதற்குக் காரணமென்ன வென்று அவர்களை விசாரித்தேன். அதற்கவர்கள் "இந்த வீட்டுக் காரர் எனக்குக் கடன் கொடுக்க வேண்டும். லாபத்தைக் கொடுக்கும் கடனைக் கொடுக்க வேண்டாம் என்று விலக்கப்பட்டிருப்பதால் அவரது சுவற்றின் நிழலை நான் உபயோகித்துக் கொள்ள மாட்டேன்" என்று கூறினார்கள் என்பதாக அபூபக்கர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி) கூறி இருக்கிறார்கள்.

எனவே, வட்டிக்குப் பணம் கொடுப்பதையும், வட்டிக்கு பணம் வாங்குவதையும், இதற்கு சாட்சிகளாக இருப்பதையும், இதனை எழுதுவதையும், இதற்கு வாசகம் சொல்வதையும் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் சபித்திருக்கிறார்கள்.

வட்டித் தொழிலுக்கு எழுபதுக்கு அதிகமான தலைவாயல்கள் இருக்கின்றன. அவற்றில் மிகவும் தாழ்ந்தது ஒரு மனிதன் தனது தாயிடம் செல்வதைப் போலிருக்கிறது. (அதாவது தனது தாயை விபச்சாரம் செய்த தோஷமுள்ளதாக இருக்கிறது) என்று நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

நியாயத் தீர்ப்பு நாளில் எல்லா ஜனங்களுக்கும் உயிர் பெற்றெழும்பும் போது வட்டித் தொழில் செய்தவர்களும் எழுந்திருப்பார்கள். ஆனால், வட்டி யுண்டதால் அவர்களது தொந்தி பெருத்து அவர்கள் எழுந்திருக்கச் சக்தி பெற மாட்டார்கள். ஆதலால், ஷைத்தான் பிடித்தவர்கள் எழுந்திருக்கும் போது தடுமாறி விழுவது போல அவர்கள் எழுந்திருக்கும் போது தடுமாறி விழுவார்கள். இதுதான் இவர்களது அடையாளம். இதனைப் பார்த்த மற்றவர்கள் இவர்களது இந்த அடையாளத்தின் மூலமாக இவர்களை வட்டித் தொழில் செய்தவர்கள் என்று தெரிந்து கொள்வார்கள்.

ரிவாயத்து:- நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜுக்குச் சென்றிருந்தபோது சிலரைப் பார்த்ததாகவும், அவர்கள் ஒவ்வொருவருடைய வயிறும் ஒரு பெரிய வீடு போல் பருத்திருந்ததாகவும், அவர்கள் நடந்து சென்ற போது அவர்களது வயிறுகள் அவர்களை ஒருபக்கமாக இழுத்துத்தள்ளியதாகவும், இவ்விதமாக அவர்கள் நரகத்திற்குச் செல்லும் வழியில் கடக்கும் போது ஃபிர்அவ்னுடைய கூட்டத்தார்கள் காலை நேரமும் மாலை நேரமும் பயித்தியம் பிடித்த ஒட்டகைகளைப்போல் வருவதைப் பார்த்து அவர்கள் பயந்து எழுந்தாலும் அவர்களது வயிறு அவர்களை எழுந்திருக்க விடாமல் தள்ளிவிடுவதால் அவர்களால் அவர்கள் மிதிக்கப் படுகிறார்கள் என்றும், இவர்கள் யார் என்று இவர்களைக் குறித்து வினவியபோது இவர்கள் வட்டி யுண்டவர்கள் என்பதாக ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதாகவும் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களது வயிற்றினுள் பாம்புகள் இருக்கக் கண்டதாகவும் மற்றொரு ரிவாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

எனவே, இந்த ஆயத்து அருளப்படுவதற்கு முன் வட்டித் தொழில் செய்து சம்பாதித்த பணத்தை இவ்விலக்கில் கட்டுப்படுத்த வில்லை. இது அருளப்பட்ட பின்னர், இதனைச் செய்தவருக்குத்தான் இங்கு கூறப்பட்ட தண்டனைகளும் பாவங்களும் சேரும்.

يَمْحَقُ اللّٰهُ الرِّبٰوا وَيُرْبِي الصَّدَقٰتِ ۗ وَاللّٰهُ لَا يُحِبُّ

كُلَّ كَفَّارٍ اَثِيْمٍ ۝

276. அல்லாஹ் வட்டியை அழித்துத் தர்மங்களை வளர்க்கின்றான், மேலும், (அல்லாஹ் வேண்டுமென்று) பாவம் செய்கிறவனான காஃபிர் ஒவ்வொருவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.

ஒரு பொருள் படிப்படியாக நாளடைவில் குறைந்து இறுதியாக இல்லாமற் போவதற்கு **அல்மிஹக்** என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. வட்டித் தொழில் செய்வதால் அதிக லாபம் கிடைப்பதாகத் தோன்றினாலும் அதனுடைய பரக்கத்தை அல்லாஹு தஆலா கொஞ்சங் கொஞ்சமாக மாற்றி விடுகிறான். ஆகவே, வட்டியிற் சேருகிற பணமும் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து இறுதியில் அழிந்து, அத்தொழில் செய்பவரது மக்களுக்கு அது உதவாமல் போய்விடுகிறது.

இதுபோல தர்மம் செய்வதால் அதனுடைய நன்மை இரட்டிப்பாக அதிகரிக்கச் செய்வதுடன் அந்தந்தப் பணத்திலும் பரக்கத்தை ஏற்படுத்துகிறான். ஆதலால், தர்மம் கொடுக்கப்பட்ட பொருள்கள் நாளடைவில் அபிவிருத்தியாகின்றன.

ஹதீஸ்:- உங்களில் ஒருவர் தமது குதிரைக் குட்டியை வளர்ப்பது போல அல்லாஹுதஆலா தர்மத்தை ஒப்புக் கொண்டு அதனை வளர்க்கின்றான் என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

ஹதீஸ்:- ஜக்காத்துக் கொடுப்பது பொருளைக் குறைத்து விடாது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

كَفَّارٍ **கஃப்பார்** என்பது காஃபிரானவர். அதாவது விலக்கப் பட்டவைகளை அனுமதிக்கப்பட்டவைகள் என்பதாக வற்புறுத்துபவர். இந்த ஆயத்தில் வட்டி வாங்குவது வியாபாரத்தைப் போல்தான்

இருக்கிறது என்று கூறி வட்டித்தொழிலை நிறுத்தாதிருப்பவரைக் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது.

اَثِيْمٍ **அதீமுன்** என்பதற்கு பாவம் செய்வோர் என்பது பொருள். ஆயினும், பாவமான காரியத்தைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருப்பவரைக் குறித்து இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَاَقَامُوا الصَّلٰوةَ وَاٰتَوُا الزَّكٰوةَ لَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ۝

277. நிச்சயமாக எவர்கள் விசுவாசங் கொண்டு நல்ல காரியங்களையும் செய்து தொழுகையையும் நிறைவேற்றி ஜக்காத்தையும் கொடுத்தார்களோ அவர்களுக்கு - அவர்களின் (நற்) கூலி அவர்கள் ரப்பிடத்திலிருக்கிறது. மேலும், அவர்களுக்கு (மறுமையில்) எவ்விதப் பயமும் கிடையாது; அவர்கள் கவலைப்படவுமாட்டார்கள்.

அஸ்ஸாலிஹாத்து அதாவது (இஸ்லாத்திற்கு) இணக்க மானவைகள் என்பதில் தொழுகை, ஜக்காத்து முதலிய சகல நற்கிரியைகளும் சேர்ந்திருக்கின்றன. ஆயினும், அவற்றில் இவ்விரண்டும் முக்கியமானவைகளாக இருப்பதால் இங்கு அவை இரண்டும் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டன.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَذَرُوْا مَا بَقِيَ مِنَ الرِّبٰوا اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۝

278. விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள், (உண்மை) விசுவாசிகளாக இருந்தால், அல்லாஹ்வை அஞ்சி வட்டியிலிருந்து

(இதுவரை வாங்கியதுபோக இனி) எஞ்சி இருப்பதை நீங்கள் (வாங்காது) விட்டு விடுங்கள்.

فَإِن لَّمْ تَفْعَلُوا فَأْذَنُوا بِحَرْبٍ مِّنَ اللَّهِ وَرَسُولِهِ ۖ وَإِن تُبْتُمْ فَلَكُمْ رُءُوسُ أَمْوَالِكُمْ لَا تَظْلِمُونَ وَلَا تُظْلَمُونَ ﴿٢٧٩﴾

279. நீங்கள் (அவ்வாறு) செய்யாவிட்டால் அல்லாஹ் வுடனும், அவன் ரசூலுடனும் போரிடுவதாகப் பிரகடனம் செய்யுங்கள். நீங்கள், (வட்டி வாங்குவதைவிட்டு) மீளுவீர்களாயின் உங்கள் மூலதனம் (அசல்) உங்களுக்கே. நீங்கள் அநியாயஞ் செய்யவும் மாட்டீர்கள். இன்னும் அநியாயஞ் செய்யப்படவும் மாட்டீர்கள்.

துகைப் என்பவருக்கு குறைஷியரில் ஒருவர் கடன் கொடுக்க வேண்டியதிருந்தது. அந்தக் கடன் கொடுக்க வேண்டிய தவணை வந்த போது அவர் வட்டியும் முதலும் வேண்டுமென்று கேட்டார். அப்போது இந்த ஆயத்துகள் அருளப்பட்டன. "அல்லாஹ்வுடனும் அவன் ரசூலுடனும் போர்ப் பிரகடனம் செய்யுங்கள்" என்ற வசனம் அருளப்பட்டபோது அவர் "நம்மால் யுத்தம் செய்வதற்குச் சக்தியில்லை" என்று கூறி அசல் முதலை மட்டும் வாங்கிக் கொண்டார்.

எனவே, வட்டித்தொழில் செய்பவர் படை பலமில்லாதவராக இருந்தால் அவரைத் தண்டித்து, அவர் அதனை விட்டு விலகும் வரை சிறையிலிட வேண்டும். படைபலமுள்ளவராக இருந்தால் அந்தந்தக் காலத்திலுள்ள முஸ்லிம் அரசர் அவருடன் யுத்தம் புரிய வேண்டும்.

وَإِن كَانَ ذُو عُسْرَةٍ فَنَظِرَةٌ إِلَىٰ مَيْسَرَةٍ ۚ وَأَن تَصَدَّقُوا خَيْرٌ لَّكُمْ ۖ إِن كُنتُمْ تَعْلَمُونَ ﴿٢٨٠﴾

280. மேலும், (கடன் பட்டவர்களில்) கஷ்டத்தையுடையவர்கள் இருந்தால் (அவர்களுக்கு) வசதி ஏற்படும்வரை (கடனைக் கேட்பதை நிறுத்தி) எதிர்பார்க்க வேண்டும். ஆனால், (அவர்களுக்கு) நீங்கள் (அந்தக் கடனைத்) தர்மஞ் செய்துவிடுவது, நீங்கள் அறிந்தவர்களாக இருப்பின் அது உங்களுக்கு (மிகவும்) நன்மையேயாகும்.

கடன் பட்டவர் அந்தத் தொகையைக் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பாராயின் அவருக்கு அக்கஷ்டம் நீங்கி வசதி வரும் வரையில் தவணை கொடுக்க வேண்டும். இப்படி தவணை கொடுக்கும் வரை இந்தத் தொகையை ஸதக்கா கொடுத்த நன்மை அவருக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

ஹதீஸ்:- கஷ்டப்படுபவருக்குத் தவணை கொடுப்பவரை அல்லது அக்கடனை மன்னித்து வாங்காமல் விட்டவரை நியாயத் தீர்ப்பு நாளின் கஷ்டத்தை விட்டு அல்லாஹ் தஆலா விடுதலை யளிப்பான்.

ரிவாயத்து:- சுவர்க்கத்தின் தலைவாயலில் கடனுக்கு பதினெட்டு நன்மையும், தர்மத்திற்கு பத்து நன்மையும் அளிக்கப்படும் என்று எழுதி யிருப்பதைக் கண்டு இவ்விதம் ஏன் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டதற்கு "தர்மம் சில சமயங்களில் தேவை யில்லாதவர்களுக்கும் கொடுக்கப்பட்டு விடும். ஆனால், கடன் தேவையுள்ளவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும் என்று பதில் சொல்லப்படுவது போல் உமாமத்துல் பாஹிலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கனவு கண்டார்கள்" என்பதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- அல்லாஹ் தஆலாவின் சன்மார்க் கத்திற்காக யுத்தம் செய்யும் பொருட்டு தனது உணவுக்காக கடன் வாங்குதல், ஏழையாகவுள்ள ஒரு பிரேதத்தை அடக்கஞ் செய்வதற்காகக் கடன் வாங்குதல் திருமணத்துக்காகக் கடன் வாங்குதல் ஆகிய இம்மூவகைக் கடன்களையும் அடைப்பதற்கான வசதிகளை இறைவன் ஏற்படுத்திக் கொடுப்பான்.

ஹதீஸ்:- கடனைத் திரும்பக் கொடுத்துவிட வேண்டுமென்ற உறுதியான எண்ணத்துடன் ஒருவர் கடன் வாங்குவாராயின் அவரைப் பாதுகாப்பதற்காகவும், அவரது கடன் அடைபடும் வரை அவருக்காக துஆச் செய்வதற்காகவும் மலக்குகள் ஏற்படுத்தப்படுகிறார்கள் என்பதாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது எனவே, கடனை அடைக்கும் சக்தி வந்தவுடன் அதனைக் கொடுத்து விடுவதில் மிகத் தீவிரமாக இருக்க வேண்டும். கடனைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தவணை வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஏனெனில் அல்லாஹு தஆலாவுடைய சன்மார்க்கத்திற்காக ஷஹீதாகுவது எல்லாவற்றிற்கும் பரிகாரமாக இருக்கிறது. ஆனால், கடனைத் தவிர என்பதாக ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அறிவித்ததாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

وَاتَّقُوا يَوْمًا تُرْجَعُونَ فِيهِ إِلَى اللَّهِ ۖ ثُمَّ تُوَفَّىٰ كُلُّ
نَفْسٍ مَا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ ۝

281. இன்னும், நீங்கள் ஒரு நாளை பயந்து கொள்ளுங்கள். அதில் அல்லாஹ்வின்பால் நீங்கள் மீட்டப்படுவீர்கள். பின்பு ஒவ்வொருவருக்கும் (அவரவர்) சம்பாதித்ததை (ப் பிரதி செய்வதன் மூலம்) நிறைவேற்றப் படும். இன்னும் அவர்கள் அநீதி செய்யப்படமாட்டார்கள்.

ரிவாயத்து:- இந்த ஆயத்துதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கடைசியாக அருளப்பட்டது. இந்த ஆயத்து அருளப்பட்ட பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏழு நாட்களுக்குப் பின் தமது ரப்பைச் சந்தித்து கொண்டார்கள் என்பதாக ஹளரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஒன்பது நாட்கள் வரை உயிருடன் இருந்தார்கள். என்றும், இருபத்தோரு நாட்கள் வரை உயிருடன் இருந்தார்கள் என்றும், எண்பத்தோரு நாட்கள் வரை உயிருடன்

இருந்தார்கள் என்றும், மூன்று நாழிகை நேரம் உயிருடன் இருந்தார்கள் என்றும் ரிவாயத்துச் செய்யப்படுகிறது. மேலும், ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது கட்டளைப்படி இந்த ஆயத்து சூரத்துல் பகராவில் அதாவது இந்த அத்தியாயத்தில் 280 வது ஆயத்திற்குப் பிறகு வட்டி சம்மந்தமாகவும், கடன் சம்மந்தமாகவும் சொல்லப்பட்டுள்ள ஆயத்துகளுக்கிடையில் வைக்கப்பட்டது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا إِذَا
تَدَايَنْتُمْ بِدَيْنٍ إِلَىٰ أَجَلٍ مُسَمًّى فَاكْتُبُوهُ ۚ
وَلْيَكْتُبْ بَيْنَكُمْ كَاتِبٌ بِالْعَدْلِ ۚ وَلَا يَأْبَ
كَاتِبٌ أَنْ يَكْتُبَ كَمَا عَلَّمَهُ اللَّهُ ۚ فَلْيَكْتُبْ وَلْيُمْلِلِ
الَّذِي عَلَيْهِ الْحَقُّ وَلْيَتَّقِ اللَّهَ رَبَّهُ وَلَا يَبْخَسْ
مِنْهُ شَيْئًا ۚ فَإِنْ كَانَ الَّذِي عَلَيْهِ الْحَقُّ سَفِيهًا
أَوْ ضَعِيفًا أَوْ لَا يَسْتَطِيعُ أَنْ يُمِلَّ هُوَ فَلْيُمْلِلْ
وَلِيُّهُ بِالْعَدْلِ ۚ وَاسْتَشْهِدُوا شَهِيدَيْنِ مِنْ
رِجَالِكُمْ ۖ فَإِنْ لَمْ يَكُونَا رَجُلَيْنِ فَرَجُلٌ وَامْرَأَتَانِ
مِمَّنْ تَرْضَوْنَ مِنَ الشُّهَدَاءِ أَنْ تَضِلَّ إِحْدَاهُمَا
فَتُذَكِّرَ إِحْدَاهُمَا الْأُخْرَىٰ ۚ وَلَا يَأْبَ الشُّهَدَاءُ
إِذَا مَا دُعُوا ۚ وَلَا تَسْأَمُوا أَنْ تَكْتُبُوهُ صَغِيرًا أَوْ كَبِيرًا
إِلَىٰ أَجَلِهِ ۚ ذَٰلِكُمْ أَقْسَطُ عِنْدَ اللَّهِ وَأَقْوَمُ

لِلشَّهَادَةِ وَأَدْنَىٰٓ أَلَّا تَرْتَابُوٓا۟ إِلَّآ أَن تَكُونَ
تِجَٰرَةً حَاضِرَةً تُدِيرُونَهَا بَيْنَكُمْ فَلَيْسَ
عَلَيْكُمْ جُنَاحٌ أَلَّا تَكْتُبُوهَا ۗ وَأَشْهِدُوٓا۟ إِذَا تَبَايَعْتُمْ ۚ
وَلَا يُضَآرَّ كَاتِبٌ وَلَا شَهِيدٌ ۚ وَإِن تَفْعَلُوا۟
فَإِنَّهُۥ فُسُوقٌۢ بِكُمْ ۗ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۖ وَيُعَلِّمُكُمُ ٱللَّهُ ۗ
وَٱللَّهُ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌ ۝

282. விசுவாசங் கொண்டவர்களே! நீங்கள் குறிப்பிட்ட ஒரு தவணை வரை கடன் கொடுத்தால் அதை நீங்கள் எழுதிக் கொள்ளுங்கள். (கடன் விபரத்தை) எழுதுபவர் உங்களுக்கிடையே நீதியுடன் எழுதட்டும். மேலும், எழுதுபவர் அல்லாஹ் அவருக்கு அறிவித்ததேபோல் (அதை) எழுதுகிறதற்கு மறுக்கக் கூடாது. எனவே, அவர் (நீதியுடன்) எழுத வேண்டும். ஆனால் எவர் மீது (இதன்) உரிமை இருக்கிறதோ அவர் வாசகத்தைச் சொல்ல வேண்டும். இன்னும், அவர் தன்னுடைய ரப்பை அஞ்சிக் கொள்ளட்டும். அதிலிருந்து எதையும் குறைக்கக் கூடாது. ஆகவே, எவருக்கு அதன் உரிமை இருக்கிறதோ அவர் மந்த அறிவற்றவராகவோ, அல்லது பலஹீனராகவோ அல்லது அவரே வாசகஞ் சொல்லச் சக்தியற்றவராகவோ இருந்தால் அவருடைய காரியஸ்தர் நீதத்துடன் வாசகஞ் சொல்ல வேண்டும். மேலும், ஆடவர்களிலிருந்து இரண்டு சாட்சிகளை உங்கள் சாட்சிகளாக ஏற்படுத்துங்கள். ஆனால், இரண்டு ஆடவர்கள் (கிடைக்க) இல்லையானால் சாட்சிகளிலிருந்து நீங்கள் இஷ்டப்பட்டவர்களில் ஒரு ஆடவனும், இரண்டு பெண்களும் அவ்விருவருள் ஒருவள் மறந்து விட்டால், அவ்விருவருள் ஒருவள் மற்றவளுக்கு ஞாபகமூட்டு வதற்காக (நியமிக்கப்படவேண்டும்). இன்னும், சாட்சிகள் அழைக்கப் படும்போது (சாட்சியங்கூற) மறுக்கக்கூடாது. இன்னும், (கடன் தொகை)

கொஞ்சமாக இருந்தாலும் அல்லது மிகுதமாக இருந்தாலும் அதைத் தவணை வரை எழுதிக் கொள்ள நீங்கள் சோர்வடைய வேண்டாம். இது அல்லாஹ்விடம் மிக நீதியாகவும், சாட்சியத்திற்கு மிக பலமாகவும், நீங்கள் (கடன் சம்பந்தமாய்ச்) சந்தேகங் கொள்ளாதிருப்பதற்கு மிக நெருங்கியதாகவும் இருக்கிறது. (ஆனால்) உங்களுக்கிடையில் கொடுக்கல் வாங்கல் செய்யும்படியான ரொக்க வியாபாரத்தைத் தவிர. எனவே, இதை நீங்கள் எழுதாமலிருந்து விடுவது உங்கள் மீது குற்றமில்லை; மேலும், நீங்கள் விற்பனை செய்தால் (அதற்கு) சாட்சி வையுங்கள்; ஆனால், எழுதுபவரும் சாட்சியும் தீங்கு செய்யக்கூடாது. மேலும் நீங்கள் (அவ்வாறு) செய்தால் அது நிச்சயமாக உங்களுக்குப் பாவமாகும்; எனவே, அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறான். தவிர, அல்லாஹ் எல்லா பொருட்களையும் நன்கு அறிந்தவன்.

இந்த ஆயத்துதான் திருக்குர்ஆனிலுள்ள எல்லா ஆயத்துகளிலும் மிகவும் நீண்ட ஆயத்தாகவும், மிகவும் விபரமாக விஷயத்தை விளக்குவதாகவும் இருக்கிறது. எனவே, அடியார்களுக்கு இடையிலுள்ள பாத்தியதைகளைக் கவனித்து அவற்றை ஒழுங்காக நிறைவேற்றுவதும், மிகவும் அவசியமென்பது இவ்வுலகத்தினுடையவும் மார்க்கத்தினுடையவும் காரியங்கள் ஒழுங்காக நிகழுவதற்கு ஆதாரமாகவுள்ள பொருளில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதும் இதிலிருந்து நன்கு தெரியவருகிறது. மேலும், அடியார்களது வர்த்தகம் கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றிலும்கூட அவன் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்ததிலிருந்து தனது அடியார்கள் பால் அவனுக்கு எவ்வளவு கிருபையும் அன்பும் இருக்கிறது என்பது வெளியாகிறது. திருக்குர்ஆனில் சொல்லப்பட்டபடி கடன் கொடுப் போரும், கடன் வாங்குவோரும், சாட்சியம் சொல்வோரும், எழுதுவோரும் நடந்து கொள்வார்களாயின் உலகில் பணம் சம்மந்தமான தாவாவும், வழக்கும், விவகாரமும், மனத்தாங்கலும் ஏற்படுவதற்கு இடமே இல்லை.

وَإِن كُنتُمْ عَلَىٰ سَفَرٍ وَلَمْ تَجِدُوا۟ كَاتِبًا فَرِهَٰنٌ

مَّقْبُوضَةٌ ۖ فَإِنْ أَمِنَ بَعْضُكُم بَعْضًا فَلْيُؤَدِّ الَّذِي اؤْتُمِنَ أَمَانَتَهُ وَلْيَتَّقِ اللَّهَ رَبَّهُ ۗ وَلَا تَكْتُمُوا الشَّهَادَةَ ۚ وَمَن يَكْتُمْهَا فَإِنَّهُ آثِمٌ قَلْبُهُ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ عَلِيمٌ

283. மேலும், நீங்கள் பிரயாணத்தில் இருந்து, எழுதுபவரை நீங்கள் பெற்றுக் கொள்ளாவிட்டால் ஒப்புவிக்கப்பட்ட ஈடு (இருக்கவேண்டும்). ஆகவே, உங்களிற் சிலர், சிலரை நம்பி (ஈடு வாங்காமல்) இருந்தால் (தம்மீது நம்பிக்கை வைத்து) அவர் (கொடுத்த) கடனை நம்பப்பட்டவர் நிறைவேற்றிவிடவேண்டும். மேலும், தன்னுடைய ரப்பாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளவும். இன்னும், நீங்கள் சாட்சியத்தை மறைக்காதீர்கள். மேலும், எவன் அதை மறைக்கின்றானோ அவன் இருதயம் நிச்சயமாகப் பாவியாகி விடுகிறது. இன்னும், அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிபவன்.

“தமது சொந்த ஊரைவிட்டுப் பிரயாணம் சென்றிருக்கும் போது, ஒருவருக்கொருவர் கடன் கொடுக்கவும் வாங்கவும் நேரிட்டு, கடன் பத்திரம் எழுதுபவர் அல்லது எழுதிக் கொள்வதற்குரிய காகிதம் மை முதலியவைகள் கிடைக்கவில்லையானால், கடன் கொடுப்பவருக்குக் கடன் வாங்குபவர் ஏதேனும் பொருட்களை அடகு வைக்க வேண்டும். கடன் வாங்குபவர் திரும்பக் கொடுத்து விடுவார் என்ற நம்பிக்கையின் பேரில் கடன் கொடுப்பவர் அடகு வாங்காமலும், எழுதிக் கொள்ளாமலும் கடன் கொடுத்தால், கடன் வாங்கியவர் தன் மீதுள்ள நம்பிக்கைக்குப் பங்கமில்லாமல் அதனை கொடுத்து, நிறைவேற்ற வேண்டும். இது சம்மந்தமாக தாவா வேற்பட்டால் சாட்சிகள் சாட்சியம் சொல்ல மறுக்கவோ அல்லது மறைக்கவோ கூடாது என்பது இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விதிகளாகும்.

சாட்சிகள் சாட்சியத்தை மறைத்தால் குற்றவாளிகளாவார்கள். இப்படி இருக்க இந்த ஆயத்தில் அவரது இருதயம் குற்றவாளியாக இருக்கிறது என்று கூறி இருப்பது, அவர் நிச்சயமாகக் குற்றவாளியாக இருக்கிறார் என்றும், அவர் குற்றவாளி என்பதில் எவ்விதச் சந்தேகமுமில்லை என்றும் வற்புறுத்துவதற்காகவே யாகும். ஏனெனில், ஒருவர் கூறும் ஒரு காரியத்தைப் பிறர் சந்தேகம் கொள்ளாமல் நம்ப வேண்டும் என்று நினைக்கும் போது அவர் அவ்விஷயத்தைக் கூறி “நான் இதனை என் கண்ணால் பார்த்தேன், என் காதால் கேட்டேன்” என்று கூறுவது சகஜம். இதுபோல தெரிந்த சாட்சியத்தை மறைப்பதும் மறுப்பதும் இருதயத்திற்குச் சம்மந்தப்பட்டது. ஆதலால் இந்த ஆயத்தில் **“அவருடைய இருதயம் பாவியாகி விடுகிறது”** என்று சொல்லப்பட்டது.

ரிவாயத்து:- பெரும் பாவங்களில் மிகவும் பெரியவைகள், அல்லாஹு தஆலாவுக்கு இணைவைத்தலும், பொய் சாட்சியம் சொல்லுதலும், சாட்சியத்தை மறைத்தலுமாகும் என்று ஹளரத் அப்துல்லாஹிப்னு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் பிரயாணத்திலிருப்பவர்கள் எழுதிக் கொள்ள முடியவில்லையானால், அடகு வைத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விதி, பிரயாணத்திலுள்ளவர்கள்தான் இப்படிச் செய்ய வேண்டும், உள்ளூரில் இருப்பவர்கள் இப்படிச் செய்யக்கூடாது என்று நிர்ப்பந்தப் படுத்தும் தோரணையில் அருளப்பட்டதன்று. உள்ளூரில் இருப்பவரும் பிரயாணத்தில் இருப்பவரும் அடகு வைத்துக் கொள்ளலாம். கடன் பத்திரம் எழுத வசதியில்லாமல் போவதற்கு பிரயாணம் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாக இருப்பதால், அந்தச் சந்தர்ப்பத்தை மட்டும்தான் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

لِّلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ ۗ وَإِن تُبْدُوا
مَا فِي أَنفُسِكُمْ أَوْ تُخْفُوهُ يُحَاسِبْكُم بِهِ اللَّهُ

فَيَغْفِرُ لِمَن يَشَاءُ وَيُعَذِّبُ مَن يَشَاءُ ۗ وَاللَّهُ عَلَىٰ
كُلِّ شَيْءٍ قَدِيرٌ

284. வானங்களில் உள்ளதும், பூமியில் உள்ளதும் அல்லாஹ்வுக்கே உரியன. இன்னும், உங்கள் மனதிலிருப்பதை நீங்கள் வெளியாக்கினாலும் அல்லது அதை மறைத்துக் கொண்டாலும் (அது கெடுதலுடையதாக இருந்தால்) அதைக் கொண்டு அல்லாஹ் உங்களைக் கேள்வி கேட்பான். ஆகவே, தான் நாடியவர்களை மன்னித்துத் தான் நாடியவர்களை வேதனை செய்வான். மேலும், அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன்.

அன்ஃபுஸ் என்பது **நஃப்ஸ்** என்பதன் பன்மைச் சொல். **நஃப்ஸ்** என்பதற்கு மூச்சு, ஸ்தூலம், இருதயம், ஆவி, உயிர் உடலும் உயிரும் கூடியது ஆக பல பொருள்களுள. இந்த ஆயத்தில் இது இருதயத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இருதயங்களில் உள்ளது என்றதிலிருந்து மனதில் ஏற்பட்டிருக்கும் உறுதி, எண்ணம் ஆகியவைகளாகும். ஆனால், அந்த எண்ணப்படி செய்ய வேண்டும் அல்லது சொல்ல வேண்டும். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று நிகழ்ந்தால்தான் இருதயத்தில் தோன்றிய எண்ணத்திற்கும் பாவம் ஏற்படும். சொல்லாலோ செயலாலோ அது நடைபெற வில்லையாயின் அதற்காகப் பாவமில்லை. ஏனெனில், இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் "நிச்சயமாக அல்லாஹ் எனது உம்மத்திற்கு அவர்களது இருதயங்களில் உண்டானவைகளை அவர்கள் சொல்லாமல் அல்லது செய்யாமல் இருக்கும் வரை மன்னித்திருக்கிறான்" என்பதாகக் கூறி இருக்கிறார்கள்.

ஆனால், ஒருவர் செய்யும் பாவமான காரியத்தில் திருப்தி கொள்வது பாவமாகும். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "ஒருவர் ஒரு பாவத்தின் போது

உடனிருந்து, அதனை அவர் வெறுத்திருப்பாராயின் அவர் அந்தப் பாவமான காரியம் செய்யப்படும் போது அங்கில்லாதிருந்தவரைப் போலவே இருக்கிறார். ஆனால், ஒருவர் ஒரு பாவமான காரியத்தைச் செய்யும்போது இல்லாமலிருந்து, அப்பாவத்தைப் பற்றித் திருப்தியடைவாராயின் அவர் அங்கு இருந்தவரைப் போலாகி விடுகிறார்" என்று கூறி இருக்கிறார்கள்.

மற்றொரு ஹதீஸில் "ஒரு சமூகத்தார் செய்யும் கிரியைகளை ஒருவர் நேசிப்பாராயின் அந்தச் சமூகத்தாரின் கூட்டத்திலேயே அவர் நியாயத் தீர்ப்பின் போது எழுப்பப்பட்டு, அவர்களுக்குக் கேள்வி கணக்குக் கேட்பது போல் கேள்வி கணக்குக் கேட்கப்படுவார். ஆனால், அவர் அந்தக் கிரியைகளைச் செய்யாமலிருந்தாலும் சரியே" என்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

آمَنَ الرَّسُولُ بِمَا أُنزِلَ إِلَيْهِ مِن رَّبِّهِ وَالْمُؤْمِنُونَ ۚ
كُلٌّ آمَنَ بِاللَّهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لَا نُفَرِّقُ
بَيْنَ أَحَدٍ مِّن رُّسُلِهِ ۚ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا ۖ
غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ

285. தன்னுடைய ரப்பிடமிருந்து தனக்கு அருளப்பட்டதை இந்தத் தூதரும் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும்) விசுவாசிகளும் விசுவாசிக்கின்றனர். (இன்னும் அவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனது அமரர்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் விசுவாசிக்கிறார்கள். "அவனுடைய தூதர்களுக்கிடையில் எவரிடத்திலும் நாம் பாகுபாடு செய்யமாட்டோம் (என்று கூறுகின்றனர்). இன்னும் நாங்கள் செவிமடுத்தோம்; இன்னும், நாங்கள் கீழ்ப்படிந்தோம்; எங்கள் ரப்பே! உன்னுடைய பாவமன்னிப்பை

(வேண்டுகின்றோம்) மேலும், உன்னளவிலேயே (எங்களது) மீளும் இடமிருக்கிறது'' என்று (அவர்கள்) கூறினர்.

முஸ்லிம்கள் நபிமார்கள் அனைவரையும் ஒப்புக் கொண்டு அவர்களை கௌரவிப்பது போல யூதரும் கிறிஸ்துவரும் கௌரவிப்பதில்லை. அவர்கள் நபிமார்களிற் சிலரை அளவிற்கதிகமாக கௌரவித்துச் சிலரை நபி என்பதாக அங்கீகரிப்பது கூட இல்லை.

இந்த ஆயத்து அருளப்பட்டபோது ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து அல்லாஹு தஆலா தங்களையும் தங்களது உம்மத்துகளையும் புகழ்ந்து கூறியுள்ளான். ஆதலின், அவனிடம் தாங்கள் வேண்டியதைக் கேட்டால் அவன் அதனைக் கொடுப்பான் என்று கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''எங்களது ரப்பே! உனது மன்னிப்பை (நாங்கள் கேட்கிறோம்) இன்னும் உன்னிடமே (நாங்கள் மரணத்திற்குப் பிறகு) மீளுதலிருக்கிறது'' என்று கூறினார்கள்.

''மேலும், உங்களது இருதயங்களில் உள்ளதை நீங்கள் வெளிப்படுத்தினாலும் அல்லது அதனை நீங்கள் மறைத்தாலும் உங்களிடத்தில் அதனைப் பற்றி அவன் (கேள்வி) கணக்கு கேட்பான்'' என்ற வசனம் அருளப்பட்டபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது தோழர்களான ஸஹாபிகளுக்கு இது கடுமையான காரியமாகத் தோன்றிற்று. ஆகவே, அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து ''அல்லாஹு தஆலாவின் தூதரே! எங்களது சக்திக்கு இயலத்தக்க கிரியைகளை அதாவது தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜிஹாது முதலியவற்றை எங்களுக்கு ஏற்படுத்துங்கள். தங்களுக்கு அருளப்பட்டுள்ள இந்த ஆயத்து எங்களால் இயலாதது என்பதாகக் கூறினார்கள். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபிகளைப் பார்த்து ''உங்களுக்கு முன்னுள்ள வேதக்காரர்கள் கேட்டுக் கொண்டோம். ஆனால் மாறுசெய்தோம் என்று கூறியதுபோல நீங்களும் கூற விரும்புகிறீர்களா?'' என்று வினவினார்கள். அதற்கு

அவர்கள் ''அன்று, நாங்கள் கேட்டுக் கொண்டோம். இன்னும் நாங்கள் கீழ்ப்படிந்தோம். எங்களது றப்பே! உன்னுடைய மன்னிப்பை (நாங்கள் விரும்புகிறோம்) இன்னும் உன்னிடத்திலேயே மீளுதலிருக்கிறது'' என்று கூறினார்கள். அப்போது இறைவன் இந்த ஆயத்தை அருளினான். பிறகு இதற்கடுத்த 286 வது ஆயத்தை அருளினான்.

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ۭ لَهَا مَا كَسَبَتْ
وَعَلَيْهَا مَا اكْتَسَبَتْ ۭ رَبَّنَا لَا تُؤَاخِذْنَآ اِنْ
نَّسِيْنَآ اَوْ اَخْطَاْنَا ۚ رَبَّنَا وَلَا تَحْمِلْ عَلَيْنَآ
اِصْرًا كَمَا حَمَلْتَهٗ عَلَي الَّذِيْنَ مِنْ قَبْلِنَا ۚ
رَبَّنَا وَلَا تُحَمِّلْنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعْفُ
عَنَّا ۪ وَاغْفِرْ لَنَا ۪ وَارْحَمْنَا ۪ اَنْتَ مَوْلٰىنَا
فَانْصُرْنَا عَلَي الْقَوْمِ الْكٰفِرِيْنَ ۞

286. அல்லாஹ் எந்த மனிதனையும் அவனுடைய சக்திக்கு மேல் கஷ்டப்படுத்துவதில்லை. (நன்மையிலிருந்து) அவன் சம்பாதித்தது அவனுக்குச் சாதகமாக இருக்கிறது. இன்னும், (தீமையிலிருந்து) அவன் சம்பாதித்தது அவனுக்குப் பாதகமாக இருக்கிறது. ''எங்கள் ரப்பே! (உனது கட்டளையில் சிலதை) நாங்கள் மறந்து விட்டால் அல்லது நாங்கள் தவறிழைத்து விட்டால் (அதற்காக) எங்களை (க்குற்றம்) பிடிக்காதிருப்பாயாக. எங்கள் ரப்பே! இன்னும் எங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது நீ பளுவை ஏற்படுத்தியதுபோல் எங்கள் மீதும் அதைச் சுமத்தாதிருப்பாயாக. எங்கள் ரப்பே! இன்னும் எதன் மீது எங்களுக்குச் சக்தி இல்லையோ அதை எங்களுக்குச் சுமத்தாதிருப்பாயாக. இன்னும், எங்கள் மீதுள்ள (பாவத்)தை அழித்திடுவாயாக. இன்னும், எங்களின் (பாவங்களைப்)

பொறுத்தருள்வாயாக. இன்னும் எங்களுக்குக் கிருபை செய்வாயாக; நீதான் எங்கள் எஜமான்; ஆதலால் நிராகரிப்போரான கூட்டத்தினருக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்தருள்வாயாக" (என்று பிரார்த்தனை புரிவீர்களாக).

இதற்கு முன்னுள்ள ஜனங்களிடம் மறதியாகவும், தவறாகவும் செய்த குற்றங்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டு வந்தது என்பது இதிலிருந்து தெரியவருகிறது. இந்த துஆவிற்குப் பின் இறைவன் மறதியையும், தவறுதலாக நிகழும் குற்றத்தையும் பற்றிக் கேள்வி கணக்குக் கேட்டுத் தண்டிப்பதை மன்னித்து விட்டான். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "எனது உம்மத்தை விட்டு, அவர்களால் தவறுதலாக நிகழ்ந்த குற்றமும், மறதியும் அவர்கள் வெறுப்பதும் அகற்றப்பட்டு விட்டன" என்று கூறி இருக்கிறார்கள்.

முற்காலத்திலிருந்த நபிமார்களின் உம்மத்துகளில் சிலருக்கு ஒரு இரவிலும் பகலிலுமாக ஐம்பது நேரத்துத் தொழுகைகள் விதிக்கப்பட்டிருந்தன. அவர்களில் நோன்பாளி இரவு நேரங்களில் தூங்கச் சென்றால் அப்புறம் எழுந்திருந்து உண்ணக்கூடாது, மஸ்ஜிது தவிர வேறு இடங்களில் தொழுகையை நிறைவேற்றக் கூடாது. தண்ணீரைத் தவிர வேறு பொருட்களைக் கொண்டு சுத்தம் செய்யக் கூடாது, துணியில் அசுத்தம் பட்ட இடத்தை வெட்டிவிட வேண்டும், தவ்பாச் செய்ததற்காக குற்றவாளிகள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்ள வேண்டும், செல்வந்தர்கள் நாலிலொரு பங்கை ஜக்காத்தாகக் கொடுக்க வேண்டும் என்பன போன்ற விதிகள் முற்காலத்திலிருந்த உம்மத்துகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பொருட்டால் அவர்களது உம்மத்துகளாகிய நமக்கு இக்கடுமையான விதிகள் தளர்த்தப்பட்டன.

அஃப்வு என்பதற்கு அழித்தல் என்பதும் **மஃப்ரான்** என்பதற்கு மறைத்தல் என்பதும் இயற்பொருள்கள். ஆயினும் பாவத்தை மன்னித்தல் என்பதற்கு இவ்விரு பதங்களும் உபயோகிக்கப் படுவதுண்டு. இந்த ஆயத்தில் இவ்விரு பதங்களும் உபயோகிக்கப்

பட்டிருப்பதால் இப்பதங்களுக்கு இயற்பொருள்கள் செய்யப் பட்டிருக்கின்றன. **தைஸீர்** என்ற கிரந்தத்திலும் இவ்விரு பதங்களுக்கும் இந்த இடத்தில் இயற்பொருள்களே செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, அல்லாஹு தஆலா பாவங்களை அழித்து விடுவது மல்லாமல், அந்தப் பாவங்களை மற்றவர்கள் அறியாமல் மறைத்து விடவேண்டும் என்பது கருத்தாகும்.

இரண்டாவது சூரத்து முற்றுப் பெற்றது.